THE SWADESAMITRAN WEEK

சுதேசமித்திரன்

ஆக. 27, 1950 48-பக்கங்கள் விலை அணா

831

மதுரை	...	நியூ ஸினிமா	தூத்துக்குடி	...	ஜோசப்
கோயமுத்தூர்	...	கர்னடிக்	திண்டுக்கல்	...	சக்தி
சேலம்	...	அம்பிகா	ஈரோடு	...	ஸ்ரீ கிருஷ்ண
திருச்சி	...	ராஜா	புதுச்சேரி	...	கமர்ஷியல்
தஞ்சாவூர்	...	நியூ டவர்			நியூடோன்
காரைக்குடி	...	நடராஜா	கடலூர் N. T.	...	நியூ சினிமா
கும்பகோணம்	...	ராஜா	புதுக்கோட்டை	...	வெஸ்ட் & ராஜா
வேலூர்	...	தினகரன்	விழுப்புரம்	...	சீதாராம்
காஞ்சீவரம்	...	ராஜா	சிதம்பரம்	...	வடுகநாதன்
விருதுநகர்	...	நியூ முத்து	மாயவரம்	...	சுந்தரம்

கீழ்க்கண்ட இடங்களில் சீக்கிரம் திரையிடப்படும்.

கோபிசெட்டிபாளையம் ... நாகையா :: பரமக்குடி ... ஜெய் ஹிந்த்.

ஸ்ரீ சுகுமார் புரொடக்ஷன்ஸ்

மைலாப்பூர் — மதராஸ் 4.





வாழிய செந்தமிழ் — **சுதேசமித்திரன் வாரப்பதிப்பு** — வாழக நற்றமிழர்

Vol XXI] விக்ருதிஹு ஆவணிமீ 11உ ★ 1950-ஹு ஆகஸ்ட்மீ 27உ No 30

பொருளடக்கம்

சென்னை-600 008 19858

நிகழ்ச்சி சித்திரம்	தாணு	2
வேதனை	வாசவன்	5
வீண் வினை	ஸ்ரீமதி பத்மா நாராயணன்	8
கலாமண்டபம்		11
தேர்த்தட்டு வார்த்தை	வாரன்	15
வாழ்க்கைச் சுழல் (தொடர் கதை)	இந்து	17
ஹிந்தி பாடங்கள்	பண்டிதஜீ	22
நவரஸ நந்தவனம்	கனல்	27
மூன்று காதல்	ஸோணு	31
அற்புத நாடு கண்டேன்	ரா. ஸ்ரீ	34
சிறுவர் பகுதி	எஸ். ரங்கராஜன்	35
அநுபவரேகாசாஸ்திரம்	ரொமேஷ் கே. சாஸ்திரி	40
குடும்ப வைத்தியம்	குச்சா மாமா	42
உடல் நலப் பயிற்சி	ஹடயோகி லக்ஷ்மண சாண்டோ	44
விலை வாசி		46
ஸங்கீத பாரிஜாதம்	பண்டித கிருஷ்ணமாச்சார்யா	47

"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன அனைத்தும் கற்பனையே, அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல

உணவும் டில்லி முடிவும்

உணவு நிலைமைபற்றி விவாதிக்க இதுவரை டில்லியில் நடந்த மகாநாடுகள் பல. எனினும் காரியாம்சத்தில் அவற்ருல் ஏற்பட்ட பலன் ஒன்றுமில்லை. ஆனல் இம்முறை தலைநகரில் நடந்தேறிய முதன் மந்திரிகள் மகாநாட்டை அந்த இனத்தில் சேர்த்து விடமுடியாது. உணவு நெருக்கடியை உண்மையில் யுத்தம் போன்ற ஒரு நெருக்கடியாகப் பாவித்து, உறுதியுடன் அதைச் சமாளிக்க மாகாணங்களிலும், மத்தியிலும் உள்ள அதிகாரிகள் தற்போது உறுதிகொண்டிருப்பதை இம்மகாநாடு தெளிவாக்குகிறது. இதையொட்டி ஏழு அம்சங்களுடன் கூடிய வேலை முறை யொன்றை இந்தியா முழுதிலும் ஒரே சீராகக் கடைப்பிடிப்பதென்பது இம்மகாநாட்டின் முடிவு. உண்மையில் இத்தகைய ஒரு முடிவை சர்க்கார் நெடுநாள் முன்னதாகவே நிறைவேற்றிவைத்திருக்கவேண்டும். உணவு விஷயத்தில் மாகாணங்கள் இதுவரை தலைக்கொரு விதமான வேலை முறையைக் கையாண்டுவந்திருக்கின்றன. தேச முழுதும் ஒரே உறுப்பு என்ற அடிப்படையில் உணவுக் கொள்முதலில் எங்கும் ஒரே கொள்கையைக் கையாண்டு, திரட்டப்படும் தான்யத்தை எல்லா மக்களுக்கும் நியாயமான விலையில் சீராக வினியோகிக்க வகை செய்திருப்பதே முறை. அவ்வாறு செய்திருந்தால் நாட்டின் சில பகுதிகளில் உணவுக்கு இவ்வளவு பயங்கரமான திண்டாட்டம் ஏற்பட்டிருக்காது. மொத்தத்தில் பத்துசத விகிதமாகவே உள்ள உணவுப் பற்றுக்குறையை கூடிய வரை எளிதாகச் சமாளித்திருக்க முடியும்.

மேற்குறித்த குறையை அடியோடு பரிகரிப்பதுதான் தற்போதைய டில்லி மகாநாட்டு முடிவின் பிரதான அம்சம். உணவு விஷயத்தில் தேசமுழுதும் ஒரே சீரான வேலை முறை கையாளப்பட வேண்டுமென்பது அதன்

சமீபத்தில் புதிய டில்லியில் நடந்த முதல் மந்திரிகள் மகாநாட்டில் எடுக்கப்பட்ட படம். உணவுப் பிரச்னை பற்றிய முடிவுகள் இம்மகாநாட்டில் செய்யப்பட்டன.

தீர்மானங்களில் ஒன்று. எப்படியாவது தங்கள் மாகாணத்தினர் மட்டும் சௌக்கியமாக வாழ்ந்தால் போதுமென்ற நினைப்புடன் சில மாகாண அதிகாரிகள் நடந்து வந்திருப்பது மிகவும் துக்ககரமான ஒரு உண்மை. அவ்விடங்களில் உணவுத் தட்டுள்ள வேறு சில மாகாணங்களைப்போல் உணவுக் கொள் முதல் நடப்பது கிடையாது. இது காரணமாக உபரி தான்யமுள்ள இடங்களிலிருந்து மற்ற மாகாணங்களுக்கு உண்மையில் கிடைக்கக்கூடிய உணவு முழுதும் கிடைப்பதில்லை. டில்லி மகாநாட்டுக்குப்பின் இந்த விபரீதம் மறைந்து தேசம் முழுதும் ஒரே உடல், சுகதுக்கங்களை அதன் அங்கங்கள் அனைத்தும் சமமாகவே பகிர்ந்து கொண்டாகவேண்டும் என்ற உணர்வு பொதுவாக எல்லா மாகாணங்களிலும் நிலைபெறுமென்று நம்புகிறோம்.

தற்போதைய உணவு நெருக்கடிக்கான முக்கிய காரணங்களில் சிலர் உணவுப்பொருள்களைப் பதுக்கி வைப்பதும் ஒன்று. அவர்களில் ஒரு சாராரைப் பொறுத்த வரை, பீதி காரணமாயிருக்கலாம். ஆனால் அது மன்னிக்கக்கூடியதன்று. மற்ற ஜனங்கள் பட்டினியால் தவிக்கையில் எப்படியானாலும் தங்கள் வாழ்வுக்குமட்டும் அளவுகடந்த முன் பந்தோபஸ்து செய்து கொள்வதுதான் முக்கியமென்று சிலர் எண்ணுவது மனிதத் தன்மையல்ல. கைவசம் வைத்துக்கொள்ளக்கூடிய உணவுபற்றி எல்லா மாகாணங்களிலும் ஒரே வரையறை ஏற்படுத்தி, இதைப்பற்றிய உத்தரவுகளை ஜரூராக நிறைவேற்றிவைப்பது அவசியமென டில்லி மகாநாடு முடிவு செய்திருப்பது வரவேற்கத்தக்கது. சரக்கைப் பதுக்கிவைப்போரில் மற்றொரு சாரார் வர்த்தகர்களிடையே இருப்பவர்கள். கொள்ளை லாபமடிக்க அவர்கள் எந்தப் பாதகத்துக்கும் தயார். இத்தகையோரைக் கடுமையாகத் தண்டித்து ஒடுக்க சமீபத்தில் பார்லிமெண்டில் ஒரு சட்டம் நிறைவேறியது நேயர்களுக்குத் தெரியும். டில்லி மகாநாட்டின் பலனாக இவர்கள் விஷயத்தில் இன்னும் தீவிரவான முறைகளைக் கையாளவும், பொதுவாக விலைவாசிகள் அதிகரிப்பைத் தடுக்கவும் சர்க்கார் உறுதியான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வரென்று எதிர் பார்க்கலாம்.

இதே சமயத்தில், பல்வேறு உணவு தான்யங்களின் விலைகள் எல்லா மாகாணங்களிலும் கூடியவரை ஒரே சீராக இருக்கவேண்டிய அவசியத்தையும் டில்லி மகாநாடு வற்புறுத்தியிருக்கிறது. சமீபத்தில் இம்மாகாண சர்க்கார் உத்தரப் பிரதேசத்திலிருந்து அரிசி வரவழைத்த இனத்தில் பெருவாரியாக நஷ்டப்பட நேர்ந்ததை இதற்குள் யாரும் மறந்திருப்பதற்கில்லை. அரிசியின் விலை மாகாணத்துக்கு மாகாணம் இவ்வளவு அதிகமாக வித்தியாசப்பட உண்மையில் நியாயமான காரணம் எதுவும் இருக்க முடியாது. இதுவரை நடந்தது யாதாயினும், டில்லி மகாநாட்டுக்குப்பின் இத்தகைய விபரீதங்களுக்கு இடமிராதென்று எண்ணுகிறோம்.

வேதனை

'வாசவன்'

"இந்தா நான் சொன்னுச் சொன்னதுதான். குறுக்கே பேசாதே!'

வைராக்கியத்தைக் காட்டற இடத்திலே காட்டணும். அவன் சின்னவன்தானே? அப்படித்தான் அவன் உங்களை என்ன சொல்லிவிட்டான்?

'அதுக்கு மேலே அவன் என்ன சொல்லணும்?' நீங்களும் என் அப்பாவாயிருந்தா இப்படிப் பேசுவீங்களான்னு கேட்டானே! எனக்கென்னு ஒரு சொந்தப் புள்ளை இருந்தா அப்படிக் கேக்குமா?'

'உங்க சொந்தப் புள்ளையாயிருந்தா நீங்களும் அப்படிப் பேசுவீங்களா? என்னமோ நடந்திடுச்சின்னு விட்டுத் தள்ளாமே அதையே நினைச்சுக்கிட்டிருக்கீங்களே! பண்டிகையன்னிக்கு அவன் இல்லையின்னா வீடு நல்லாயிருக்குமா?'

'ஜானகி! அவன் இல்லையின்னா பண்டிகை போகமாட்டேன்னு சொல்லுமோ? பண்டிகையன்னிக்கி நீயும் நானும் சின்னப் புள்ளையா யிருந்துட்டுப்போறோம்! ஒரு குடிசையிலே பிறந்த பயலுக்கு அவ்வளவு திமிரா?'

'நீங்க மாத்திரம் இந்தக் குபேர மாளிகையிலேதான் பிறந்துட்டீங்களோ? இன்னிக்குள்ள வாழ்வை நினைச்சாப் போருது அன்னிக்கு நீங்க சோத்துக்கே தாளம் போட்டதை நினைச்சுப் பார்க்கணும்' என்று சொல்லிவிட்டு ஜானகி 'மாடிக்குப் போய்விட்டாள்

தனியாக விடப்பட்ட அருணாசலம் பிள்ளையின் மனத்திலே, ஜானகி சொன்ன வார்த்தைகள் மூட்டத்தை எழுப்பி பெரிய மழையையே வருவித்துவிட்டன. இடியும், மின்னலும் அப்பப்பா, பெரிய சூறவளியே எழுந்துவிட்டது.

சோபாவிலிருந்து எழுந்தார் ஹாலின் ஒரு மூலையில் போட்டிருந்த நிலைக் கண்ணாடியின் முன்னால் போய் நின்றார் கண்ணாடியில் தெரிந்த தன் பிம்பத்தைப் பார்த்தார்.

'இந்த மாளிகையிலே வாழ்வதற்குத் தகுதிதானா?' என்ற ரீதியில் தன்னையே அலசிப்பார்த்தார்.

ஏன்? அவர் தகுதியுள்ளவர்தான்; அரண்மனைபோன்ற இந்த மாளிகை, ஆயிரம்பேர் வேலை செய்யும் 'ஜானகி மில்' பாங்கிலே இருக்கும் பல லக்ஷக் கணக்கான நோட்டுக்கள் இவை எல்லாவற்றிற்கும் அவர் முதலாளி. கூப்பிட்ட வார்த்தைக்கு ஏன் என்று கேட்க எத்தனைபேர்! பொதுவாக அவர் குபேர வாழ்வு /வாழ்வதற்குத் தகுதியானவர்தான்

தன் நெஞ்சு பூரித்து எழுந்ததைக் கண்ணாடியின் மூலம் பார்த்ததும் மனத்திலிருந்த கனம் குறைந்தது போன்ற ஒரு நிம்மதியில் மறுபடியும் சோபாவில்வந்து உட்கார்ந்தார் அவர்

'குபேர வாழ்வெல்லாம் ஜானகி சொன்னதுபோல திடீரென்று முளைத்த வாழ்வுதானோ?' மறுப்டியும் குபேர வாழ்வைச் சுற்றி வட்டம் போட்டுக்கொண்டிருந்த அவர் மனம் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தது

உண்மையிலே 'குபேர வாழ்வு நாற்பது வருஷங்களுக்கு முன்னால் இருபது வயதில் 'குருட்டாம் போக்கில்' வந்த வாழ்வுதான் எல்லோருக்குமா அந்த வாழ்வு அடி நாளிலேயே கிடைத்து விடுகிறது? ஜானகி என்னமோ உளறிக் கொட்டிவிட்டாள் அது போகட்டும். அந்தப் பயல் மெய்யப்பன் அப்படிக் கேட்கலாமா?

அந்தக் கேள்விக்கு விடைகாணும் முடிவிலே அவர் மனம் பின்னோக்கிப் பாய்ந்தது

அருணாசலம் பிள்ளைக்கு எல்லா விதத்திலும் வாழ்க்கை இன்பகரமான சூழ்நிலையை அமைத்திருந்தாலும்கூட, ஒரே விஷயத்தில் மட்டும் அது 'சொட்டை' விட்டிருந்தது

அவருக்குக் குழந்தை இல்லை! குழலும் யாழும் யாராவது வாசிக்கக் கேட்டால் அவருக்குக் குழந்தையின் ஞாபகம் வந்துவிடும். அவருடைய நண்பர்கள்கூட, எல்லாம் இருந்தாலும் 'அது! வேண்டும்' என்று சொல்லும்போது, அவர் மனம் சோகவலை பின்ன ஆரம்பித்துவிடும்.

ஜானகி வேறு நச்சரித்துக்கொண்டிருந்தாள்: 'எனக்கோ வயசு முப்பதாச்சு. இனிமே என் வயிறு திறக்கும்கற நம்பிக்கை இல்லை. எவ்வளவு செல்வமிருந்தும் ஒரு குழந்தைக்கு ஈடாகுமா? வேறே கல்யாணம் பண்ணிக்கிங்க!' என்று.

அவருக்குக் குழந்தை வேண்டும்தான் ஆனால் மறுமணம் என்பதுதான் அவருக்குப் பிடிக்கவில்லை. கடைசியில் இருவரும் ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வதென்ற முடிவுக்கு வந்தனர்.

மாத்தூர் வெங்கடாசலம் பிள்ளையின் இரண்டாவது பையன் மெய்யப்பனை ஸ்வீகாரம் கொள்ளலாம் என்ற ஒரு நம்பிக்கை அவர்களுக்கு. அதற்கு வெங்கடாசலம் பிள்ளையும் மறுப்புக்கூற மாட்டார் என்ற நிச்சயமும் உண்டு. நித்திய தரித்திரரான அவர் தன் பிள்ளை எங்கேயாவது நன்றாக இருந்தால் போதுமென்றுதானே நினைப்பார்?

இருதரப்பாரிடையேயும் பேச்சு வார்த்தைகள் நடந்தன அதன் பயனாக நான்கு வயது நிரம்பிய மெய்யப்பனுக்குக் குபேர வாழ்வு கிடைத்தது!

தன் வயிற்றில் பிறந்த பிள்ளையைப் போலவே மெய்யப்பனை அன்பாக வளர்த்தாள் ஜானகி வெகு சீக்கிரமாகவே அவளிடம் அவன் ஒட்டிக்கொண்டுவிட்டான் 'அம்மா, அம்மா!' என்று அவன் அழைக்கும்போதெல்லாம் இந்திர லோகத்தைக் கண்டாள் அருணாசலம் பிள்ளையும் அவனை வளைய வளைய வந்து, 'பிள்ளைக் கலி தீர்க்கவந்த பெருமானே!' என்று கொஞ்சினார்.

வெங்கடாசலம் பிள்ளை சமயாசமயங்களில் வந்து மெய்யப்பனைப் பார்த்துவிட்டுப் போவார் 'அப்பா' என்ற முறையிலல்ல, ஏதோ ஒரு விருந்தாளியைப்போல மனப் பாரத்தோடு வந்து கண்ணீருடன் போவார். "எனக்கும் பணம் இருந்தால் பெற்ற பிள்ளையைக் கொடுப்பேனா?" என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு ஒரு அளவுக்குச் சமாதானம் அடைவார்.

மெய்யப்பன் பெரியவன் ஆனான். கல்லூரிப்படிப்பும், நாகரிகமும் அவனைச் சற்று முன்கோபியாகிவிட்டன. அதோடு அவன் பெரிய செலவாளியாகவும் இருந்தான்

அருணாசலம் பிள்ளை, அவனைக் குழந்தையினின்றும் பிரித்து ஒரு பெரியவனாக்கிப் பார்த்தார் அவருடைய மனத்திலே ஒரு வேற்றுமையுணர்ச்சி பாசிபோல் படர்ந்தது.

அவர் குபேர வாழ்வில் இருந்தாரே தவிர அநாவசியமாக எதுவும் செலவழித்து அறியாதவர் ஆடம்பரத்துக்காக்கார் வைத்திருந்தாலும் அவசியமில்லாமல் அதை உபயோகப்படுத்தமாட்டார்.

இவருக்கு நேரிடையாக இருந்தான் மெய்யப்பன். ஒரு நாள் சினிமாப் பார்க்கப் போவதெற்கென்று டிரைவரைக் கார் எடுக்கச்சொன்னான். பெட்ரோல் இல்லையென்று கையை விரித்து விட்டான் அவன்,

"எப்படியாவது சினிமாவுக்குப் போகணும். பிளாக் மார்க்கெட்டிலேயாவது பெட்ரோல் வாங்கிட்டுவா பெரிய ஐயாக் கிட்டே பணம் கேளு" என்று டிரைவரை முடுக்கினான்.

அருணாசலம் பிள்ளையிடம போய் விட்டுத் திரும்பிய டிரைவர் "சினிமாவுக்குப் போறதுக்காக பிளாக் மார்க்கெட்டிலே பெட்ரோல் வாங்க வேண்டியதில்லை'யின்னு சொல்லிட்டாங்க" என்றான்.

மெய்யப்பனுக்கு ஆத்திரம் படபடத்தது. டிரைவரின் முன்னால் தன்னை அவமானப்படுத்திவிட்டதாக எழுந்த ஆத்திர உணர்ச்சியுடன், அருணாசலம் பிள்ளையிடம் விரைந்தான்



அவர் பணத்தை எண்ணி இரும்புப் பெட்டியில் வைத்துக்கொண்டிருந்தார்: அவரைச் சுற்றி நோட்டுக் கட்டுக்களும். சில்லரைகளும் இருந்தன.

போன வேகத்தில், "அப்பா!' என்று சற்று மிடுக்குடனே அழைத்தான் மெய்யப்பன்.

அவர் ஏறிட்டுப் பார்த்தார். அவன் நின்ற தோற்றம் ஏதோ ஒரு புயல் எழும்பப் போகிறதென்பதை அறிவுறுத்தியது.

'அப்பா, நான் சினிமாவுக்குப் போகணும்!

'போயிட்டு வாயேன்!'

'போறதுக்குத்தான் பெட்ரோல் இல்லையே! பல்லைக் கடித்துக்கொண்டு சொன்னான்.

'நடந்தே போயிட்டு வரலாமே!'

நடக்கலாம். ஆனா என் யோக்கியதை!

'சுருதி பேதமிட்டு ஒலித்தது: 'உன் யோக்கியதை சரிடா. என் பணம் என்ன ஆகிறது?'

'உங்களுக்குப் பணப்பேய் புடிச்சிருக்கு சதா பணத்தை எண்ணி எண்ணிப் பார்த்துப் பூஜை செய்யுங்க!'

'சே. எனக்கு எந்தப் பேய் வேனுமின்னாலும் புடிச்சிட்டும் போகுது அதுக்கு நீ என்னடா? நீ சம்பாதிச்ச பணமில்லை நொப்பன் சம்பாதிச்ச பணமுமில்லை......'

'எங்கப்பன்தான் தரித்திரமுங்கறது தெரிஞ்சதே, நீங்க ஏன் என்னை வந்து எடுத்துக்கணும்? கருமிங்களாம் இப்படித்தான்......'

'ஏய். இனிமே என்னைப்பத்தி ஏதாவது பேசினியின்னா......'

'பேசத்தான் செய்வேன்!'

"எம்புள்ளையா யிருந்தா நீ இப்படிப் பேசுவியடா."

'நீங்களும் என் அப்பாவா இருந்தா இப்படிப் பேசிவீங்களா?"

"நாயைத் தூக்கி நடு வீட்டிலே வச்சா......" "நாய் கீய்னு அநாவசியமாய் பேசவேண்டாம், பிரியமில்லையின்னா பேஷாச் சொல்லிடலாம்!"

'இப்போப் பேஷாச் சொல்றேன். உன்னிடத்திலே எனக்குப் பிரியம் இல்லை. உன்னைப் பெத்த அப்பன் கிட்டேயே போயிடு"

'எவ்வளவுதான் ஏழையாயிருந்தாலும் பெததவன் புள்ளை தலையை கிள்ளி எறிஞ்சிடமாட்டான். நான் எங்கப்பாக்கிட்டேயே போறேன்" என்று கூறிவிட்டு வாசலை நோக்கி நடந்தான்.

"உனக்காக ஐயாயிர ரூபாய் செலவழிச்சிருக்கேன் ரோஷமுள்ளவனா இருந்தா அதைக் கொடுத்திடணும்"

"அதைக்கொடுக்கிறவரைக்கும் நான் சரியாத் தூங்கமாட்டேன்" என்று கூறியவாறு வீட்டை விட்டு வெளியேறிவிட்டான் மெய்யப்பன்.

அப்பொழுதுதான் உள்ளிருந்து வந்த ஜானகி ஒருவாறு விஷயத்தை ஊகித்துக்கொண்டவளாய் 'மெய்யப்பா மெய்யப்பா!" என்று கூவியவாறு வாசல் வரைக்கும் ஓடினாள்

மெய்யப்பன் அதைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. போனவன் போனவன் தான்!

நினைவை இறுகிப் பிடித்த அருணாசலம்பிள்ளை, அவன் 'அப்படிச் சொன்னது சரிதானா? 'நீங்களும் என் அப்பாவாயிருந்தா அப்படிப் பேசுவீங்களா?' என்று அவன் வேற்றுமை எண்ணத்தில்தானே கேட்டிருக்கிறான்?' என்று கேள்வி மேல் கேள்வியாக அடுக்கிப் பார்த்தாகர்.

ஆனால் அவர் மட்டும் "எம்புள்ளையாயிருந்தா நீ இப்படிப் பேசுவியாடா?" என்று கேட்டது சரிதானா? வேற்றுமை விதையை முதலில் விதைத்தவர் யார்? அவர் தான்! அவன் சின்னவன். பதவிசு இல்லாத வயசு படபடப்பாகப் பேசியதில் தவறென்ன இருக்கிறது? சினிமாப் பார்ப்பதற்கு பிளாக் மார்க்கெட்டில் பெட்ரோல் வாங்கியாவது காரில் போகவேண்டுமென்று அவன் எண்ணியது தவறு தான். ஆனால் அந்தத்தவறை அவர் எடுத்துக் காட்டிய முறை சரியானது தானா?

மேலும். அவனை பிள்ளையாக ஸ்வீகரித்துக் கொண்ட பின்பு அவர் தான் அப்பா அந்த எண்ணத்தையல்லவா அவர் அவன் மனத்திலே பரப்பி விட்டிருக்க வேண்டும்? அந்தச் சூழ் நிலைக்கு இடம்

கொடாமல் பிரித்துப் பார்த்ததும் அவர்தான் அந்தச் சின்னஞ் சிறியவனைத்தாக்கி, அவனைத் தோல்வியடையச் செய்வதற்காக — ஏழையென்ற சாட்டையைச் சொடுக்குவதற்காக— "நொப்பன் சம்பாதிச்ச பணமுமில்லை' என்று சொல்லி இருக்க வேண்டியதில்லையல்லவா?

அதே சமயத்தில் ஜானகி சொன்னதுபோல அவர் இந்தக் குபேர மாளிகையில் பிறந்தாரா? இல்லையே அவரும் குடிசையில் பிறந்தவர்தான் அவரும் பிள்ளை வந்தவர்தான். அந்தக் குறைபாட்டை மனைவியே எப்படி இடித்துக் காட்டிவிட்டாள்? அவர் மெய்யப்பனையை எந்தக் குறைபாட்டை வைத்து இகழ்ந்தாரோ. அந்தக்குறை பாடும் அவருக்கும் உண்டல்லவா?

ஒரு கணத்தில் தன்னைத்தானே அறிந்து கொண்ட பின்பு. அவனிடத்தில் குற்றமில்லை என்ற உணர்வு பிறந்தது அருணாசலம் பிள்ளைக்கு

அவன் போன இந்த ஆறுமாத காலமாக வீடுகளை இழந்து காட்சியளிப்பதை அந்த விநாடியில் தான் உணர்ந்தார் எப்படியாவது சமாதானம் பண்ணி அவனை அழைத்துக்கொண்டு வந்துவிட வேண்டும் மாத்தூரில் தானே இருப்பான்?" என்ற பரபரப்புடன் "ஜானகி!" என்றழைத்தார்

உள்ளிருந்து வந்த ஜானகி ஒன்றும் பேசாமல் அவர் முன்னால் நின்றாள்.

"ஜானகி! நாமரெண்டு பேரும் மாத்தூர் போகணும் மெய்யப்பன் இல்லாமே நம்ம வீட்டிலே பண்டிகை கிடையாது டிரைவரைக் கார் எடுக்கச் சொல்லு!" என்று அவர் சொல்லும்போதே, அவள் முகம் மலர்ந்தது

அப்பொழுது தபால்காரன் ஒரு கடிதத்தையும் அவரிடம் கொடுத்துவிட்டு 'ஐயாயிர ரூபாய் மணியார்டர் வந்திருக்குங்க!" என்றான்

கடிதத்தை வாங்கி ஆவலுடன் பிரித்துப் பார்த்த அவரின் முகம் வரவரக் கறுமையடைந்தது கண்ணிலிருந்து நீர்த்துளிகள் 'கரகர'வென்று விழுந்து சிதறின.

திகிலடைந்த ஜானகி அவர் கரத்திலிருந்த கடிதத்தைப் பிடுங்கி வாசித்தாள்:

"அருணாசலம் பிள்ளைக்கு, உங்கள் மகன் மிஸ்டர் மெய்யபபன் காஷ்மீரப் போரில் காலமான செய்தியையறிவிக்க வருந்துகிறோம் அவருடைய தேசபக்தி நிறைந்த வீரமான போராட்டத்தைப் பாராட்டும் பொருட்டு உங்களுக்கு ரூபாய் ஐயாயிரம் அனுப்பியுள்ளோம்.

"இந்திய ராணுவக் காரியாலயம்"

கடிதத்தை அப்படியே இழித்தெறிந்தாள் ஜானகி ஆத்திரத்துடன்.

'அவனுக்கு நீங்க செலவழிச்ச ஐயாயிரம் ரூபாயையும் கேட்டீங்கள்ள. அவன் தன் உயிரைக் கொடுத்தாவது உங்க கடனைத் திருப்பியடைச்சுட்டான் இனிமே உங்க குபேர மாளிகையிலே அந்தக் குடிசையிலே பிறந்தவன் வரப்போறதில்லை!'

அருணாசலம் பிள்ளை பதிலே சொல்லமுடியாத நிலையில் தலையைக் கவிழ்த்துக்கொண்டார்.

'உங்க பணவெறியிலே அவன் பலியாகிட்டான் அவனைப் புள்ளை எடுக்கிறேன்னு சொல்லி நாடகம் போட்டு. சின்னப் புள்ளையைப் பேயாய் ஆட்டிவச்சு பெத்தவங்களுக்கும் இல்லாமே நமக்கும் இல்லாமே அவனைக் கொன்றது நீங்கதான்!' என்று ஆவேசமாய்க் கூறிவிட்டு, கண்கள் தீயை உமிழ அருணாசலம் பிள்ளையைப் பார்த்தாள் ஜானகி.

அந்தப் பார்வையின் சூட்டைப் பொறுக்க முடியாமல் கண்களை மூடிக்கொண்டார் 'அவனைக் கொன்றது நீதான்!' என்று இனம் தெரியாத ஆயிரமாயிரம் குரல்கள் அண்டமே பிளக்கும்படியான வெறியோடு ஒலிக்க, வேதனை தாங்கமுடியாமல் சோபாவோடு தன் தலையை அழுத்தமாகப் புதைத்துக்கொண்டார் அருணாசலம் பிள்ளை.

ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.

பிரபல ஜோதிஷர்

★



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ 2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

★

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,

'தபோ நிதி.'

தியாகராய நகர், மதராஸ் 17.

தபால் பெட்டி 1417

வீண் வினை

ஸ்ரீமதி பத்மா நாராயணன்

'ஏன், உங்களைத்தானே. கோபுவுக்கு மறுபடியும் அக்டோபர் பரீக்ஷைக்கு பதினைந்து ரூபாய் கட்ட வேண்டுமாமே. உங்கள் பிள்ளைக்காவது கண்டிப்பாக எழுதி வரவழைப்பதுதானே?' என்ருள் லக்ஷ்மி அம்மாள் தன் கணவன் கணேசய்யரிடம்.

கணேசய்யருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"உன் தம்பி வருஷா வருஷம் பரீக்ஷையில் தவறிக்கொண்டே வரட்டும். நான் அவனுக்குக் கடன் பட்டாவது பணம் கட்டிக்கொண்டே வருகிறேன். போடி, போ. அவனுக்குப் படிப்பு இதோடு போறும் என்ருல் இனிமேல் ராகவனுக்கு எழுதமுடியாது அவன் இந்த மாத முதல் தேதியில்தானே அறுபது ரூபாய் அனுப்பினுன் அவனிடம் சும்மாப்பணம் ஏது?' என்ருர் கணேசய்யர்

'ஏன், அவனுக்குப் பணம் இல்லாமல்தானே பெண்டாட்டிக்கு ஐந்து பவுனில் இரண்டு ஸ்வஸ்திக் வளையல்களும். மூன்று பவுனில் ஒற்றைவடச் சங்கிலியும் செய்து போட்டிருக்கிருன்? அவனவன் கல்யாணம் காட்சி கடந்துவிட்டால், பெண்டாட்டியைக் கவனிக்கத்தானே நேரமிருக்கிறது? இந்தக் காலத்தில் பெற்ற தாயாவது, தகப்பனுவது? அதுவும் என்னைப் போல் மாற்ருந்தாயாயிருந்துவிட்டால், நம்மை அவன் எதற்காகக் கவனிக்கனும்?" என்று சொல்லிக்கொண்டே கண்களில் துளிர்த்த நீரைத் தன் முந்தானையால் துடைத்துக்கொண்டாள் லக்ஷ்மி.

'சங்கிலியா, அதெல்லாம் செய்து போட்டிருக்கிருன் என்று உனக்கு யார் சொன்னு? அவன், அவனுடைய மனைவி. ஒரு குழந்தை—மூன்றுபேர் காலக்ஷேபத்திற்கே, அவனுடைய சம்பளம் நூற்றைம்பதும் சரியாப் போகுமே மேலும் நமக்கு வேறு மாதாமாதம் நாற்பது ஐம்பது என்று அனுப்புகிருன். பூனுவில் பணம் மிச்சம் பிடிக்கவாவது! என்று ஆச்சரியத்துடன் வினவினுர் கணேசய்யர்.

"அந்தச் சங்கதி உங்களுக்குத் தெரியாதா? இன்ஜினியர் பெண் பார்வதி பூனுவில்தானே இருக்கிருள். அவள் போனவாரம் இங்கே புறப்பட்டு வந்திருக்கா, அவளை நான் சந்தித்தேன். பார்வதியும் உங்க மாட்டுப்பெண்ணும் கொஞ்சம் நாளாகப் பழக்கமானுர்களாம். பார்வதியின் பிள்ளைக்குப் பூனுவிலே ஆண்டுநிறைவு செய்தார்களாம் அப்போது, உங்க மாட்டுப்பெண்ணும் அவர் வீட்டிற்குப் போயிருந்தாளாம் அவள் கழுத்திலும், கையிலும் தங்க நகைகள் ஜொலித்ததாம். புத்தம் புதுசாகவும் இருந்ததாம். இப்படியெல்லாம் உங்க பிள்ளை பணத்தை மிச்சம் பிடிக்கிருள்......' என அடுக்கிக்கொண்டே போனுள் லக்ஷ்மி.

கணேசய்யருக்குச் சிறிது ஆத்திரம் தான் வந்தது அப்போது தன் மனைவியின்மேல் அல்ல! தன் பிள்ளையின் மேல்தான் தான் மாதம் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும்போது, தன் பிள்ளை மாத்திரம் பணம் சேர்த்தது அவருக்குப் பொருமையைக்கூடக் கிளறி விட்டது எனலாம் பல்லைக் கடித்துக் கொண்டார் ஒரு முறை அவன் தான் நாற்பதோ ஐம்பதோ அனுப்புகிருனே நூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில், தன் குடும்பச் சிலவு போக மாதா மாதம் அனுப்பும் இந்தத் தொகை கணிசமானதுதானே! ஏன் ஐநூறு ரூபாய்க்கு நகைவாங்கவேண்டுமென்ருல், அவனுல் மாதா மாதம் எழுபது அல்லது எண்பது ரூபாய் மிச்சம் பிடித்தால்தானே வாங்க முடியும்? அவ்வளவையும் தனக்கு அனுப்பிவைத்தால், தானுகவே கஷ்டப்படாமல் இருக்க முடியுமல்லவா? சேர்த்து வைத்து, பெண்டாட்டிக்கு நகை செய்கிருனும், நகை! ஆகட்டும், அவன் இவ்வளவு சாமர்த்தியமாக இருக்கிருனு? பரம சாது என் மேல் பிரியம் உள்ளவன் என்றல்லவோ நினைத்திருந்தேன் ஆம்; அவ்வளவும் வெளிவேஷம்தான்போலிருக்கிறது இப்பொழுதே அவனுக்குத் தந்தியடிக்கிறேன் மேலும் ஐம்பது ரூபாய் உடனே வேண்டுமென்று-இப்படியே எண்ணிக்கொண்டு போனுர் கணேசய்யர்.

அவருடைய உள்ளத்தின் எண்ண ஓட்டங்கள் முகமாறுதலால் நன்ருகப் பிரதிபலித்தன அநுபவத்தால் இதைக் கண்டறிந்த லக்ஷ்மியம்மாள் அவரிடம் மற்ரெரு உண்மையையும் வெளியிட்டாள்.

"உங்கள் பிள்ளைக்கு சம்பளம் நூற்றைம்பது என்று தானே எழுதியிருந்தான்? அது பொய் அவனுக்குச் சம்பளம் முந்நூறு ரூபாயாம் இதையும் இன்ஜினியர் பெண் பார்வதிதான் என்னிடம் சொன்னுள்." என்ருள் லக்ஷ்மி

"அவளுக்கெப்படித் தெரியுமா?"

"அங்கேயே வேலை பார்க்கிறவாளுக்குத் தெரியாதா என்ன? உங்கள் மாட்டுப் பெண்ணின் 'மினுக்'கையும் பகட்டையும் பார்த்தாலே சொல்லிடலாமாமே," என்ருள்

இந்தத் தகவலின் உண்மையும் கணேசய்யர் நம்பாத அளவுக்கு வற்புறுத்தப்படவில்லை அவரது முன் எண்ணத்திற்குச் சுருதி கூட்டுவதாகவே இருந்தது இதுவும் அவரது கோபம், பொருமையின் எல்லையையே எட்டிவிட்டது உடனே தன் மனைவியின் முன்னிலையிலேயே இரைந்தார்.

"ஆகட்டும் இனிமேல் மாதாமாதம் நூறு ரூபாய் அனுப்பினுல்தான் எனக்கு நீ பிள்ளை இல்லாவிட்டால் உனக்கும் எனக்கும் ஸ்தானப் பிராப்திகூட இல்லை என்று எழுதிவிடுகிறேன்" என்று காகிதத்தையும் பேனுவையும் தேடி அறைக்குள் நுழைந்தார கணேசய்யர்

பரமதிருப்தியுடன் லக்ஷ்மியும் சமையலறைக்குள் நுழைந்தாள்.

2

ராகவன் கணேசய்யரின் முதல் தாரத்துப் பிள்ளை அவளுக்கு வேறு குழந்தைகிடையாது அவனைப் பெற்றுப் போட்டுவிட்டு ஐந்தாறு ஆண்டுகளுக்கெல்லாம் கண்ணை மூடிவிட்டாள் ராகவனைக் காப்பாற்றுவதற்கு தங்கை யொருத்தி விதவையாகி வீட்டிலிருந்ததால், அவரும் மறுவிவாகத்தைப்பற்றிய எண்ணமே இல்லாமல் இருந்துவிட்டார் மேலும் அவரும் நாற்பது ரூபாய் வருமானமுள்ள ஒரு ஏழை உபாத்தியாயர் தான்.

ராகவன் பதினெட்டாவது வயதில் பத்தாவது தேறியதும், எங்கும் வேலையகப்படவில்லை ஆனுல் அப்போது உலக யுத்தம் நடந்துகொண்டிருந்தது அதிகத்தயக்கத்துடனேயே யுத்த சேவையில் சேர்ந்தான். பர்மா,

மலேயா முதலிய இடங்களிலெல்லாம் சேவைசெய்தான். மாதா மாதம், தன் தந்தைக்கு நூறு ரூபாய் அனுப்பி வந்தான்.

அந்த நிலையில் கணேசய்யரின் விதவைத் தங்கை திடீரென்று காலமாகிவிட்டாள், அவருக்கு உதவிக்கு யாரும் இல்லாமல் கஷ்டப்பட நேரிட்டது தனக்கு வயது ஐம்பதை நெருங்கிவிட்டதை உத்தேசித்து, மறு விவாகம் என்ற எண்ணத்தையே அவர் விட்டுவிட்டார். மேலும், உலக யுத்தம் அப்போது முடியும் தறுவாயிலிருந்தாலும் ராகவன் தாய் நாட்டிற்கு சீக்கிரமே புறப்பட்டுவந்துவிடுவானென்றும், அப்புறம் அவனுக்கே கலியாணம் செய்துவிட்டு, தான் மருமகளின் உதவியில் வாழலாமென்றும் நினைத்திருந்தார்.

ஆனுல் விதி யாரை விட்டது? அந்த வயதிலும் அவருக்காகத் தன் வாழ்நாளை வீணுளாக்க ஒரு பெண் வளர்ந்து வந்தாள் போலும்! அவள் தான் லக்ஷ்மி மிகவும் ஏழைக் குடும்பம் வயது இருபத்திரண்டாகியும் ஏழ்மையினுல் கலியாணமாகாமல், வாடியிருந்த சருகு இந்த அபூர்வ மாப்பிள்ளையை வலைபோட்டுப் பிடிக்க ஆயிரம் தூதுகள் விட்டார் அவள் தந்தை! பிள்ளை அனுப்பும் நூறு ரூபாயில் கொழுத்துப்போயிருந்த கணேசய்யர், சபலம் தலை தூக்க, விவாகத்துக்குச் சம்மதித்துவிட்டார்! ராகவன் மலேயாவிலிருக்கும்போதே விவாகமும் நடந்தேறியது. பட்டினியுடன் போராடிக்கொண்டிருந்த லக்ஷ்மியின் தம்பிகள் இருவர், தங்கை ஒருத்தி ஆக மூவரும், அவள் வரும்போதே, கூடவே குடியேறிவிட்டனர் கணேசய்யரின் வீட்டில் "அத்திம்பேரே அத்திம்பேரே" என்று சதா அவரையே சுற்றியவண்ணம் இருந்தன அக்குழந்தைகள் ஒரு வேளை அவரையும் தங்களுடன் சேர்ந்து ஆடும் ஒரு விளையாட்டுக் குழந்தை என்று நினைத்துவிட்டனபோலும்!

இளம் மனைவியை அவரால் கடிந்து கூறமுடியவில்லை அவளுடைய சாகசத்துக்கு முன்னுல், அவர் ஒரு அடிமைதான்: கலியாணமாகி ஐந்தாறு ஆண்டுகளாகியும் அவள் வயிற்றில் குழந்தை பிறக்கவில்லை கணேசய்யருக்கு அதைப்பற்றிக் கவலையில்லை ஆனுல் லக்ஷ்மிக்கோ......?

3

ராகவன் ராணுவத்திலிருந்து விடுபட்டு, சொந்த ஊர் வந்து சேர்ந்தான். தந்தையின் விவாகத்துக்கு அவன் சம்மதிக்காவிட்டாலும், அவரை அவன் கடிந்துகொண்டதேயில்லை அவனுக்கும் மணமானது பூனுவில், மிலிடரி அகௌண்ட்ஸில் ஒரு குமாஸ்தா வேலையில் அவனைச் சர்க்கார் அனுப்பினுர்கள். தன் இளம் மனைவி அன்னபூரணியுடன், அவன் பூனுவுக்குச் சென்ருன். புறப்படும் போது லக்ஷ்மி அவனிடம் நெருங்கி 'கிழடுகள் நாங்கள் இருக்கிருேம் எங்களையும் கவனிச்சுக்கோ, அப்பா,' என்று அவநம்பிக்கையும் கிண்டலும் கலந்த குரலில் சொன்னுள் ராகவன் அவளுக்குக் கைகூப்பி, விநயத்துடன். 'சித்தி என்னை அப்படி நினைத்துவிடாதீர்கள். பெற்ருேருக்கு நான் கடமைப்பட்டவன் என்று சொல்லியபடி ரயிலேறினுன்

தறுதலையான தன் தம்பி கோபுவைப்படிப்பிற்கும், பணம் கொடுத்து. வளர்த்தாள் லக்ஷ்மி வேருெரு தம்பியும் தங்கையும் அவளுடன்தான் இருந்துவந்தனர் என வினையை விலைக்கு வாங்கிக்கொண்டதாக ஒவ்வொரு சமயம் கணேசய்யர் நினைத்ததுண்டு ஆனுல் அவரை லக்ஷ்மி பேடியாக்கியிருந்தாள் குடும்ப நிர்வாகம் பூராவும் அவள் கையிலே: பெட்டிச் சாவி அவள் இடுப்பிலே தன்னை ஏழையாக மதித்து 22-வயது வரை விவாகமாகாமல், கொடுமைப்படுத்திய சமூகத்தைப் பழி வாங்குவதேபோல், அவள் தன் அசுர சக்தி அனைத்தையும், பாவம் கணேசய்யர் மேல் பிரயோகம் செய்துவந்தாள்!

தன் தந்தை கேட்கும் பணமனைத்தையும், ராகவன் அனுப்பத்தான் வேண்டும் என்று லக்ஷ்மி அவரிடம் வற்புறுத்துவாள். அதன் விளைவாக, வேறு வகையின்றி அவர் அடிக்கடி அவனுக்குக் கடுமையான பாஷையில் கடிதம் எழுதுவார். அவரது மனநிலையும் மாறித்தான் போயிற்று. எலும்பூறக்கல் தேயுமன்ருே?

4

மாதம் நூறு ரூபாய் அனுப்பினுலன்றி. இனி முகதரிசனம்கூடக் கிடையாது என்ற கடிதத்தைக்கண்டதும் பூனுவிலிருந்த ராகவன் திகைத்துவிட்டான் தன் அருமை மனைவி அன்னபூரணியிடம் அந்தக் கடிதத்தைக்காட்டி அவள் யோசனையையும் கேட்டான். "அங்கு நிலைமை எப்படியிருக்கிறது என்று நேரில் தெரிந்து, உங்கள் அப்பாவுக்கும் சமாதானம் சொல்லிவிட்டு வருவோம் நம் நூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில், எவ்வளவோ தியாகங்கள் செய்து, அவருக்கு ஐம்பது ரூபாய் அனுப்பிவருகிருேம். நூறு ரூபாய் அனுப்பிவிட்டால். நமக்கு மீதி ஐம்பது ரூபாயில் இங்கு எப்படிக் குடும்பம் நடக்கும்? எதற்

கும் ஒரு மாதம் லீவு கேட்டுக்கொண்டு வாருங்கள். போய்விட்டு வருவோம் எனக்கும் அவரைப் பாவம் பார்க்க வேண்டும்போல் இருக்கிறது'' என்று யோசனை சொன்னாள் அன்னபூரணி.

அவனுக்கும் அதுவே சிறந்தது என்றுபட்டது மறுவாரமே அவர்கள் சென்னைக்குப் புறப்பட்டார்கள்.

கணேசய்யர், சென்டிரல் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார். அவருடைய வரவேற்பில் ராகவன் குளுமையைக் காணவில்லை அன்புத்திரையின் மீது பனி படர்ந்திருந்ததை அவன் நன்றாக உணர்ந்துகொண்டான்

வீட்டில், லக்ஷ்மியின் வரவேற்பு வெறும் வெளிவேஷமாகயிருந்தது அவள் முதலில், அன்னபூரணியின் கழுத்தையும், கைகளையும் பார்வையிட்டாள். கலியாணத்தின்போது, அவள் போட்டிருந்த ஒன்றை வடச் சங்கிலியைத்தவிற, வேறு ஒரு நகையும் அவள் அணிந்திருக்கவில்லை. ராகவன் புதிதாகச் செய்து போட்டதாகச் சொல்லப்பட்ட ஒரு நகையும் அவளிடம் இல்லை. அவளது முகம் சுண்டியது ஆனாலும், அது அவர்கள் செய்த சூழ்ச்சியாயிருக்குமென்று நினைத்தாள்.

இரண்டு மூன்று நாட்கள் கணேசய்யர் ராகவனிடம் பேசவேயில்லை ராகவனுக்கு அது வருத்தத்தைக் கொடுத்தது தனிமையில் அவன் அழக்கூடச் செய்தான். கடைசியாக அவனே தந்தையை அருகிலழைத்து, "அப்பா, என் மேல் என்ன கோபம்?'' என்று அழமாட்டாமல் கேட்டு விட்டான். அதுதான் சமயமென்று, அவர் ஒரேயடியாகப் பொரிந்து தள்ளிவிட்டார்.

"உனக்கு முந்நூறு ரூபாய் சம்பளமாமே உன் பெண்டாட்டிக்கு ஐநூறு ரூபாய்க்கு நகை செய்தாயாமே. எனக்கு நூறு ரூபாய் அனுப்பினால் உனக்கென்ன கேடு?'—இதுதான் அவர் செய்த கடுமையான சூறுவளிப், பிரசங்கத்தின் கன்யமான சாரம். லக்ஷ்மி இதையெல்லாம் மௌனமாகி வேடிக்கைபார்த்துகொண்டிருந்தாள்.

ராகவன் கண்ணீருக்கிடையே, "யார், அப்பா, இப்படிச் சொன்னது?'' என்று கேட்டான். அவர் மனைவியைப் பார்த்தார். அவள் இடைமறித்து, "இன்ஜினியர் பெண் பார்வதி உன் ஆத்துக்காரி போட்டிருந்த நகையைப் பார்த்தாளாம் என்னிடம் சொன்னாள். அதைச் சாதாரணமாக உன் அப்பாவிடம் சொல்லி விட்டேன், அவர் என்னமோ இப்படி இரைகிறாரப்பா, என்றாள் தளுக்காக.

"அப்பா, நான் சொல்கிறேன். என்னை நம்புங்கள். பார்வதியின் புருஷன் எங்கள் ஆபீஸில் வேலை பார்க்கிறான். அவனுடைய குழந்தைக்குப் பூணூல் ஆண்டு நிறைவு நடத்தினான் நாங்கள் இருவரும் போயிருந்தோம் பகட்டாக இருக்கட்டுமென்று நினைத்து, தங்கமுலாம் பூசிய வெள்ளி நகைகளை வாங்கி அன்னபூரணிக்கு அணிவித்தேன். அதைப் பார்த்து விட்டு, பார்வதி எனக்குச் சம்பளம் முந்நூறுவது இருக்குமென்று நினைத்திருக்கிறாள். அது உண்மையல்ல; என் சம்பளம் 150 தான் உங்கள் குடும்பச் செலவுக்காக, நாங்கள் எங்கள் அவசியத் தேவைகளைக்கூடத் தியாகம் செய்து, மாதா மாதம் ஐம்பது ரூபாய் அனுப்புகிறேன். என்னை நம்புங்கள்,' என்றான் தழுதழுத்த குரலில் லக்ஷ்மியைச் சுட்டெரித்து விடுவதுபோல் பார்த்துவிட்டு, "என்னை மன்னிப்பாயா?'' என்று சொல்லியவாறே, தன் ஆருயிர் மகனை வாத்ஸல்யத்துடன் அணைத்தார் கணேசய்யர்!

"எலிக்ஸிர் அஸ்வகந்தா"

★

மஹரிஷிகள் ஆயுர்வேத உதவியால் ஆயுள் பலம், தேக புஷ்டி, ஆரோக்யம், யௌவனம் இவைகளை அனுபவித்து உதவி அருளிய சிறந்த ரத்த விருத்தி லேகியம் இதுவே. தொடர்ந்து உட்கொள்ள மலபந்தம் நீங்கி, வயிறு, முதுகு, இடுப்புவலிகள் ஒழிந்து, நல்ல பசியையும், நித்திரையையும் உண்டுபண்ணும். இல்லற வாழ்க்கையில் இணையில்லா இன்பமளிக்கும். தவிர, இரத்த மூலம், குடல் வாய்வு, குடல் இறக்கம் இவைகளைக் குணப்படுத்தும். வயோதிகரை வாலிபர் என எண்ணச் செய்யும் ஔஷதம் எமது

"எலிக்ஸிர் அஸ்வகந்தாவே".

40 தோலா கொண்ட டின் ரூ. 10 தபால் செலவு பிரத்யேகம்.

★

ஆயுர்வேத வைத்தியர்

T. V. ஜெயராம சாஸ்திரிகள்,

வீரராகவ வைத்தியசாலை,

ஸ்ரீரங்கம். P. O. S. I.



மத்திய தணிக்கை போர்டு

[பைராகி]

இதுவரையில் சென்னை, பம்பாய், கல்கத்தா இம்மூன்று இடங்களிலும் அந்தந்த பகுதியில் தயாரிக்கப்பட்ட படங்கள் தணிக்கை (Censor) செய்யப்பட்டு வந்தன ஒரு தணிக்கை போர்டாரால் அங்கீகரிக்கப்பட்ட படம் இதர பிரதேசங்களிலும் அங்கீகரிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும் என்பது கட்டாயமில்லை அதே படத்தை இதர தணிக்கை போர்டார் அங்கீகரித்தாலும் தங்கள் பிரதேசத்தில் தடை செய்யவும் அதிகாரம் உண்டு இதைப் போன்ற வேறு சில அசௌகரியங்களும் இருந்துவந்தன இதையெல்லாம் நிவர்த்தி செய்யும் பொருட்டு இந்தியா முழுமைக்கும் ஒரே தணிக்கை போர்டு நிறுவப்பட வேண்டுமென்று வெகு காலமாகக் கோரப்பட்டு வந்தது அதன்பேரில் சர்க்காரும் அதற்கிணங்கி மத்திய தணிக்கை போர்டை (Central-Board of Film Censorship) நிறுவி, பாட்னா ஹைகோர்ட்டு ஜட்ஜ் சர் ஸினி போர்ட் மன மோகன் அகர்வாலாவை அதன் தலைவராக (Chairman) நியமித்திருக்கின்றனர்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் படங்களும், வெளிநாடுகளிலிருந்து நம் தேசத்துக்கு வரும் படங்களும் இந்த போர்டாரால் தணிக்கை செய்யப்படும் அந்த போர்டின் தலைவருடன் ஆறு கௌரவ ஆலோசகர்கள் (Hony Advisors) இருப்பார்கள் இவர்களுக்கு உதவியாகவும், வேலைகளை அவ்வப்பொழுது கவனிக்கும் பொருட்டும், சென்னை, பம்பாய், கல்கத்தா இம்மூன்று இடங்களிலும் மூன்று பிரதேச ஆபீசர்கள் (Regionalofficers) கௌரவ ஆலோசகர்களுடன் வேலை செய்வார்கள்.

அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் படங்களும், மேற்கு வங்காளத்தில் தயாரிக்கப்படும் படங்களும், கல்கத்தா ஆபீசிலும்; பம்பாயில்தயாரிக்கப்படும்படங்கள் பம்பாய் ஆபீசிலும் சென்னை படங்கள் சென்னை ஆபீசிலும் பரிசீலனை செய்யப்படும்.

தணிக்கை செய்வதில் மூன்றுவித கட்டங்கள் உண்டு படம் தயாரித்தவர் முதலில் அந்தந்த பிரதேச ஆபீசருக்கு மனுச் செய்துகொள்ள வேண்டும் படத்தைப் பார்த்து பரீக்ஷிக்க அந்த ஆபீசர் தன்னுடன் கூட ஆலோசகர்களில் இருவரையும் சேர்த்துக்கொண்டு, ஒரு கமிட்டியை நிறுவுவார்.

அந்தக் கமிட்டியிலுள்ளவர்கள் எல்லோரும் ஏகமனதாக, அந்தப் படத்தை அங்கீகரித்து விட்டால், தணிக்கை சர்டிபிகேட் வழங்கும்படி மத்திய போர்டு தலைவரைப் பிரதேச ஆபீசர் கேட்டுக் கொள்வார். இந்த முதல் கட்டத்திலேயே அநேகமாக பெருவாரியான படங்கள் அங்கீகரிக்கப்பட்டு விடலாம்

ஆனால், பிரதேச ஆபீசரால் நிறுவப்பட்ட கமிட்டியினரால் அந்தப் படம் ஏகமனதாக அங்கீகரிக்கப்படாவிட்டால், மறுபடியும் படத்தைப் பரிக்ஷை செய்ய, ஒரு பரிசீலனைக் கமிட்டியை (Revising Committee) ஏற்படுத்த வேண்டுமென்று, படம்

வெலிங்டனில் ஓடும் 'பதங்கா' (வண்ணாத்திப் பூச்சி)யில் நிகார்—ஷ்யாம் காதல் கட்டம்.

மினர்வா மூவிடோன் 'ஷீஷ் மஹா'லில் உருக்கமான ஒரு கட்டம்

தயாரித்தவர் மனுச் செய்து கொள்ளவேண்டும். இந்த பரி சிலனைக் கமிட்டியில் பிரதேச ஆபீசரும், கௌரவ ஆலோசகர்களில் நான்கு பேரும் அங்கத்தினர்களாக இருப்பார்கள். படத்தைப் பார்த்த பிறகு அவர்களும் ஏகோபித்த முடிவுக்கு வரமுடியாவிட்டால், மூன்றும் முறையாக மத்திய தணிக்கை போர்டுக்கே மனுச்செய்து கொள்ள வேண்டும்

தலைவர், மற்றொரு பரிசிலனைக் கமிட்டியை (Reviewing-Committee) நிறுவுவார். இதில், மத்திய தணிக்கை போர்டு மெம்பர் ஒருவரும். அந்தப் படத்தின் பிரதேச ஆபீசரும், அவரைச் சேர்ந்த ஆலோசனைக் கமிட்டியிலிருந்து இரண்டு ஆலோசகர்களும் அங்கம் வகிப்பார்கள்.

சினிமாத் தொழில் சம்பந்தப்பட்டவர்களும் தணிக்கை போர்டில் ஸ்தானம் வகிக்க வேண்டியது அவசியம் ஆனால் அவர் தன்னுடைய சொந்தப் படங்களை தணிக்கை [illegible] போது ஒரு தலைப்பக்ஷமாக இருந்துவிடக் கூடாது என்ற நோக்கத்தை முன்னிட்டு, மூன்று பெயர்களைச் சிபார்சு செய்யுமாறு சினிமாத் தொழில் சம்பந்தப்பட்ட சிலரை, சர்க்கார் கேட்டிருக்கிறார்கள் அப்படிச் சிபாரிசு செய்யப்பட்ட மூவரில், ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய தணிக்கை போர்டில் அங்கத்தினராக நியமிக்கப் படுவார் ஆனால் அவர் சினிமாத் தொழிலைச் சார்ந்தவராகக் கருதப்படமாட்டார் என்றும், சினிமாவில் நன்கு பரிச்சயம் உள்ளவராகவே கருதப்படுவார் என்றும் சர்க்கார் தெரிவிக்கின்றனர்.

பழைய தணிக்கைக்கும் இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் மத்திய தணிக்கைக்கும் வித்தியாசம் யாதெனில், மத்திய தணிக்கை போர்டாரால் செய்யப்படும் முடிவு, படம் தயாரித்தவருக்கு அதிருப்தியை அளிப்பின், அவர் மத்திய அரசாங்கத்துக்கு அப்பீல் செய்துகொள்ள உரிமை உண்டு. படம் திரையிடப்படும் தேதி குறிப்பிட்டு விளம்பரம் செய்து விட்டுக்கூட சில தினங்களுக்கு முன் தங்கள் படங்களை தணிக்கை செய்து பெற்று வந்தனர். ஆனால், இனி அவ்விதம் செய்ய முடியாது. போதிய அவகாசம் கொடுத்தே தணிக்கைக்கு மனுச் செய்து கொள்ள வேண்டும் இதுவரையில் அந்தந்த பிரதேசங்களை மட்டும் அனுசரித்து தணிக்கை செய்யப்பட்டு வந்தவை, இனி அப்படியில்லாமல், இந்தியா முழுவதையும் அனுசரித்துத்தான் தணிக்கை செய்யப்படும்.

நமது பம்பாய்க் கடிதம்

'ஷீஷ் மஹல்'

பம்பாயில் ஓரே மாதிரியான சாரமற்ற காதற் கதைகளுள்ள படங்களைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போயிருக்கும் சினிமா விசிறிகளுக்கு, சென்ற வாரம் வெளிவந்த மினர்வா மூவிடோனின் "ஷீஷ் மஹல்" என்னும் புதிய படம் மிகவும் திருப்தியை விளைவித்தது. சாதாரணமாக இவ்வூரில் தயாரிக்கப்படும் படங்களைப்போல் அல்லாமல், இப்படம் மிகவும் உயர்ந்த நிலைமையில் பார்ப்போருக்கு இனிமையையும் சந்தோஷத்தையும் தருகிறது. "புகார்" "சிகந்தர்" முதலிய பெரிய பெரிய படங்களைத் தயாரித்த ஸ்ரீ ஷோரப்மோடி 'ஷீஷ் மஹல்' என்னும் படத்தை அதிக அழகாகவும், குற்றம் குறைகளில்லாமலும் தயாரித்து, அதில் முக்கியமான பாத்திரத்தில், சிலாகிக்கத் தகுந்தபடி நடித்தும் இருக்கிறார்,

'ஷீஷ் மஹலின்' கதை மிகவும் உருக்கமானது. ஒரு பெரிய ராஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்த, தாகூர் ஜஸ்பால் சிங் என்னும் பரந்த நோக்கமுடைய ஒருவர், 'ஷீஷ் மஹல்' என்னும் அவருடைய மாளிகையில், நளினி, ரஞ்ஜனா என்ற இரண்டு பெண்களுடனும், பலராம் என்ற ஒரு மகனுடனும், மிகவும் சிறப்பாக வளர்ந்து வருகிறார். இவருடைய தடபுடலான வாழ்க்கையால், இவருக்கு தலைக்குமேல் கடன் ஏற்பட்டு, இவருடைய விலையுயர்ந்த வீடும் விற்பனையாகி விடுகிறது. தாகூர் ஜஸ்பால் சிங், அவருடைய அந்தஸ்து குறைந்தபோதிலும், மற்றொரு சிறிய வீட்டில் மிகவும் கண்ணியமாக வாழ்க்கையை நடத்தி வருகிறார். இருந்தபோதிலும், இவருடைய அந்தஸ்து குறைந்துவிட்டபடியால், இவருடைய பெண் ரஞ்ஜனாவின் கலியாணம் தடைபெறுகிறது, தாகூர் ஜஸ்பால் சிங்கின் 'ஷீஷமஹல்' என்னும் மாளிகையை ஏழுலட்சம் ரூபாய் கொடுத்து வாங்கின துர்கா பிரஸாத் என்பவர் தன் மனைவி, பெண் ரூபா, மகன் விக்ரம் முதலியவர்களுடன் அங்குவந்து வசிக்கிறார், விதியின் விளையாட்டினால் இம் மாளிகையின் ராணியாயிருந்த ரஞ்ஜனா, அங்கேயே ஒரு வேலைக்காரியாக அமர்ந்து, அக்குடும்பத்தின் நல்ல மதிப்பையும், அன்பையும் பெற்று துர்காபிரஸாதின் மகனை விக்ரம் என்பவனை மணக்கிறாள். இறுதியில், இவ்விரண்டு குடும்பங்களும் ஒன்றுகின்றன

இக்கதையை, டைரக்டர் ஷோரப் மோடி மிகவும் தத்ரூபமாயும், உருக்கமாயும் எடுத்திருக்கிறார், அவர் தகூர் ஜஸ்பால் சிங் வேஷத்தில் அபாரமாக நடித்திருக்கிறார். 'புகார்' என்னும் படத்திற்கு அடுத்தபடியாக, இப்படத்தில் சம்பாஷணை மிகவும் அழகாகவிருக்கிறது, நஸிம் ரஞ்ஜனாகவும் புஷ்பாஹன்ஸ் நளினியாகவும், முபாரக், துர்க்கா பிரஸாதாகவும்,நிகர், ரூபாவாகவும் நடிக்கிறார்கள், அமர்நாத், ஜவஹர்கால், பிரான் முதலியவர்களும் இதில் முக்கிய பாத்திரங்களில் நடிக்கிறார்கள்,

டைரக்டர் ஷோரப் மோடியின் அடுத்த படத்தின் பெயர் 'ஜான்ஸிகிராணி. இது ஒரு சரித்திரக் கதை

சென்ற வாரம் நான் செம்பூருக்குச் சென்றிருந்தபோது, ஸ்ரீ கிஷோர் ஸாஹுவைக் கண்டேன். இவர் பம்பாயில், ஒரு பிரபலநடிகருமல்லாமல், ஒரு சிறந்த படமுதலாளியும், டைரக்டரும்கூட.

"பிஜிலி" என்னும் படத்தை இப்பொழுதுதான் இவர் தயார் செய்து முடித்திருக்கிறார். இப்படத்தை இவருடைய தம்பி சுஷில்சாஹு என்பவர் டைரக்ட் செய்திருக்கிறார். இதில் ரெஹானா, ரமேஷ் குப்தா, சிதாரா, பாரோ, பதிரி பிரஸாத் முதலியவர்கள் நடிக்கிறார்கள். தற்சமயம் கிஷோர் ஸாஹு இரண்டு படங்களை மிகவும் ஜரூராகத் தயார்செய்து வருகிறார். ஒன்றின் பெயர், 'கலிகட்டா' மற்றொன்றின் பெயர் 'ஜன்மாஷ்டமி' 'கலிகட்டா' என்னும் படம் தற்கால வாழ்க்கையை சித்தரிக்கிறது. 'ஜன்மாஷ்டமி' ஸ்ரீ கிருஷ்ணனின் வாழ்க்கையை சித்தரிக்கிறது. இப்படங்களில், அனேகமாக சினிமாவுக்கு புதிதாகச் சேர்ந்தவர்கள்தான் நடிக்கிறார்கள். —தி.மா. ராமச்சந்திரன்.

'தலே பதா'ரில் திறம்பட நடிக்கும் மீனு.

உலக நாடக மேடை

பழந்தமிழ் நாட்டில் நாடகம்

சக்திதாஸன் சுப்பிரமணியன்

பழந்தமிழ் நாட்டைப்பற்றி நமக்குத் தெரிவிக்கும் நூல்களிலே ஒன்று சிலப்பதிகாரம். இந்நூலிலே நாட்டியம், நாடகம், நாடகமேடை அமைப்பு முதலிய விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன இந்த நூலுக்கு உரை எழுதிய உரைகாரர்களும் விஸ்தாரமாகச்சொல்லியிருக்கிறார்கள். இவற்றிலிருந்து நாம் செய்யக்கூடிய முடிவு என்ன? நாடகக் கலை பழந்தமிழருக்குத் தெரியாத விஷயமல்ல என்பது தான். நாடகக்கலைபற்றி ஏராளமான இலக்கண நூல்கள் இருந்திருக்கின்றன. ஆனால், நாடக இலக்கியம் ஏதும் சிறப்பாகக் குறிப்பிடக்கூடிய வகையில் இல்லை.

நாடகக் கொட்டகைக்குக் கூத்துப் பள்ளி என்று பெயர். இந்தக் கூத்துப் பள்ளியானது ஊரின் நடுவே, தேரோடும் வீதிகளுக்கு எதிர்முகமாக இருக்கவேண்டும். கோவில், சாதுக்களின் மடம், சேரி, யானை, குதிரை லாயங்கள், பாம்புப் புற்றுள்ள இடங்கள் இவற்றின் அருகே கூத்துப் பள்ளியை அமைக்கக்கூடாது.

ஆடும் அரங்கமானது எட்டுக்கோல் நீளமும், ஏழுகோல் அகலமும், ஒரு கோல் உயரமும் கொண்டது. அரங்கத்தின் உள்ளே புக ஒரு வழி. வெளியே போக இன்னொரு வழி. நாடகமாடும் இடத்துக்கு 'நாயகப் பத்தி' என்று பெயர். கிரீன் ரூம் என்று இப்போது சொல்கிறோமே, அதற்குக் 'கண்ணுளர் குடிலைப் பள்ளி' என்று பெயர்.

கூத்துப் பார்க்கிற மக்கள் உட்காருமிடத்துக்கு 'அம்பலம்' என்று பெயர். இந்த அரங்கிலே மூன்று விதமான திரைகள் கட்டப்பட்டன. ஒரு முக எழினி, பொருமுக எழினி, கரந்து வரல் எழினி என்று அம்மூன்றுக்கும் பெயர். நாடகத்தில் விடப்படும் திரைக்கு எழினி என்று பெயர்.

உருளையில் கயிறு கட்டி, மேலும், கீழும் இழுக்கிற திரை கரந்துவரல் எழினி. அரங்கின் ஒரு புறத்தில் நி[illegible]றுகொண்டு, கயிறுகொண்டு பக்கவா[illegible]டில் இழுக்கும் திரை ஒருமுக எழினி. இடையிலே இரண்டாகப் பிரிந்து அரங்கின் இருமருங்கிலிருந்தும் தள்ளக்கூடிய திரை பொருமுக எழினி.

இப்படியாக அமைக்கப்பட்ட அரங்கிலே முதன்முதலாக ஆடிய தமிழ் நடிகை மாதவி. இது நாம் இலக்கியத்திலிருந்து தெரிந்து கொள்கிற விஷயம்.

இப்படியாக சிலப்பதிகாரத்திலே விஸ்தாரமாகச் சொல்லப்பட்டாலும், கதையைத் தழுவிய நாடகமானது அந்தக்காலத் தமிழ் மக்களைப் பெரிதும் கவர்ந்ததாகத் தெரியவில்லை.

கூத்தும், ஆடலுமே தமிழ் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தன எனலாம். தெருக்கூத்து, இன்றும், நாட்டுப்புறங்களிலே மக்களின் மனத்தைக் கவர்வது கண்முன் காணப்படும் விஷயம்.

'பல்வகைக் கூத்தும் பதினோராடலும்' என்று இளங்கோ அடிகள் சொல்கிறார், கூத்து பலவகைப்பட்டது, இருப்பினும் சிலப்பதிகாரத்திலே சொல்லப்பட்ட கூத்துகளில் சில இன்றும் தமிழ் நாட்டில் வழக்கத்திலிருக்கின்றன,

குரவைக்கூத்து என்பது ஒரு வகை, குன்றக் குரவை 'என்றும் இதனைச் சொல்வார்கள், குன்றிலே உள்ள குறத்திகள் வட்டமாக நின்று, கைகோத்து ஆடும் கூத்து, இப்போது நம் நாட்டிலே கும்மியடிக்கிறார்களே அந்த மாதிரி,

கலிநடம் என்பது இன்னொருவிதமான கூத்து, தெருச்சந்தியிலே 'பதினறு அடிக்கம்பத்தின்'மேலிருந்து கரணம் தப்பினால் மரணம் என்று சொல்கிறோனே தம்பங்கூத்தாடி, இந்த கூத்துக்குத்தான் கலி நடம் என்று பெயர்,

மாரியம்மன் கோவில் திருவிழாவின் போது பூசாரிகள் கரகம் ஆடுவார்கள், இதற்குக் 'குடக்கூத்து' என்று பெயர்,

'பொய்க்கால் குதிரை நாட்டியம் என்று இப்போது சொல்கிறோமே' இதற்கு மரக்கால் கூத்து என்று பெயர், அதாவது காலிலே மரத்தினால் செய்த கால்களைக் கட்டிக் கொண்டு ஆடுவது,

இது தவிர, பொம்மலாட்டம் என்று இப்போது சொல்கிறோமே இதுவும் அக்காலத்திலிருந்தது, பாவைக் கூத்து என்று அதற்குப் பெயர், இப்படிப் பல்வகைக் கூத்துகள்தான் மக்களிடத்திலே செல்வாக்குப் பெற்றிருந்தன, கூத்தாடிகள் என்று ஓர் இனமே தமிழ் நாட்டில் இன்றும் இருக்கிறது;

தமிழ் நாட்டின் கலைப்பண்பாட்டை உலகுக்கு அறிவித்துக்கொண்டிருப்பவை கோவில்களே. கோவில்கள் தமிழ் நாட்டிலே தோன்றியபின் என்ன ஆயிற்று? ஒவ்வொரு கோவிலிலும் தாசிகள் ஏற்படுத்தப்பட்டார்கள், ஒவ்வொரு ஸ்தல வரலாறும் உற்சவ காலங்களில் நாடகமாக நடிக்கப்பட்டன.

ராஜராஜசோழன் காலத்திலே தஞ்சைப் பெரிய கோவிலில் நாடகம் ஆடுவதற்காக மான்யம் வழங்கப்பட்டிருக்கிறது. இப்போதும்கூட, தஞ்சாவூரிலே அஷ்டக்கொடி உற்சவத்தன்று குறவஞ்சி நாடகம் நடிக்கப்படுகிறது. தமிழ் நாடகம் இந்த அளவில்தான் நின்றுகொண்டிருந்தது.

வட நாட்டிலே ஹிந்து சாம்ராஜ்யங்கள் வளர்ந்தபோது நாடகங்கள் எப்படி வளர்ந்தனவோ, அப்படியாகத் தமிழ் நாட்டிலே நாடகம் வளர்ந்ததாகத் தெரியவில்லை. சம்ஸ்கிருத முறையைப் பின்பற்றிய நாடகங்கள் சில நூற்றுண்டுகள் முன்புதான் தமிழில் வந்திருக்கின்றன.

நாடக மேடையும், நாடகமும் முழு உருவம் பெற்றுத் தமிழ் நாட்டில் உலாவத் தொடங்கியது பிரிட்டிஷாருடைய தொடர்பு ஏற்பட்ட பிறகுதான். பிரிட்டிஷ் தொடர்பால் வட நாட்டினர் விழிப்புற்றனர். வட நாட்டைப் பார்த்துத்தான் நாம் எழுந்திருக்கத் தொடங்கினோம்.

பக்ஷி ராஜாவின் பிரஸன்ன வில் பத்மினி.

இவ்வுலகில் பலருக்கு, நீண்ட ஆயுள் ஆரோக்கியம் பணம் பதவி அதிகாரம் சிற்றின்பம் புத்திரப் பேறு முதலியவை, மந்திரம் தியானம் பிரார்த்தனை உபாசனை இவற்றைச் செய்தாவது பெறவேண்டிய சிறந்த பலன்களாகத் தோன்றுகின்றன. அவ்வாறு தோன்றுவதற்குத் தேகமும் அதன் காரியமாகிய மனமுமே ,தான்' என்று நினைத்து, தேகத்திற்கு அந்நியமான உயிரைப் பற்றிய சிந்தனை தீவிரமாக இல்லாமல் இருப்பதே, காரணமாகும்.

உயிரைப் பற்றிய உணர்வு வரப்பெற்ற பெரியோர், பேறு அல்லது புருஷார்த்தமாகச் சுவர்க்கத்தையும் மோக்ஷத்தையுமேகொள்வர். பொருள் பதவி காரணமாக மண்ணுலகில் சொற்ப காலம் தோன்றி மறையும் இன்பத்தை இன்பமாகவோ, பகுத்தறிவு படைத்த மனிதன் முயன்று பெறவேண்டிய உறுதிப் பேருகவோ, மதிக்கமாட்டார்கள். எனவே கண்ணபிரான் பெரியோர்களால் பாராட்டப்படுகின்ற சுவர்க்க மோக்ஷ பலன்களைப் பெறுவோர் செல்லும் இரு வேறு மார்க்கங்களையும் முன்னே சொன்னர். அதற்கு அடுத்தபடியாக முடிவுரை கூறுகிறார்.

வெளிதுகரி தாயிருமை
மேவியுல கேய்ந்த
அளியநெறி யாங்கவற்றில்
ஒன்ருல்—தெளிவு அமரும்
மீளாப் பதமணையு
மிக்கதனுன் மீண்டுவரும்
கோளாறு தானணையும் கூர்ந்து.

(இ-ள்) வெளிது கரிதாய் இருமை மேவி உலகு எய்ந்த அளிய நெறி- அவற்றில் சுக்ல கதி கிருஷ்ண கதி என இரண்டாகப் பொருந்திய உலகிற்குச் சாசுவதமாய் ஏற்பட்ட மார்க்கங்களில், ஒன்ருல்—ஒரு மார்க்கத்தால், தெளிவு அமரும் மீளா பதம் மிக்கு அணையும்—(மாயையின் கலப்பின்றி) தெளிவுக்கிடமான திரும்பி வரவேண்டாத பதவியை நன்கு (ஒருவன்) அடைவான், அதனல்—(மற்ருெரு) மார்க்கத்தால், மீண்டு வரும் கோள் ஆறுதான் அணையும்—திரும்பிவந்து பிறத்தல் ஆகிய துன்பத்தை(ஒருவன்) அடைவான்,

92
சுக்கில கதியும் கிருஷ்ண கதியும்

★

[1] [2]
சுக்ல க்ருஷ்ண கதீ ஹ்யேதே
[3]
ஜகதச்சாச்வதே மதே
ஏகயா யாத்ய நாவ்ருத்தி
மந்யயாவர்ததே புந:

(இ. ள்,) சுக்ல க்ருஷ்ண—வெளுப்பும் கறுப்புமான,ஹ்யேதே கதீ—இக் கதிகள் இரண்டும், ஜகத:—உலகத்துக்கு, சாச்வதே—சாச்வதங்களாக, மதே—எண்ணப்பட்டிருக்கின்றன, ஏகயா—ஒன்றினுல், அநாவ்ருத்திம்—மீண்டு வராத தன்மையை யாதி அடைகிறுன். அந்யயா—மற்றொன்றுல், புந:—மறுபடியும், ஆவர்(த்)ததே—திரும்புகிறுன்.

'உலகம்' என்பது ஞானம் கர்மம் ஆகிய யோகங்களை அனுஷ்டிக்கும் பெரியோர்களைக் குறிக்கும். அர்ச்சிராதிமார்க்கம் என்று சொல்லப்படும் சுக்ல கதியால் செல்கின்றவர்கள் திரும்புவதில்லை; முக்தியை அடைகின்றனர். தூமாதி மார்க்கம் எனப்படும் கிருஷ்ண கதியில் செல்கின்றவர்கள் நெடுங்காலம் சுவர்க்க இன்பத்தை அநுபவித்தபோதிலும் மறுபடித் திரும்பி வந்து உலகில் பிறக்கிறுர்கள், இருவகையான ஞானிகளும் சுக்ல கதியில் செல்கிறுர்கள் என்றும், புண்ய கர்மம் செய்தவன் கிருஷ்ண கதியில் செல்கிறுன் என்றும் வேதத்தில் சொல்லப்படுகிறது. புண்ய கர்மம் செய்தவன் என்பதற்குப் பலனைப் பகதர்ப்பணம் (தியாகம்) செய்யாமல் கர்மம் செய்தவன் என ஊகித்துக் கொள்ளுதல் பொருத்தமாகவிருக்கும்.

இது காறும் சொல்லப்பட்ட செய்திகளின் அவசியமும் மேன்மையும் மறுபடி ஒரு சுலோகத்தால் மேலும் சொல்லப்படுகின்றன.

இவ்வழிகள் தானறிந்த
யோகியவன் பார்த்தனே
எவ்வழியும் மோகத்
திடையணையான்-அவ்வழியால்
காலம் அனைத்திலு நீ
காதலால் யோகத்தை
ஏல முயல்கண்டா யிங்கு

(இ-ள்) பார்த்தனே!—அர்ஜுனு!, இ வழிகள்—இந்த இரண்டு மார்க்கங்களையும், அறிந்த—தெரிந்துகொண்டிருக்கிற, யோகி அவன்—யோகியானவன், எ வழியும்—எந்த விதத்தாலும் மோகத்திடை அணையான்—(அற்ப பலன்களை விரும்பி) மோகம் அடைவதே யில்லை, அ வழியால்—அவ்வாறிருப்பதன் காரணமாக, நீ—, காலம் அனைத்திலும்—எப்பொழுதும், காதலால்—பிரியத்தோடு, இங்கு—இவ்வுலகில், யோகத்தை—யோக மார்க்கத்தை, ஏல முயல் கண்டாய்—அடையவேண்டிய முயற்சியைத் தெரிந்து கொள்வாயாக.

நைதே ஸ்ம்ருதீ பார்த ஜாநந்
[2]
யோகீ முஹ்யதி கச்சந
தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு
[3] [4]
யோகயுக்தோ பவார்ஜுந

(இ-ள்) பார்(த்)த—அர்ஜுனு!, ஏதே—இந்த, ஸ்ம்ருதீ—மார்க்கங்களை ஜாநன்—அறிகின்ற, யோகீ—யோகியானவன், கச்சந—எவனும்

ஈ. முஹ்யதி—மோக மடைவதில்லை தஸ்மாத்—ஆகையால், அர்ஜுந—அர்ஜுனனே! ஸர்வேஷு—எல்லா, காலேஷு—காலங்களிலும். யோக யுக்த:—யோகத்தோடு கூடியவனும், பவ—ஆகுவாயாக.

நல் ஞானத்தை அடைய முயல்பவனோ அல்லது அறச் செயல்களைப் புரிகின்றவனோ யோகியாவான், அவற்றில் ஒன்றை மேற்கூறிய இரண்டு மார்க்கங்களில் ஏதாயினும் ஒன்றிற்குச் சாதனமாக அனுஷ்டிப்பதாலும் மனம் அவர்களுக்கு வேறொன்றில் பற்றுதிருப்பதாலும் யோகி எனப்படுகின்றனர், பிரும்மத்தை உணர்ந்து அதனால் பிரும்மஞானியாகி விளங்குவோரும் யோகியராவர், அத்தகைய யோகிக்கு வாழ்க்கையில் மற்றையோரால் பாராட்டப்படும் இழிந்த (க்ஷுத்ர) பலன்களால் கலக்கம் உண்டாவதில்லை, உலகத்தார் விரும்பும் பணம் பதவி அதிகாரம் சிற்றின்பம் முதலிய பலன்கள் யோகியர்களுக்கு மோகத்தை விளைவிப்பதில்லை, யோகியர்கள் தாங்களாகவும் அவற்றில் மோகம் கொள்ளுவதில்லை, எனவே அவர்கள் மரணகாலத்தில் பகவானை நினைக்கத் தவறுவதில்லை.

'தஸ்மாத்' (அவ்வழியால்):—'யோகம் மிக மேலான பலனுக்கு ஏற்ற சாதனமாயிருப்பதால்' என்று பொருள் கொள்ளவேண்டும்.

ராமாநுஜ சித்தாந்த ரீதியாக இச் சுலோகத்தின்சாரம் அடியில் வருமாறு சொல்லப்படுகிறது:—'இவ் விருவகை மார்க்கத்தையுமறிந்த யோகியானவன் பிராணப் பிரயாண காலத்தில் (மரணத்தின்போது) ஒருவிதத்தாலும் மோகத்தை யடையமாட்டான்.' தனக்கென்று வகுத்த அர்ச்சியாதி மார்க்கத்தாலேயே போவான். ஆகையால், பார்த்தா! நீயும் பிரதிதினமும் அர்ச்சிராதி மார்க்கத்தைச் சிந்தித்திருப்பதாகிய யோகத்தைச் செய்ய முயல்வாய்!

'க்ஷத்திரியனுக்குரிய தர்மமாகிய இந்த யுத்தத்தை பலனை விரும்பாமல் யோகபாவத்துடன் மேற்கொள்வாய்' என்று கூறியதாகக் கொள்வதும் பிரகரணத்திற்குச் சேரவெடுக்கும் பொருளாகும்.

இவ் வத்தியாயத்திற் கூறப்பட்ட ஞானத்தின் பலனைக் கூறுமுகத்தால் இவ்வத்தியாயத்திற்கு, அடுத்துவரும் கடைசிச் சுலோகத்தில் முடிவுரை கூறப்படுகிறது.

வேதத்தில் வேள்வியினின்
மெய்த்தவத்தில் தானத்தில்
ஓதப் பயனதனை
யுற்றொழிந்து—மீதுபோய்
இந்த வறிவமரும்
யோகிதான் மேன்முதலாம்
அந்த நிலமடையும் அங்கு.

(இ-ள்) இந்த அறிவு அமரும் யோகிதான்—இந்த (இரு) அத்தியாயங்களில் சொல்லப்பட்ட பகவானின் மகிமையை அறிந்த யோகியானவன் வேதத்தில்—வேதங்களிலும், வேள்வியினில்—யக்ஞங்களிலும், மெய் தவத்தில்—சிறந்த தவங்களிலும், தானத்தில்-கொடைகளிலும். ஓது அப்பயன் அதனை-சொல்லப்படுகின்ற எல்லாப் பலன்களையும், உற்று ஒழிந்து—(பெற்றபோதிலும்) அற்ப பலமென்று விட்டு, மீது போய்—அதிக்கிரமித்து, மேன் முதலாம் அந்த நிலம் அடையும்—சிறந்த முதலாவதாகிய அந்த ஸ்தானத்தை அடைகிறான்.

வேதேஷு யஞ்ஞேஷு தபஸ்ஸு
தாநேஷு யத்புண்ய பலம் ப்ரதிஷ்டம் [சைவ
அத்யேதி தத்ஸர்வமிதம் விதித்வா
யோகீ பரம்ஸ்தாந முபைதி சாத்யம்

(இ-ள்) வேதேஷு—(எல்லா) வேதங்களிலும், யக்ஞேஷு—யாகங்களிலும், தபஸ்ஸு—ச ஏவ—தவங்களிலும், தானேஷு—ச—தானங்களிலும், யத்—எந்த, புண்ய பலம்—புண்ணிய பலமானது, ப்ரதிஷ்டம்—சொல்லப்பட்டதோ, இதம்—இதை, விதித்வா—அறிந்து, யோகீ—யோகியானவன், தத்ஸர்வம்—அவை எல்லாவற்றையும், அத்யேதி—அதிக்கிரமிக்கிறான், ஆத்யம்—முதன் முதலான, பரம் ஸ்தானம் பெரிய ஸ்தானத்தையும், உபைதி—அடைகிறான்.

ஞானத்தாலோ கர்மத்தாலோ யோக சித்தியை அடைந்தவனுக்கு லௌகிக பலன்களைப் பெறுவது மிக எளிது. ஆனபோதிலும் அவற்றைப் பெற விரும்பாமல் (அதிக்ரமித்து) மேலான பதவியையே பெறுகிறான்.

'பரம் ஸ்தாநம்' என்பதற்குச் சங்கரர் விஷ்ணுவினுடைய பரம பதமாகிய ஸ்தானத்தை என உரை கூறியுள்ளார். அடுத்த இதழில் இவ்வத்தியாய பலனைக் காண்போம்.

ஸ்ரீ சக்தி ஜோஸியம்

ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ 2
குழந்தை ஜாதகம் சுருக்க பலனுடன் கணிக்க ரூ 2
ஜாதகம் ஒரு வருஷ பலன் மாதவாரியாக எழுத ரூ 6
விவாகப் பொருத்தங்கள் பார்க்க 2 ஜாதகங்களுக்கு ரூ 2.
1 தசாவிற்குபுக்திவாரி-பலன்கள் எழுத ரூ 12

ஜாதகம் OR எழுதும் நேரம், பெயர், தொழில், சுமார் வயது அனுப்புக
N. B. வெளிநாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ். வி. பி பி. தனி.

S. ராமச்சந்திரய்யர்,
ஸ்ரீ சக்தி ஜோஸியம், எரவாஞ்சேரி,
திருவில்லையாட்டம் P-O.
South India.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி" (Regd.)

Phone: 84254.

குழந்தைகளின் சுரல், குலை ஜுரக்கட்டி வியாதிகளைச் சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான் அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
19, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7 சாரங்கபாணி கோவில் கீழ வீதி

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

வாழ்க்கைச் சுழல்.

இந்து

37

பெரிய காம்பவுண்டு அதையடுத்து மா, பலா, தென்னை முதலிய மரங்கள் அங்கங்கே சிமிட்டி பெஞ்சுகள், மேடைகள் பலவித குரோடன்ஸ் செடிகள் இவைகளுக்கு மத்தியில் பிரும்மாண்டமான கட்டிடம் மஞ்சள் வர்ணத்துக்கும் அதற்கும் அவ்வளவு பொருத்தமாக இருந்தது இந்த பங்களாவின் வாசலில்தான் டாக்ஸி வந்து நின்றது

'இந்த மாதிரி நமக்கு ஒரு பங்களா இருந்து இப்படி காரில் நாம்வந்து இறங்கினால்!! ஹூம்! என்ன பேராசை!' என்று பின்னோடு ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டேன். டாக்ஸியை விட்டுக் கீழே இறங்கினோம்

அங்கே எங்கள் வரவை எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்த நளினியும் கோபுவும் நாங்கள் டாக்ஸியை விட்டு இறங்கியவுடனே எங்களை உள்ளே அழைத்துச் சென்றார்கள்

பங்களா முழுவதையும் சுற்றிக் காண்பித்தார்கள்

'எப்படி இருக்கிறது?' என்றார் கோபு, என் கணவரைப் பார்த்து.

'பேஷாக இருக்கிறது!' என்றார் என் கணவர்.

'உங்களுக்கு சௌகரியந்தானா?' என்றார் கோபு.

'அப்படி என்றால்?' என்றார் என் கணவர்.

'உங்களுக்காக இதை விலை பேசி இருக்கிறேன்' என்றார் கோபு.

'என்னது?' என்றார் என் கணவர்.

'உங்களுக்காக இதை விலைக்கு வாங்குகிறேன்' என்றார் கோபு

'என்னது?' என்றார் மறுபடியும் என் கணவர்.

'ஒன்றுமில்லை; பயந்துவிட வேண்டாம் நான் ஏற்கனவே முடிவு செய்த விஷயம். நேற்று நாம் பார்த்த பங்களாவை எனக்காக வாங்கிவிட்டேன். இதை உங்களுக்காக வாங்குகிறேன்' என்றார் கோபு.

'விலை?'

'நாற்பத்தையாயிரம் ரூபாய்'

'என்ன கோபு இதெல்லாம்?'

"ஒன்றுமில்லை. நான் ஏற்கனவே முடிவு செய்த விஷயமதான் புதிது ஒன்றுமில்லை இடம் பிடித்திருக்கிறதல்லவா?'

'பிடித்திருக்கிறதாவது! இந்திர பவனம் மாதிரி இருக்கிறது

'அவ்வளவுதான் வேண்டியது; நாளைக்கே நீங்கள் இதில் குடி வந்துவிடலாம் மோட்டாருக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறேன் இன்று மத்தியானம் வந்துவிடும், மேஜை, நாற்காலி, பீரோ, ஸோபா முதலியவைகளுக்கும் ஆர்டர் கொடுத்திருக்கிறேன்; அவை இப்பொழுது வந்துவிடும்' என்று கோபு சொல்லி வாய் மூடுவதற்குள், தெருவில் மேற்சொல்லப்பட்ட சாமான்களுடன் ஒரு லாரி வந்து நின்றது.

என் பாடு பிரமித்துவிட்டது உண்மையில் நான் இதை நம்பியே இருக்கமாட்டேன் ஆனால், இராத்திரியே இதை எல்லாம் என் கணவர் என்னிடம் சொல்லியிருந்தாரல்லவா? அதனால் நம்பினேனேயொழிய எனக்காவது பங்களா, மோட்டார்...! நன்றாக இருக்கிறது! யாரிடமாவது சொன்னால் சிரிப்பார்கள் என்றுதான் நான் எண்ணுவேன்.

சொப்பனத்தில்கூட நினைக்காத விஷயங்கள் நடந்துவிடுகிறது என்று சொல்கிறார்களே இந்த மாதிரி விஷயங்களைத்தான் போலிருக்கிறது!

என் உடம்பை நானே ஒருதரம் பார்த்துக்கொண்டேன். ஒரு 'சுற்று' பருத்துவிட்ட மாதிரிதான் தெரிந்தது நல்லவேளை, சந்தோஷத்தின் மிகுதியினால் கைகள் பருத்து சகுந்தலையின் வளையல்கள் உடைந்துவிட்டதென்று சாகுந்தல நாடகத்தில் கவி வர்ணித்திருக்கிறாரே, அந்த மாதிரி என் வளையல்கள் உடையவில்லை.

அதே சமயத்தில் என் கணவரும் என்னைப் பார்த்து, லேசாக ஒரு சிரிப்பு சிரித்தார்.

'அதெல்லாம் பலே ஜோராய் இருக்கிறாய்!! பெரிய மனிதர்களுக்குள்ள கலையெல்லாம் வந்துவிட்டது', என்று சொல்லிப் பரிகாசம் செய்கிறமாதிரி இருந்தது அந்தச் சிரிப்பு.

உடனே லாரியிலிருந்த சாமான்களெல்லாம் இறக்கப்பட்டு, உள்ளேகொண்டு சேர்க்கப்பட்டன

நாற்பத்தையாயிரம் ரூபாய் பங்களா கையில் ரொக்கம் லக்ஷம் ரூபாய். அழகிய கார் இது தவிர வியாபாரத்தில் லாபத்தில் பங்கு! ஆகா! திருஷ்டிபடாமல் இருக்கவேண்டுமேயென்று கடவுளை வேண்டிக்கொண்டேன்

உலகத்தில் இது ஸகஜம். பணக்காரனாக இருப்பவனுக்கு மேலும் மேலும் லக்ஷக்கணக்கில் பணம் வந்து குவிந்துகொண்டே இருந்தால், ஜனங்கள் அதைக் கொஞ்சம்கூடப் பொருள்படுத்தவே மாட்டார்கள் அது பிராப்தம் என்றே நினைத்து அதைப்பற்றிக் காதில் போட்டுக் கொள்ளாமல் இருந்துவிடுவார்கள் ஆனால், ஒரு ஏழைக்கு திடீரென்று ஒரு ஐச்வரியம் வந்துவிட்டால். ஜனங்கள் சும்மா இருக்கமாட்டார்கள், விண்டு விரிந்து விடுவார்கள் தாங்கள் ஒன்றும் கைவிட்டுக் கொடுத்துவிடவில்லை இதனால் அவர்களுக்கு நன்மையே தவிர, தீமை இல்லை ஒரு. ஏழையின் தொந்தரவு விட்டது; இருந்தாலும் இது

மனித சுபாவம் அதனால்தான் திருஷ்டிபடாமல் இருக்கவேண்டுமேயென்று கடவுளை வேண்டிக்கொண்டேன்.

வீட்டுக்காரமாமி மாத்திரம் அடிக்கடி சொல்வதுண்டு. 'இந்தக் காலம் இப்படியே போய்விடாதடியம்மா நீமிகவும் பொறுமைசாலி; ஒரு நாளைக்கு நல்ல காலம் வந்தே தீரவேண்டும் வரத்தான்போகிறது இப்பொழுது தெரியாது, அப்பொழுதாவது நினைக்கமாட்டாயா. மாமி சொன்னாளேயென்று? பொறுத்தவர் பூமியாள்வார் என்று சொல்வதில்லையா?' என்று சொல்லுவாள்

நான் ஏதோ கண் துடைப்புக்காகச் சொல்லுகிறாள் என்று அலக்ஷ்யமாய் இருந்துவிடுவேன்

ஆனால் ஒன்றுமாத்திரம் நான் நினைத்ததுண்டு. என் கலியாணத்தையொட்டி என் கணவருடைய ஜாதகத்தையும் உன்னுடைய ஜாதகத்தையும் ஒத்திட்டுப்பார்த்த ஜோஸ்யர்களெல்லாம் ஒருவர் தவறாமல் 'இதுயோக ஜாதகம், பிரமாதமான, அந்தஸ்தில் இருக்கப் போகிறாள்' என்று சொன்னார்களே அது பொய்த்துப் போகுமா? அப்படியானால் ஜோஸ்யம் என்பது வெறும் ஹம்பக்கா?' என்று நான் நினைப்பதுண்டு

இப்பொழுதுதான் அவர்கள் சொன்னதெல்லாம் சிறிதுகூடப் பிசகில்லை, நூற்றுக்கு நூறு சரி என்பது தெரிகிறது.

'நம்ம ரகு நாளைக்கே ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதிக்கப் போகிறான் இந்தப் பிசாத்துக் கடன்களையெல்லாம் அப்பொழுது ஊதித் தள்ளிவிடமாட்டேனா? என்று மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்த மாமனார் இந்த ஸ்திதியைப் பார்த்து மகிழ உயிருடன் இல்லையே என்ற ஒரு குறை மாத்திரம் எனக்கு அப்பொழுது ஏற்பட்டது. கலாவின் அகமுடையானைப்பற்றிய விசாரம் தீர்ந்துவிட்டது; நடுக்கமுனி, நடுக்கமுனி' என்று நாம் ஸ்மரணை செய்துகொண்டிருந்த அந்த நடுக்கமுனியும் கைக்கு வந்துவிட்டது 'யாரோ, சினிமாக்காரியின் பின்னால் சுற்றிக்கொண்டிருக்கிறார்' என்ற அபவாதமும் நீங்கிவிட்டது இந்தமாதிரியான ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறதைப் பார்க்க மாமியாரின் மனம் எப்படித்தான் இருக்கும்? இதைக் கேட்டவுடனே அவர் மூர்ச்சை கிர்ச்சை போட்டு விழாமலிருக்கவேண்டுமேயென்றுதான் எனக்குத் தோன்றிற்று ஆகவே இதைப்பற்றி மாமியாரிடம் சொல்லும்போது ஜாக்கிரதையாகச் சொல்லும்படி என் கணவரிடம் எச்சரித்தேன்

பின்னர் ஒரு வாரத்துக்கெல்லாம் பங்களாவில் பிரவேசம் செய்வதற்கு நல்ல நாள் பார்க்கப்பட்டது.

கிருஹப்பிரவேசத்துக்கு நண்பர்கள், பந்துக்கள் எல்லோருக்கும் அழைப்புகள் அனுப்பியிருந்தோம். எல்லோரும் வந்திருந்தார்கள் நல்ல வேளையில் பங்களா பிரவேசம் செய்தோம்.

என் பெற்றோர்களின் சந்தோஷத்தைச் சொல்லிமுடியாது.

வீட்டுக்கார மாமிக்கு மாத்திரம் அசாத்ய குறைபாவம் நாங்கள் பங்களாவுக்கு வந்துவிட்டபிறகு, அவளுக்குப் பொழுதே போகவில்லையாம் உண்மையாகவே பாவம். தன்னுடைய சொந்த பெண் மாதிரியே நினைத்து என்னிடம் பழகிவிட்டாள் 'நாங்களும் என்னைக் குடிக்கூலிக்கு இருக்கிறவள் என்று நினைக்கவில்லை நீயும் என்னை வீட்டின் சொந்தக்காரி என்று நினைத்துப் பயோ பிசாசோ



என்று பயப்படவில்லை இரண்டு பேரும் அவ்வளவு அந்நியோன்யமாக இருந்தோம். இனி யார் இந்தமாதிரி வரப் போகிருர்கள்? பங்களா என்னவோ விசாலமாக இருக்கிறது எங்கள் வீட்டை முழுவதும் வாடகைக்கு விட்டுவிட்டுப் பேசாமல் நாங்களும் இங்கேயேவந்துவிடுகிரேம், என்பாள் சிரித்துக்கொண்டே, அப்படிப்பட்ட ஒரு ஆசை வைத்துவிட்டாள் பாவம் என்னிடத்தில்

அவளுக்கு இன்னெருகுறையும் இருந்துவந்தது எனக்கு நல்லதைச் செய்யப் போய் அது விபரீதமாக வந்து முடிந்ததே என்ற வருத்தம் அவள் மனதைவிட்டு அகலவே இல்லை—அதுதான் அந்தப் புகைப்படக்கத்தரிப்பு வேலை தான்

'நான் செய்தது தவறுதான் இருந்தாலும் இனி இது எல்லோருக்கும் ஒரு பாடமாகவாவது இருக்கட்டும் என்பாள் சிரித்துக்கொண்டே.

நாட்களுக்கென்ன, கிடுகிடுவென்று ஓடிக்கொண்டிருக்கிறது

இதன் மத்தியில் அரசியல் கைதிகளெல்லாம் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள் கனகாவின் அகத்துக்காரர் மீதிருந்த கைது வாரண்டும் ரத்து செய்யப்பட்டு விட்டது.

இருந்தாலும் கனகாவின் அகத்துக்காரர், அந்த ஜோஸ்யத் தொழிலே நன்ருக இருக்கிறதென்றும் அதில் நல்ல வருமானம் வருகிறதென்றும் ஆகவே அப்படியே 'நமது பக்தன் 'பெயரைச் சொல்லிக்கொண்டு காலத்தைக் கழிக்க முடிவு செய்துவிட்டதாகத் தெரிவித்துவிட்டார். என் கணவரும் அதுதான் சரியான யோசனை என்று சொல்லி விட்டார்.

அன்று எங்கள் சிறிய நாத்தனர் வஸந்தா டில்லியிலிருந்து வந்திருந்தாள். அவள் அகத்துக்காரருக்கு டில்லியில் சர்க்கார் காரியாலயத்தில் உத்யோகம்.

அவள் வரும்போது என்னுடைய பெண் ஜெயாவும் நானும் தெரு வராண்டாவில் நின்றுகொண்டிருந்தோம். ஜெயாவை அவள் பார்த்து ஐந்தாறு வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

'ஜெயாவாடி இவள்? அடையாளமே தெரியவில்லையே. உயர்ந்திருக்கிருள் இவள் எந்தக்காலேஜில் படிக்கிருள்?' என்று கேட்டாள் என்னை

'இன்னும் காலேஜுக்குப் போகவில்லை என்றேன்.

'நிஜமாகவா!' என்ருள்.

ஏன்? என்ன சந்தேகம் வந்துவிட்டது?' என்றேன்.

'சந்தேகம்தான் வந்துவிட்டது. நகத்தைக் கடிக்கிருளே பின்னே!' என்ருள்.

'அதுவா! என்னடா அப்பா என்று பார்த்தேன். அதெல்லாம் உங்கள் காலத்திலும் என் காலத்திலும், காலேஜில் படிக்கும் பெண்கள்தான் நகத்தைக் கடிப்பார்கள் என்பது, இப்பொழுதெல்லாம் பள்ளிக்கூடத்தில் சேரும்பொழுதே பசங்கள் நகத்தைக் கடித்துக் கடித்துப் பக்கத்தில் வருகிறவர்கள்கூடத் தெரியாமல் தூ தூ என்று உமிழ்ந்துகொண்டிருக்கிறதுகள்; இப்பொழுதெல்லாம் காதில் ஒரு 'தோசைக் கல்லும்' கழுத்தில் ஒரு முத்துச்சரமும் கட்டிக்கொண்டிருந்தால் ஒருவாறு காலேஜில் படிக்கும் பெண்கள் என்று ஊகிக்கலாம், என்றேன்.

'அப்படியா அது?' என்று சிரித்துவிட்டு, 'இவள் எந்த வகுப்பில் படிக்கிருள்?' என்ருள்

'எஸ் எஸ் எல் ஸி பரீக்ஷை எழுதியிருக்கிருள்' என்றேன்

'மேலே காலேஜில் படிப்பதாக உத்தேசம் உண்டோ லியோ?' என்ருள்.

'நான் இத்துடன் போறும்; நல்லதாக ஒரு வரனைப் பார்த்துக் கலியாணம் செய்துகொடுத்துவிடலாம் என்கிறேன் அவள் தகப்பனர் காலேஜில் படிக்கவேண்டுமென்கிருர். அவளும் மேலே படிக்கவேண்டுமென்கிருள்' என்றேன்.

'படிக்கட்டுமடி படிக்கட்டும் இப்பொழுதெல்லாம் பெண்கள் படிப்புதான் அமர்க்களப்படுகிறதே. படிக்கட்டும் நிறுத்தவேண்டாம் அதற்கென்ன? நல்லதாக ஏதாவது வரன் குதிர்ந்து கலியாணம்ஆனல் அப்பொழுது தான் நிறுத்திவிட்டால் போகிறது இப்பொழுது திடுதிப்பென்று நிறுத்திவிட்டால் உடனே கலியாணமாளுல் போயிற்று; இல்லையென்ருல் அதுகளுக்கும் பொழுது போகவேண்டுமோ லியோ? படிக்கட்டும். படிக்கட்டும்' என்ருள்.

தன் கக்ஷியை ஆதரிக்கிருளே யென்று ஜெயாவுக்குச் சந்தோஷம்.

(முற்றும்)



"அப்பா; நீ ஆபீசுக்குப் போயிருக்கச்சே நான் பாடினேன் அதுக்கு அம்மா 'டான்ஸ்' பண்ணிஞ! இன்னெருதரம் பண்ணச் சொல்லுப்பா!



பயிற்சி 25-अभ्यास 25

விடைகள்-उत्तर

(அ)

1. நீங்கள் இதைப் படிப்பீர்களே யாகில் (படித்தால்) உங்களுக்கு எல்லா விஷயங்களும் தெரியவரும் (தெரியும்).

2. எவன் பார்ப்பானோ, அவனே எடுப்பான்.

3. நீ அங்கே நேரம் கழித்துப் போவாயாகையால், அது உனக்குக் கிடைக்காது.

4. அவன் அதை வாங்குவானென்ற போதிலும், அதன் உபயோகத்தைச் செய்யமாட்டான் (அதை உபயோகிக்க மாட்டான்).

5. எத்தனை நாற்காலிகளை நீங்கள் கொண்டு வருவீர்களோ, அத்தனை நாற்காலிகளை நானும் கொண்டு வருவேன்.

6. எங்கே ஸுகம் இருக்குமோ, அங்கே துக்கமும் இருக்கும்.

7. எத்தகைய வேலையைச் செய்கிறீர்களோ, அத்தகைய பலனையும் அடைவீர்கள்.

8. எப்பொழுது முதல் (எது முதல்) அவன் உழைக்கிறானோ, அப்பொழுது முதல் (அது முதல்) அவனுக்கு ருபாயும் கிடைக்கும்.

9. ஸீதா, எவனை நீ இப்பொழுது கூப்பிடுவாயோ, அவன் தான் (அவனே) வருவான்.

10. இங்கே ராமனும் வரமாட்டான், கோபாலனும் வரமாட்டான்.

(ஆ)

1. क्या, तुम वहाँ रोज़ जाओगे ?

2. वे कितने बजे नहाएँगे ?

3. अमेरिका अब क्या करेगा ?

4. अगले दिसंबर में वह कहाँ रहेगा ?

5. तो मालिनी क्या खाएगी ?

6. आप उस सभा में क्या बोलेंगे ?

7. उनके साथ कितनी लड़कियाँ आएँगी ?

8. ये लड़के कहाँ खेलेंगे ?

9. क्या, आप इनाम देंगे ?

10. हम उसे लेंगे।

பாடம் 26-पाठ 26

(அ) இலக்கணம்-व्याकरण

ஸந்தேஹ எதிர்காலம்

(Future Subjunctive)

'வருவான்', 'போவான்', 'பார்ப்போம்' என்பவை ஸாதாரண எதிர் கால வினைச் சொற்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

'வரலாம்', போகலாம்', 'பார்க்கலாம்' என்பவையும் எதிர்கால வினைச் சொற்களே. ஆனால் இவை ஸாதாரண எதிர்கால வினைச்சொற்கள் அல்ல; இவை ஸந்தேஹ எதிர்கால வினைச் சொற்கள்' எனப்படும்.

ஸாதாரண எதிர்கால வினைச்சொற்களுக்கும், ஸந்தேஹ எதிர்கால வினைச் சொற்களுக்குமுள்ள வித்தியாசங்களை கவனியுங்கள். 'ராமன் வருவான்' என்று சொல்லும்போது, ராமன் வருவது நிச்சயம்' என்பதில் நமக்குள்ள தெளிவான நம்பிக்கையைத் தெரிவிக்கிறோம். 'ராமன் வரலாம்' என்று சொல்லும்போது ராமன் வருவதற்கான ஸந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால் அவன் வருவானோ, வரமாட்டானோ என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. எனினும் அநேகமாக 'வரக்கூடும் என்றுதான் தோன்றுகிறது' என்ற முறையில் சிறிது ஸந்தேஹம் கலந்த நம்பிக்கையைத் தெரிவிக்கிறோம், இந்தத் தெரிவிக்கும் வினைச் சொல்லின்காலத்தைத்தான்'ஸந்தேஹ எதிர்காலம்' (Future Subjunctive) என்கிறோம். இந்தப்பரிபாஷையின்படி பார்த்தால், 'வரலாம்' 'போகலாம்' 'பார்க்கலாம்' என்பவையெல்லாம் ஸந்தேஹ எதிர்கால வினைச்சொற்கள் என்பது விளங்கும்.

ஹிந்தியில் இத்தகைய ஸந்தேஹ எதிர்கால வாக்யங்களை அமைக்கும் விதம் கீழ்க்கண்ட பட்டியலில் விளக்கப்பட்டிருக்கிறது.

ஸந்தேஹ எதிர்காலம் (Future-Subjunctive)

ஆண்—பெண் பால்கள் (Masculine & Feminine Genders)

வினைப்பகுதி : आ—வா

இடம் (Person)	ஒருமை (Singular)	பன்மை (Plural)
தன்மை (I Person)	मैं आऊ நான் வரலாம்,	हम आएँ நாம் (நாங்கள்) வரலாம்.
முன்னிலை (II Person)	तू आए நீ வரலாம்.	तुम आओ நீர் வரலாம். आप आएँ நீங்கள் (தாங்கள்) வரலாம்.
படர்க்கை (III Person)	यह आए அவன் (அவள், அது) வரலாம். यह आए இவன் (இவள், இது) வரலாம்.	वे आएँ அவர் (அவர்கள், அவைகள்) வரலாம். ये आएँ இவர் (இவர்கள், இவைகள்) வரலாம்.

இந்தப்பட்டியல் உங்களுக்கு முற்றிலும் புதிதாக இருக்க முடியாது. ஸாதாரண எதிர்காலத்துக்கான ஆண்பால்-பெண்பால் பட்டியல்களிலுள்ள வாக்யங்களைக் கவனியுங்கள். அந்த வாக்யங்களின் முடிவிலுள்ள गा, गे அல்லது गी என்ற எழுத்துக்களை மாத்ரம் விட்டு விட்டுப் புதிதாகத் தயாரிக்கப்பட்ட பட்டியல்தான் ஸந்தேஹ எதிர்காலத்துக்கான இந்தப் பட்டியல்.

எனவே ஸாதாரண எதிர்கால வாக்யங்களின் முடிவிலுள்ள गा, गे அல்லது गी யை மட்டும் விட்டு விட்டால், ஸந்தேஹ எதிர்காலத்துக்கான வாக்யங்கள் கிடைக்கும். இந்த விதி आ என்ற வினைப்பகுதிக்கு மட்டுமல்ல; எல்லா வினைப் பகுதிகளுக்குமே பொருந்தும்.

இன்னொரு விசேஷம்: ஸந்தேஹ எதிர்காலத்தைப் பொறுத்தவரையில் வாக்யங்களின் ரூபங்களில் ஆண்பால்-பெண்பால் என்ற வித்தியாசம் கிடையாது; ஒரே மாதிரி வாக்யங்கள் தாம் இரண்டு பால்களிலும் வழங்குகின்றன.

ஸாதாரண எதிர்கால வினைச் சொற்களுக்குச் சொன்னதுபோல், ஸந்தேஹ எதிர்கால வினைச் சொற்களுக்கும், முடிவில் ए என்ற ஆண்பால் ஒருமை விகுதி எழுத்துக்குப் பதிலாக ये, य, அல்லது वे என்ற ஏதேனுமொரு எழுத்தும், एँ என்ற ஆண்பால் பன்மை விகுதி எழுத்துக்குப் பதிலாக यें, यँ, அல்லது वें என்ற ஏதேனுமொரு எழுத்தும் உபயோகப்படலாம்.

(உ—ம்)

वह आए, वह आये, वह आय, वह आवे
वे आएँ, वे आयें, वे आयँ, वे आवें

ஸந்தேஹ எதிர்கால வினைச் சொற்கள் உத்தரவு, புத்திமதி, அனுமதி, நோக்கம், விருப்பம், வேண்டுகோள், நிபந்தனை, குழப்பம், ஸந்தேஹம், ஸஷ்யம், முதலியவற்றைத் தெரிவிக்க உபயோகப்படுகின்றன.

(உ—ம்)

लड़का आज बाहर न जाए।

—பையன் இன்று வெளியே போக வேண்டாம் (உத்தரவு)

आप रोज़ कसरत करें।

—நீங்கள் தினந்தோறும் கஸ்ரத் செய்யுங்களேன், (புத்திமதி)

पिताजी, मैं अब खेलने जाऊँ ?

LOOK!
6 YDS SAREE
RS.3/12 only

அழகிய பட்டு & நூல் புடவைகள் வசீகரமான டிசைன்களில் அபூர்வ கலர்களில் மிக மலிவான விலைகளில் கிடைக்கும்.

உங்கள் வீட்டில் டெலிவரி வி. பி. பி. யில் கிடைக்கும். தபால், பாக்கிங் செலவு அணா 12 பிரத்யேகம்.

கெட்டிச் சாயத்திற்கு உத்தரவாதம் திருப்தியில்லையில் பணம் வாபஸ்.

நூல் புடவை 6 கெஜம். பிளெயின் அல்லது கலர்	ரூ.	3-12
நூல் புடவை 6 கெஜம் கலர் ஜரிகை பார்டருடன்	ரூ.	6-8
நூல் புடவை 9 கெஜம், பிளெயின், அல்லது கலர்	ரூ.	9-0
பட்டுப் புடவை 6 கெஜம் பிளெயின், கலர்	ரூ.	7-4
பட்டுப் புடவை பூ டிசைன் அச்சடித்தது	ரூ.	8-8

ஸ்பெஷல்

சேர்ந்தாற்போல் ஏதேனும் இரண்டு புடவைகள் வாங்கினால் தபால், பாக்கிங் செலவு இலவசம்.

மூன்று புடவைகள் சேர்த்து வாங்கினால் தபால் பாக்கிங் செலவு இல்லாததுடன் ஒரு சென்ட் புட்டி இலவசம்.

ATTRACTIVE GIFT MART
D 25. P. Box 3607, BOMBAY-4

ஆரூடம்! ஜாதக பலன்!!

ஜனன கால விவரம் அல்லது முழுப் பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் தேவை. 1 முதல் 5 எதிர்காலக் கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூபா 6. முக்கிய யோகாம்சங்களும் சுருக்கமான பலனுடன் ஒரு ஜாதக குறிப்புக்கு ரூ. 5. ஒரு தசைக்கு புக்திவாரி பலன் எழுத ரூ. 10 கிரஹசார தோஷம் நீங்கி, சகல நன்மைகளும் உண்டாவதற்கு "விஜய ரக்ஷணி" கவசம் 1-க்கு ரூ. 7-8-0. பிரத்யேக ரக்ஷை ரூ. 72-8. வி. பி செலவு தனி

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist,
Triplicane .:. Madras 5.

—அப்பா, நான் இப்பொழுது விளையாடப் போகலாமா? (அனுமதி)

खूब गाओ ताकि तुमको इनाम मिले।

—உனக்குப் பரிசு கிடைக்கும் படி நன்முகப் பாடு (Sing well so that you may get the prize) (நோக்கம்.)

सत्य की जय हो!

—ஸத்யத்தின் (ஸத்யத்துக்கு) ஜயம் உண்டாகட்டும்! (விருப்பம்)

कृपा करके आप मुझे खाना दें!

—தயவு செய்து தாங்கள் எனக்கு உணவு அளிப்பீர்களாக! (வேண்டுகோள்)

अगर वह यहाँ आए, तो मैं उसको रुपया दूँगा।

—அவன் இங்கே வந்தால் நான் அவனுக்கு ருபாய் கொடுப்பேன் (அவன் இங்கே வருவது ஸந்தேஹம்தான்; எனினும் வந்தால், நான் ருபாய் கொடுப்பேன் என்பது கருத்து) (நிபந்தனை)

[இத்தகைய நிபந்தனை வாக்யங்களில் ஸந்தேஹ எதிர்கால வினைச் சொல்லுக்குப்பின் तो என்ற வார்த்தை கட்டாயம் வரும். வாக்யத்தின் ஆரம்பத்தில் 'ஆல் (If)' என்று பொருள்படும் अगर அல்லது यदि என்ற வார்த்தை வந்தாலும் வரலாம், வராவிட்டாலும் இல்லை.]

अब मैं क्या करूँ?

—இப்பொழுது நான் என்ன செய்யலாம்? (குழப்பம்)

मुझे क्या मालूम कि वह रोटी खाए या भात खाए?

—அவன் ரொட்டி சாப்பிடுவானு அல்லது சாதம் சாப்பிடுவானு என்பது எனக்கு என்ன தெரியும்? (ஸந்தேஹம்)

शायद वही नौकर हो!

—ஒருவேளை அவனே வேலைக்காரனுக இருக்கலாம்! (ஸம்சயம்)

(ஆ) கட்டுரை—लेख

गाय की ज़रूरत

हमारे नेता लोग रोज़ अपील करते हैं कि हम सब गाय की ज़रूरत समझें और उसकी खूब सेवा करें। सचमुच हमारे देश में कोई ऐसा नहीं होगा जो गाय को प्यार न करे। आप ज़रा गाँवों में जाकर देखें, तो आपको मालूम होगा कि ग्रामीण लोग गाय को कितना प्यार करते हैं। वे लोग उसे माँ के बराबर मानते हैं, गो-माता कहते हैं और कभी-कभी उसकी पूजा भी करते हैं।

गाय एक सीधी-सादी जानवर है। उसके दो सींग और चार पैर होते हैं। उसकी एक लंबी पूँछ भी होती है।

गाय हमको दूध देती है। गाय का दूध तंदुरुस्ती के लिए बहुत अच्छा होता है। हम लोग रोज़ दूध पीते हैं।

दूध से बहुत चीज़ें बनती हैं। दही, मट्ठा, मक्खन, घी, सब दूध ही से बनते हैं। दूध से हम तरह-तरह की मिठाइयाँ बनाते हैं। चाय और काफ़ी बनाने में भी दूध काम आता है। आजकल कौन ऐसा हो सकता है जो दूध, चाय या काफ़ी न पीए?

चरवाहा रोज़ गाय को मैदान में ले जाता है। वहाँ उसे चराता है। गाय मैदान में घास चरती है। शाम को वह घर लौटती है।

हम गाय को चारा खिलाते हैं और पानी पिलाते हैं। गाय कई चीज़ें खाती है। खली, बिनौला, घास, फूस वग़ैरह उसको बहुत पसंद हैं। गाय बहुत उपयोगी जानवर है। अगर हम उसको खूब खिला-पिलाकर रखें, तो उससे हमको बहुत लाभ हो सकते हैं

गाय के बछड़े बहुत सुंदर हैं। बछड़े बड़े होकर बैल बनते हैं। बैल भी बहुत उपयोगी जानवर हैं। बैल खेत जोतते हैं और गाड़ी खींचते हैं।

गाय और बैल हमारे लिए बहुत ज़रूरी हैं। यही कारण है कि गो-सेवा महात्मा जी के रचनात्मक कार्यक्रम का एक मुख्य अंग है।

தமிழில் இதே கட்டுரை
பசுவின் அவச்யம்

நாமெல்லோரும் பசுவின் அவச்யத்தை உணரவேண்டும் (மேலும்) அதற்கு நன்முகத் தொண்டு செய்ய வேண்டும் என்று நம் தலைவர்கள்

தினந்தோறும் வேண்டிக்கொள்கிருர்கள். உண்மையில், எவன் பசுவை நேசிக்கமாட்டானே, அத்தகைய எவனும் நம் நாட்டில் இருக்கமாட்டான். (உண்மையில். பசுவை நேசிக்காத எவனும் நம் நாட்டில் இருக்கமாட்டான்,) நீங்கள் சற்று க்ராமங்களில் போய்ப் பார்த்தால், க்ராமத்து ஜனங்கள் பசுவை எவ்வளவு நேசிக்கிருர்களென்பது உங்களுக்குத் தெரிய வரும், அவர்கள் அதைத் தாய்க்கு ஸமமாகக் கருதுகிருர்கள், 'கோ-மாதா' (பசுத்தாய்) என்கிருர்கள் (மேலும்) சிற்சில ஸமயங்களில் அதற்குப் பூஜையும் செய்கிருர்கள்;

பசு ஒரு நேர்மையுள்ள, எளிமையுள்ள (கள்ளங்கபடமற்ற) மிருகம், அதற்கு இரண்டு கொம்புகளும், நான்கு கால்களும் உள்ளன. அதற்கு ஒரு நீண்ட வாலும் இருக்கிறது.

பசு நமக்குப் பால் கொடுக்கிறது. பசுவின் பால் ஆரோக்யத்துக்கு மிகவும் நல்லது. நாமெல்லோரும் தினந்தோறும் பால் குடிக்கிறோம்.

பாலிலிருந்து வெகு பொருள்கள் தயாராகின்றன, தயிர், மோர், வெண்ணெய், நெய், எல்லாம் பாலிலிருந்து தான் தயாராகின்றன. பாலினுல் நாம் விதவிதமான மிட்டாய்கள் தயாரிக்கிறோம், டீ, காப்பி தயாரிப்பதிலும் பால் உபயோகப்படுகிறது. தற்காலம் பாலோ, டீயோ அல்லது காப்பியோ குடிக்காதவன் எவன் இருக்க முடியும்?

மேய்ப்பவன் தினந்தோறும் பசுவை மைதானத்துக்கு எடுத்துச் செல்கிருன் (ஓட்டிச் செல்கிருன்.) அங்கே அதை மேய்க்கிருன். பசு மைதானத்தில் புல் மேய்கிறது. மாலையில் அது வீடு திரும்புகிறது.

நாம் பசுவைத் தீனி தின்ன வைக்கிறோம் (மேலும்) தண்ணீர் குடிக்க வைக்கிறோம் (பசுவுக்குத் தீனி போடுகிறோம்; தண்ணீர் காட்டுகிறோம்.) பசு பல பொருள்களைத் தின்கிறது. பிண்ணுக்கு, பருத்திக்கொட்டை, புல், வைக்கோல் முதலியவை அதற்கு மிகவும் பிடித்தமானவை. பசு மிகவும் உபயோகமுள்ள மிருகம். நாம் அதற்கு நன்முகத் (தீனி) போட்டு, (தண்ணீர்) காட்டி வைத்துக்கொள்வோமானுல் (வைத்துக்கொண்டால்), அதனுல் நமக்கு அநேக லாபங்கள் ஏற்பட முடியும்.

பசுவின் கன்றுகள் மிகவும் அழகானவை. (ஆண்) கன்றுகள் பெரியவைகளாகி (வளர்ந்து) காளைகள் ஆகின்றன. காளைகளும் மிகவும் உபயோகமுள்ள மிருகங்கள். காளைகள் வயலை உழுகின்றன (மேலும்) வண்டி இழுக்கின்றன.

பசுவும், காளையும் நமக்கு மிகவும் அவச்யமானவை. 'கோ — ஸேவா' (பசுவுக்குத் தொண்டு) (என்பது) மகாத்மாஜீயினுடைய நிர்மாண வேலைத் திட்டத்தின் ஒரு முக்யமான உறுப்பாக இருப்பது இதே காரணத்தினுல் தான்.

(இ) குறிப்புக்கள்-नोट

1. ஸந்தேஹம் கலந்த நம்பிக்கையைத் தெரிவிக்கும் எதிர்கால வினைச் சொல்லின் காலத்தை 'ஸந்தேஹ எதிர்காலம்' என்கிறோம்.

2. ஹிந்தியில் ஸந்தேஹ எதிர்கால வாக்யங்களை அமைக்கும் விதம் பாடத்திலுள்ள பட்டியலில் விளக்கப்பட்டிருக்கிறது. ஸாதாரண எதிர்கால வினைச் சொற்களின் முடிவிலுள்ள गा, गे, गी யை மட்டும் விட்டு விட்டால் ஸந்தேஹ எதிர் கால வினைச் சொற்கள் கிடைக்கும்.

3. ஸந்தேஹ எதிர்காலத்தைப் பொறுத்த வரையில் வினைச் சொற்களின் ரூபங்களில் ஆண்பால்-பெண்பால் என்ற வித்தியாசம் கிடையாது.

4. ஸந்தேஹ எதிர்கால வினைச் சொற்களுக்கும் சில மாற்றுருவங்கள் உண்டு. விவரங்களுக்குப் பாட இலக்கணத்தைப் பார்க்கவும்.

நிலா முற்றம்!

★

இந்தத் தலைப்புடன் "ரமி" எழுதியிருக்கும் புதிய தொடர் சித்திரம் அடுத்த இதழிலிருந்து ஆரம்பமாகிறது.

வாடகைக்குக் குடியிருந்து அவதிகள் பட்ட ஒரு குடும்பம் புது வீடு கட்ட திட்டம் போடுகிறது! இது சகல தொல்லைகளையும் கொடுத்து தாங்கமுடியாத துயரங்களை அனுபவிக்கச் செய்கிறது. நிலாமுற்றம் அமாவாசையாகி விடுகிறது. விபரீதமான நிலைமைகளிலிருந்து தப்பி சுகப்படும் குடும்ப வரலாறுகளை அழகாகச் சித்திரிக்கும் தொடர் இது.

உங்கள் பிரதிகளுக்கு முன்னதாக ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.

5. ஸந்தேஹ எதிர்கால வினைச் சொற்கள் உத்தரவு, புத்திமதி, அனுமதி, நோக்கம், விருப்பம், வேண்டுகோள், நிபந்தனை, குழப்பம், ஸந்தேஹம், ஸம்சயம் முதலியவற்றைத் தெரிவிக்க உபயோகப்படுகின்றன.

6. நிபந்தனை வாக்யங்களில் ஸந்தேஹ எதிர்கால வினைச் சொல்லுக்குப் பின் तो என்ற சொல் கட்டாயம் வரும் வாக்யத்தின் ஆரம்பத்தில் 'ஆல் (If)' என்று பொருள்படும் अगर அல்லது यदि என்ற சொல் வந்தாலும் வரலாம், வராவிட்டாலும் இல்லை,

(ஈ) சொற்களஞ்சியம்

शब्द-भंडार

गाय (பெ. பா.)—गो (பெ. பா.)—பசு (Cow)

ज़रा—சற்று, சிறிது, கொஞ்சம்.

गाँव (ஆ. பா.)—ग्राम (ஆ. பா.)—க்ராமம்; ग्रामीण—க்ராமத்து. க்ராம ஸம்பந்தமான.

सीधा—நேரான, நேர்மையான.

सादा—साधारण—ஸாதாரணமான, எளிமையான.

सींग—(ஆ. பா.) கொம்பு (Horn.)

पूँछ—(பெ. பா.) வால்.

दही—(ஆ. பா.) தயிர்.

मट्ठा—(ஆ. பா.) மோர்.

मक्खन—(ஆ. பா.) வெண்ணெய்.

घी—(ஆ. பா.) நெய்.

चरना—மேய்தல்; चराना—மேய்த்தல்;

चरवाहा—மேய்ப்பவன்.

चारा—(ஆ பா.) தீனி.

खली—(பெ. பா.) பிண்ணுக்கு.

बिनौला—(ஆ. பா.) பருத்திக் கொட்டை.

198584

घास—(பெ. பா.) புல்.

फूस—(ஆ. பா.) வைக்கோல்.

बछड़ा—(ஆ. பா.) கன்று (Calf)

बैल—(ஆ. பா.) காளை.

जोतना—உழுதல்.

खींचना—இழுத்தல்.

कारण—(ஆ. பா.) காரணம்.

रचना—(பெ. பா.) தொகுப்பு, ஆக்கல், நிர்மாணம். रचनात्मक—ஆக்கல் பற்றிய, நிர்மாண ஸம்பந்தமான (Constructive)

मुख्य—ज़रूरी—முக்யமான, அவச்யமான.

अंग—(ஆ. பா.) அங்கம், உறுப்பு.

नमस्ते !

நம் ஹிந்தீ பாடங்களில் முதல் ஆறு பாடங்கள் எழுத்துப் பயிற்சிக்காகமட்டும் ஒதுக்கப்பட்டன. ஏழாம்பாடத்தில்தான் மொழிப் பயிற்சிக்கான முதல் கட்டம் ஆரம்பமாயிற்று. பதினொரும் பாடத்துடன் அந்த கட்டம் முடிந்தது. அதற்குப் பிறகு உங்களுக்கு ஒரு பரிக்ஷை வைக்கப்பட்டது. "परीक्षा—1" என்ற தலைப்பின்கீழ் முதல் வாரத்தில் சில கேள்விகளும், அடுத்த வாரத்தில் அந்தக் கேள்விகளுக்கான விடைகளும் ப்ரசுரமாயின. இப்போது இந்த வாரம் பாடம்—26 ஐயும் படித்துவிட்டீர்கள். இத்துடன் இந்த மொழிப் பயிற்சியின் இரண்டாவது கட்டமும் முடிவடைந்தது. எனவே இது வரை நீங்கள் பயின்றுள்ள விஷயங்களில் இன்னொரு பரிக்ஷையும் வைக்கலாமென்று உத்தேசம். இந்த "परीक्षा—2"-ன் கேள்விகள் அடுத்தவார இதழில் ப்ரசுரமாகும். உங்கள் நேர்மையில் எனக்கு என்னவும் ஸந்தேம் கிடையாது. நீங்கள் ஸாதாரணமாகப் பரிக்ஷைகளில் விடைகள் எழுதும்போது புஸ்தகங்களையோ, குறிப்புக்களையோ புரட்டிப் பார்க்காமல் சொந்தமாக எழுதுவதில்லையா? அதே மாதிரி இந்தக் கேள்விகளுக்கும் சொந்தமாகவே விடைகள் எழுதிவைத்துக் கொள்ளுங்கள் பரிக்ஷைக்கு அடுத்தவார இதழில் சரியான விடைகள் ப்ரசுரிக்கப்படும். அப்போது அந்த விடைகளுடன் ஒப்பிட்டு நீங்களே உங்கள் விடைகளைச் சரி செய்துகொள்ளலாம், எனவே ஞாபகம் இருக்கட்டும்:—

அடுத்த வாரம் பரிக்ஷை!

"पंडितजी"

பயிற்சி 26-अभ्यास 26

(அ)

கீழ்க்கண்ட வார்த்தைகளின் தமிழ் அர்த்தத்தை எழுதிவிட்டு ஒவ்வொன்றையும் உபயோகித்து ஒரு ஹிந்தீ வாக்யமும் சொந்தமாக எழுதவும்:—

1. अकसर 2. आराम 3. होशियार 4. तंदुरुस्त 5. धोना 6. भीतर

(ஆ)

தமிழில் மொழிபெயர்க்கவும்:—

1. मैं क्या कहूँ कि कौन बड़ा है?
2. अगर वह खुद आकर पूछे, तो रुपया दो।
3. उससे कहो कि वह कभी ऐसा काम न करे।
4. पंडित जी, अब मैं लिखूँ?
5. आप मुझे एक दिन की छुट्टी दें।
6. मैं चाहता हूँ कि तुम यहीं रहो।

(இ)

ஹிந்தீயில் மொழிபெயர்க்கவும்:—

1. *நீங்கள் எங்களை ரக்ஷிப்பீர்களாக!*
2. *இப்பொழுது நான் வீட்டுக்குப் போகலாமா?*
3. *இதற்கு நான் என்ன செய்யட்டும்?*
4. *அவன் தயாராக இருந்தால் அவனையே கூப்பிடு.*
5. *அவள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும், அவளுக்கு எல்லா விஷயங்களும் தெரியும்.*
6. *எங்கேயாவது அவர்கள் ஸந்தோஷமாக இருக்கட்டும்!*

(விடைகள் அடுத்த இதழில்)

जय हिंद! जय हिंदी!

அட்டைப்படம்

★

இதுவரை புரொபஸராகவிருந்த த்வாரம் ஸ்ரீ வேங்கட ஸ்வாமி நாயுடுகாரு இனி டாக்டராகவுமிருப்பார். விஜய நகரம் மகாராஜா ஸங்கீதக் காலேஜ் பிரின்ஸ்பாலாகப் பதவி தாங்குபவர் ஸ்ரீ நாயுடுகாரு. ஸர்வ கலாசாலை ஸிண்டிகேட் இவருக்கு "கலா பரிபூரணர்" (டாக்டர்) என்ற பட்டத்தைச் சூட்ட வேண்டுமென்று சிபார்சு செய்திருந்தது. இதை ஆந்திர சர்வகலாசாலை உப அத்யட்சகர் அங்கீகாரம் செய்திருக்கிறார் இவ்வருஷம் டிஸம்பர் 9-ந் தேதியன்று இத்தகைய பட்டத்தை ஸ்ரீ நாயுடுகாரு சூட்டிக் கொள்வார்.

ஸ்ரீ த்வாரம் ஸ்ரீ வேங்கடஸ்வாமி நாயுடு ஸங்கீத கலாநிதி என்ற பட்டத்தையும் பெற்றவர். பிடில் வாத்தியத்தில் தற்காலம் தலை சிறந்து விளங்கும் கோஷ்டியில் ஸ்ரீ நாயுடுகாருவுக்குள்ள இடம் மிக முக்கியமானது. இவரது வாசிப்பிலுள்ள நாதம், கர்நாடக சுத்தம், முதலியவை ஸங்கீத ரஸிகர்கள் நன்குணர்ந்த விஷயங்கள். இவர் 1893-ம் ஆண்டில் பிறந்தார். 1919-ம் ஆண்டில் விஜயநகரம் ஸங்கீத காலேஜில் பிடில் போதகராக நியமனமானார். இப்போது இதன் பிரின்ஸ்பாலாக இருக்கிறார். 1941-ம் ஆண்டில் இவர் சென்னை ஸங்கீத வித்வத் சபை மகா நாட்டுக்குத் தலைமை வகித்தார். இக்கலைஞரின் படமே இவ்விதழின் அட்டையில் தோன்றுகிறது.

24

விந்தையிலும் விந்தை!

★

சோழ நாட்டின் தலை நகராயிருந்த உறையூர்ச் சிம்மாஸனத்தை அலங்கரித்த வேந்தர்களுள் கோப்பெருஞ் சோழன் என்பவனும் ஒருவன் கல்விக் கடலின் எல்லை கடந்த அந்த மன்னன் தர்ம சீலனாகவும், அன்பின் செல்வனாகவும் விளங்கி வந்தான். புலவர்களை ஆதரிக்கும் வண்மைக் குணத்துடன், தானாகவே செய்யுட்கள் புனையும் புலமையும் அவனிடம் இருந்தது. சாதாரணமான இயல்புகளையே உடைய மற்றச் சோழர்களை விலக்கி அவனைத் தனியே சிறப்பிக்க விரும்பிய தமிழுலகம் 'கோப்பெருஞ் சோழன்' என்று அவனை அழைத்தது.

அவனுடைய சபாமண்டபத்தில் புலமை நிறைந்த கவிவாணர்கள் பலர் இருந்தார்கள். அவர்களுள் தலைமை தாங்கிய 'நல்லிசைப்புலவர் பொத்தியார் என்பவர். இன்னும் எயிற்றியனார் என்னும் புலவரும் அவனுடைய அரசாங்கத்தை அலங்கரித்த புகழ்ச் செல்வராகத் திகழ்ந்தார். இன்னும், அவனை நேரில் பார்க்காத ஒரு புலவரும் அவனிடத்தில் எல்லையில்லாத அன்பும், மரியாதையும் கொண்டிருந்தார். அவர்தான் பிசிராந்தையார் என்னும் கவிச்சிரேஷ்டர். பிசிர் என்ற ஊரிலே பிறந்த அவர் 'ஆதன் தந்தை' என்பது மருவிய 'ஆந்தை' என்ற பெயரையே கொண்டிருந்தார். அப்புலவரை மன்னனும் பார்த்ததில்லை. ஆனால் அவனுக்கும் அவரிடத்தில் எல்லைகடந்த ஓர் அபிமானம் இருந்தது. ஒருவரை ஒருவர் காணாமலேயே கருத்தொற்றுமைக் கொண்டு, உயர்ந்த நட்பினராக விளங்கிய அவர்கள் உண்மையிலேயே தமிழ் நாட்டின் பழைய மேன்மைக்கு உதாரண புருஷர்கள் ஆவார்கள். 'நவில் தொறும் நூல் நயம் போலும், பயில் தொறும் பண்புடையாளர் தொடர்பு' என்பது வள்ளுவர் வாய்மொழி. ஆனால் இவர் ஒருவரோடு ஒருவர் கலந்து பழகாமலேயே நட்பில் சிறந்து விளங்கிய சம்பவம் ஓர் அதிசயமே யல்லவா?

இவ்வாறு கோப் பெருஞ் சோழன் தன் எண்ணத்தை விட்டு நீக்காத பிசிராந்தையாரோடும், மற்றையரோடும் தமிழமுதத்தை அள்ளிப் புசித்து மகிழ்ந்துவரும் நாட்களில் ஒரு பெரும் புயல் அடித்தது. காலச் சக்கரத்தின் அழற்சியில் நல்லதும் கெட்டதும், இன்பமும் துன்பமும், மாறி மாறி வருவது, இயற்கையே அல்லவா? அதைத் தடுப்பவரோ, அல்லது எதிர்த்து வெல்பவரோ ஒருவரும் இருக்கமுடியாது என்பதும் உண்மைதானே!

ஆகவே கோப்பெருஞ் சோழன் தன்னைத் தாக்கிய அந்தப் புயலிலே பலமாய்ச் சிக்கிக்கொண்டான் முதலில். அதன் பிறகு அவன் அதிலிருந்து விடுதலை அடைவதற்குள் அவன் நிலையில்தான் எத்தனை மாற்றங்கள்! அந்தத் தமிழ்ப் புலவர் எயிற்றியனார் என்பவர் மாத்திரம் அச்சமயம் அங்கு இல்லை யென்றால், அப்பொழுது தாக்கிய புயலில் சோழனுடைய குடிப்பெருமையே பொசுங்கிப்போயிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அத்தகைய கொடும் புயல்தான் அது: கோப் பெருஞ் சோழனுக்கு மக்களாய்ப் பிறந்தவர்கள் இருவர் உண்டு, அவ்விருவரும் காளைப் பருவம் பெற்றிருந்தார்கள், கல்விச் சிறப்பும், பரிசுத்தமான குணங்களும் படிந்து தாய்மைக்கு வித்தாகத் திகழ வேண்டிய அந்தப் பருவத்திலே அவர்கள் இருவரும் கொடுமைத் தன்மைகளையெல்லாம் தம் மேனி முழுவதும் அப்பிப் பூசிக்கொண்டிருந்தார்கள். "உயிர்களை வளர்க்கும் பாற்கடலில் உயிர்களைக் கொல்லும் விஷமும் தோன்றி விடுகிறது!" என்பது பெரியோர் வார்த்தை, அவ்வாறே மன்னனின் மக்கள் குலக் கொள்ளிகளாக இருந்தார்கள்.

அவர்களுடைய தீய நடத்தை அந்த மன்னனை மிகவும் வாட்டி வதைத்தது. அதனால் அவர்களிடம் நாட்டை ஒப்படைக்க அஞ்சிய மன்னன் தானே ராஜ்ய நிர்வாகத்தை நடத்தி வரலானான், அவ்வாறு அவன் செய்தது உயர்ந்த குடிப் பிறப்பைக் காக்க வேண்டும் என்பதற்காகத்தான், ஆனால் மக்களோ தம் தந்தையை வெறுத்தார்கள், 'ராஜ்யத்தைக் காலாகாலத்தில் நம் கையில் கொடுத்துவிட்டுக் காட்டுக்குச் செல்ல வேண்டியிருக்க, அவ்வாறு செய்யாமல் இந்தக் கிழமே நாட்டை ஆண்டுகொண்டிருக்கிறதே!" என்று எண்ணி ஆத்திரம் கொண்டார்கள், அவர்களுடைய அந்த ஆத்திரமோ நாளுக்கு நாள் விஷக் கொழுந்துகளைப் பரப்பி விருட்சமாய் வளர்ந்தது. ஒரு நாள் அது பூத்துக் காய்த்து கனிகுலுங்கவும் தவறவில்லை. மக்கள் இருவரும் அன்று போர்க் கோலம் தாங்கியவர்களாய்த் தந்தையையே எதிர்க்க முற்பட்டுவிட்டார்கள்., படைகளைத் திரட்டிக்கொண்டு அவர்கள் எழுப்பிய ஆரவாரம் நாற்றிசைகளிலும் எதிரொலி செய்ததைக் கேட்டான் கோப் பெருஞ்சோழன். இப்படி ஒரு பெரும் விபரீதப் புயல் தாக்கும் என்று அவன் கனவிலும் எதிர் பார்க்கவில்லை. ஆனாலும் அதற்காக அவன் மனந்தளரவுமில்லை, தன் மக்கள் தனக்குப் பகைவர்களாகி

விடவே, தானும் அவர்களுக்கும் பகைவனென்றே கருதித் தீர்மானம் செய்துகொண்டும் விட்டான். அவனுடைய முகம் கறுத்தது. கண்கள் இரத்தச் சிவப்பேறின. அப்பொழுது அந்த மக்கட் பதர்களைத் தொலைத்துவிடுவது என்ற தீவிரமான உறுதியும் அவனுக்குள் ஏற்பட்டது. 'ஒரு புறாவுக்காகத் தன்னையே அளிக்க முன்வந்த சிபியும், மகன் அவன் செய்த தவறுக்காகத் தேர்ச் சக்கரத்தில் ஏற்றவும் பின் வாங்காத மனுநீதிச்சோழனும் நம் சோழர் குடிக்குப் பெருமையையல்லவா தந்து போனார்கள். அத்தகைய உயர்ந்த குடியில் பிறந்த எனக்கு இவர்களா பிள்ளைகளாய்ப் பிறக்க வேண்டும்! இவர்களால் சோழர் குடியே அல்லவா அழிந்தொழிந்துவிடும்! மேலும் தந்தையுடனே பகைத்த இவர் குடி மக்களுக்குத்தான் என்ன நன்மையைச் செய்வார்கள்! ஆகவே இவர்களுக்கு நாட்டை அளிப்பதுகூடாது. கொஞ்சமும் இரக்கங் காட்டாமல் எதிர்ப்பதே கடமை' என்று தனக்குள் கருதியவனாய்ச் சினத்துடன் போர்க் கோலம் கொண்டு புறப்பட்டுவிட்டான் மன்னன். அச் சமயம் அருகில் இருந்த எயிற்றியனார் மன்னனின் சினத்தையும், அதற்குக் காரணத்தையும் யூகித்தார், 'அடாடா! சோழ வம்சம் இப்படியா கெடுவது, என்று தமக்குள் கூறிக்கொண்டார். பின்பு மன்னனை உற்று நோக்கினார் ஒரு முறை. அரசனுடைய கோபம் அவருடைய வர்ணனைக்கும் எட்டாததுபோலிருந்தது. ஆனாலும் புலவர் மனம் நடுங்கவில்லை. 'மன்னன் செய்வது தவறாகும், மக்களுடன் போரிடத் தந்தை புறப்பட்டதாக இதுவரை ஒரு செய்தியையேனும் எவரும் கேட்டதில்லை அத்தகைய புதிய கோரமான செய்திக்குச் சோழ வம்சம் வித்திட்டு மூலகாரணமாகி விடக்கூடாது' என்று தீவிரமான கருத்துக் கொண்டார், உடனே மன்னனை நோக்கினார்; அவனுடைய கோபத்தைச் சாதுரியமாய்ப் போக்கிவிட நினைத்துப் புகழ்ச்சியாக, 'வீரமும் வலிமையும் வாய்ந்த மன்னனே!' என்று கூப்பிட்டார்,

சோழன் புலவரிடத்தில் அளவற்ற மரியாதை கொண்டவனாகையால், அந்தச் சீற்றத்தின் இடையிலும் செவி கொடுத்தான் புலவர் சொல்லுக்கு. புலவர் தொடர்ந்தார்! பலவகை யுத்தங்களுள் வெற்றிகொண்டு உயர்வு பெற்ற மன்னனே! இப்போது உன் முன் சண்டைக்கு வந்திருப்பவர் உன் பகைவரே யல்லர்; நீயும் அவருக்குப் பகைவனாக மாட்டாய், நீயோ பகைவரைக் கொல்லும் யானைகளை யுடையவன், அத்தகைய நீ இந்த உலகத்தில் புகழை நிறுத்தி மறுமையை அடைந்தபின், இந்த ராஜ்யம் யாருக்குச் சேரப்போகிறது! இந்த மக்களுக்கே அல்லவா! இது உனக்கும் தெரியாததில்லை!' என்றார்.

இதைக் கேட்டும்கூட மன்னன் தன் எண்ணத்தை விட்டு விலகவில்லை. மேலும் ஓர் அடியெடுத்து முன்வைக்கலானான்.

புலவர் பார்த்தார், தாம் மேலும் தொடர்ந்து பேசாமல் இருந்துவிட்டால் மக்களுடன் மன்னன் போரிடப் போய்விடுவான் என்று நினைத்து, 'மன்னா! புகழில் விருப்பம் உடையவனே!' என்று கோபத்தைத் தணிக்கும்படியான பாராட்டு மொழியைப் போட்டுக் கூப்பிட்டார். மன்னன் அப்பொழுது அவர் சொல்ல வந்ததையும் கேட்க விரும்பினான்.

'அரசே! புத்திரர்களாகிய இவர்கள் மதிகெட்டுப் போய் இக் காரியத்தைச் செய்யத் தொடங்கினார்கள், அவர்கள் தோற்றுப் போனால் இந்த ராஜ்யச் செல்வத்தை அவர்களுக்கே யல்லாமல் வேறு எவருக்குக் கொடுக்கப் போகிறாய்! யுத்தத்தையே சதா விரும்பும் மன்னனே! ஒருகால் நீயே தோற்றுப் போனால் உன் பகைவர்கள் எல்லாம் உன்னை இகழ்வார்கள் அல்லவா? உன் வீரத்தில் எனக்குச் சந்தேகம் உண்டு என்பதில்லை. ஆனால் உன் சக்தியை இந்த மக்களிடத்தில் நீ காட்டவேண்டாம் என்பதே என்னுடைய விண்ணப்பம். உன்னுடைய வீரம் தற்சமயம் உன்னைவிட்டு விலகியிருக்கட்டும். அதற்கு மாறாக அன்பு அறம் முதலிய தன்மைகள் மேலோங்கட்டும்! நல்ல காரியங்கள் பலவற்றையும் நீ செய்வாயாக!' என்றார்.

புலவர் தாம் சொல்லும்போது எவ்வளவு ஜாக்ரதையாக ஒவ்வொரு வார்த்தையையும் வெளிவிட்டிருக்கிறார் என்பது ஒன்று. அத்துடன் தம் சாதுரிய விசேஷத்தால் அரசனைப் புகழ்ந்தும், தடுத்தும, மக்களை இகழ்ந்தும், வெறுத்தும் அவர் கூறிய வார்த்தைகளுக்குத் தக்க பலன் உண்டாகாமலும் இல்லை, மன்னன் உடனேயே தன் சினம் மாறினான். புலவர் காட்டிய நல்வழியைப் புரிந்துகொண்டபிறகு தான் செய்யவிருந்த தீச் செயல்களை நினைக்கவே அஞ்சினான், மந்திரப் பொடி தூவிப் பாம்பின் சீற்றம் தணிவிப்பதுபோலப்

புலவர் செய்துவிட்டார், சீறியெழுந்து சோழ நாகம் படம் சுருக்கி அமைதி கொண்டது!

மானம் அழிந்தபிறகு வாழ விரும்புவது எப்போதுமே வெறுக்கத்தக்கதல்லவா? ஆதலால் கோப்பெருஞ்சோழன் தன் மக்கள் தன்னை எதிர்க்க வந்து தனக்கு அந்த அவமானத்தைத் தந்த பின்னும் நாட்டை ஆண்டுகொண்டிருக்க விரும்பவில்லை. ஆகவே உயிர் துறந்துவிட விரும்பினான். தன்னுயிரைத்தானே கொன்று கொள்ளுதல் எப்போதும் குற்றமாகும், ஆனால், அதற்குக் குற்றமில்லாத ஒரு வழியும் உண்டு. முன் காலத்தில் அது சில இடங்களில் சில சந்தர்ப்பங்களில் நடைமுறையில் இருந்தது. அதற்குத் தான் வடக்கிருத்தல் என்று பெயர். இரண்டு ஆறுகளுக்கு இடையே உள்ள திட்டு ஒன்றில் வடதிசை நோக்கி உட்கார்ந்து உணவு முதலிய எல்லாவற்றையும் வெறுத்து இறைவனை நினைத்தபடியே உயிரை விடுதல்தான் 'வடக்கிருத்தல்' ஆகும்.

மன்னன் சோழனும் அவ்வாறே செய்ய விரும்பினான். அதனால் ஓர் அரங்கப் பிரதேசத்தில் போய் அமர்ந்தான். தன் நாடு, தன் சுற்றம் அனைத்தையும் துறந்து மானங் காத்துக் கொள்ள முனைந்த சோழனைப்பார்த்துத் தமிழுலகம் கொண்டாடியது. அப்பேர்ப்பட்ட மன்னனை இழக்க நேரிடுகிறதே என்ற வருத்தமும் மேலிடாமல், இல்லை. புலவர்கள் பலரும் அவனைச் சூழ்ந்து அந்த அரங்கப் பிரதேசத்துக்குச் சென்றார்கள், மன்னன் ஓர் இடத்தில் வடக்கு நோக்கி அமர்ந்தான், சான்றோர்கள் அவன் அருகில் அமர்ந்து அவனையே கூர்ந்து நோக்கினார்கள். மன்னன் சான்றோர்களையெல்லாம் உற்றுநோக்கியவன், 'பெரியவர்களே! என் நண்பர் பிசிராந்தையார் இப்பொழுது இங்கு வருவார்!' என்றான். சான்றோர்கள், 'அவர் எங்கே வரப்போகிறார்?' என்றார்கள், 'இல்லை; அவர் என் உயிரைவிட எனக்கு இனியவர், வெகு தூரத்தில் பாண்டிய நாட்டில், அவர் இருந்தபோதிலும் இச்செய்தியை உணர்ந்து இப்பொழுது வரவே செய்வார், நான் ராஜ்ய ஐசுவரியங்களோடு பிரகாசித்துக்கொண்டிருந்த காலத்தில் அவர் வரவில்லையென்றாலும், இவ்வாறு வடக்கிருந்து உயிர் துறக்கும் அவஸ்தையில் ஈடுபட்டிருக்கும்போது வந்தே தீர்வார்,' என்றான் மன்னன். புலவர்கள் மிகவும் சந்தேகமே கொண்டார்கள், மன்னன் மேலும் கூறினான்: 'புலவர்களே! நானும் அவரும் சந்தித்துப் பழகியதில்லையென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் எங்கள் நட்பு சந்திப்பைக் கடந்தது; பழக்கத்தையும் மீறியது, அவர் உண்மையின் தலைவர். பொய்மையோடுகூடிய புகழில் விருப்பம் இல்லாதவர். தன் பெயரை மற்றவருக்கு எடுத்துச் சொல்லும்போது, என பெயரையே தன் பெயராகச் சொல்லிக்கொள்ளும் பண்பாடுகொண்

டவர், ஆகையினுல் இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கு வராதிருக்க மாட்டார்!' என்ருன். புலவர்களுக்குச் சிறிதும் அவ்வார்த்தையில் நம்பிக்கை பிறக்கவில்லையென்ருலும் மன்னன் வார்த்தைப்படியே நடக்கவேண்டும் என்று விரும்பினுர்கள்.

உண்மையில் பிசிராந்தையார் மன்னன் வார்த்தைப்படியே நட்பின் பெருமைக்கு இருப்பிடம் ஆவார். சோழனைக் கண்ணுரக் காணவேண்டும் என்ற விருப்பம் அவருக்கு நெடு நாளாக இருந்தும் வந்தது. "புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான், நட்பாங் கிழமை தரும்" என்ற முது மொழிப்படியே அவர் நட்பு இவ்வாருக வளர்ந்து கொண்டிருந்தது. அவர் அடிக்கடி சோழனின் உருவத்தைத் தன் மானஸீகமான கற்பனைத் திரையில் காண்பார். ஒரு முறை ஓர் அன்னத்தைப்பார்த்து, "அன்னச் சேவலே! சோழனின் முகம் போலச் சந்திரன் பிரகாசிக்கிருன் இந்த மாலை வேளையில் நீ தென் திசைக் குமரியில் நீராடி மீன்களை மேய்ந்து பின்பு வட திசை இமயம் நோக்கிச் செல்கிருய் அல்லவா? நடுவழியில் என் நண்பன் சோழன் இருக்கிருன்; அவனைப் போய்த் தாராளமாய் நீ பார்க்கலாம். அவன் உன் பெட்டை அன்னம் அணிந்து கொள்வதற்காக நல்ல அணிகலன்களை யெல்லாம் தருவான். 'பிசிராந்தையாரின் கிழவில் நான் வாழ்பவன்' என்ற ஒரு வார்த்தையை மாத்திரம் அவன் செவியில் போட்டு விடு: அப்புறம் பாரேன், உனக்கு நடக்கும் ராஜோபசாரத்தை!' என்று பாடியுள்ளார், இதிலிருந்து சோழனிடம் அவருக்குள்ள மரியாதையும், மதிப்பும் புலனுகின்றன அல்லவா?

அத்தகைய புலவர் ஆதலால், அவர் தன்னுடைய ஒத்த உணர்ச்சியால் மன்னன் நிலையை உணர்ந்து பாண்டி நாட்டிலிருந்து புறப்பட்டுத் தக்க சமயத்தில் அங்கு வந்து சேர்ந்தார். அவர் வருவதற்கு முன்னதாகவே சோழன் அவரை எதிர் பார்த்ததோடு, அவருக்கு வடக்கிருக்க ஓர் இடமும் வகுத்திருந்தான். தன் நண்பர் தனக்குப் பிறகு உயிர் வாழ விரும்பமாட்டார் என்பதே அவனுடைய நம்பிக்கை. அந்த நம்பிக்கை சிறிதும் கெடாததுதான் ஆச்சரியப்படத்தக்க விஷயம்.

பிசிராந்தையார் அங்கு வரவே சான்ருேர்கள் அனைவரும் பிரமை கொண்டார்கள், எதிர் பாராத ஒரு காரியம் நடந்துவிட்டதால் ஏற்படும் உணர்ச்சியே அவர்களின் முகங்களில் பிரதிபலித்தது. அவர்களுள் பொத்தியார் என்னும் புலவர் அக் காட்சியைக் கண்டு அழகாக ஒரு செய்யுளை அதே இடத்தில் பாடினுர், 'கோப்பெருஞ் சோழன் இங்கே வடக்கிருக்க வந்தது வியப்பு. அயல் நாட்டுக் கவிஞன் இங்கே தக்க சமயத்தில் வந்தது அதைவிட வியப்புடையது. அக் கவிஞன் வருவான் என்று முன் காட்டியே தெளிந்து துணிந்து மன்னன் உரைத்ததும், அவ்வாறே கவிஞன் வந்ததும் எல்லாவற்றையும்விட ஆச்சரியமாகும்!' என்று பாடினுர்.

பிசிராந்தையாரும் கோப்பெருஞ் சோழனும் முதன் முதலாகச் சந்தித்த அந்த இடம் ஸ்வர்க்கத்துக்கு வெகு தூரத்தில் இல்லை, அங்குச் செல்ல வெகு நேரமும் ஆகிவிடாதபடி, அத்தகைய அவஸ்தையில் அவர்கள் அங்கு மூழ்கினுர்கள், மன்னனுடன் புலவரும் வடக்கிருந்தார். இருவரும் ஒன்ருக இணைந்து நட்புக்கு உதாரண புருஷர்களாய் உயிர் துறந்தார்கள். புலவர் உலகம் போற்றியது; வருந்தவும் செய்தது!

* * *

இந்த வரலாற்றில் மூன்று முக்கியமான அம்சங்களைக் காண்கிருேம். மக்களுடன் தந்தை போரிடக் கிளம்பிய நிலையில் ரௌத்ர ரஸம் தாண்டவமாடுகிறது! இரண்டு ஆத்மாக்கள் ஒரே இடத்தில் கூடி நட்பின் விருட்சத்தை வளரவிட்டு உயிர் துறந்ததில் 'கருணரஸம்' மேலிடுகிறது சோகம் பெருகுகிறது; இவற்றுடன் அற்புத ரஸமும் பெருகாமல் இல்லை,

பிசிராந்தையாரையும், சோழனையும் சேர்த்து வைத்த நட்பும், மன உணர்ச்சியும் சாமானியமானவைகளா? உத்தமமான நட்பினுக்கு இவர்களே உதாரண புருஷர்கள் ஆவார்கள் அல்லவா?

பழந் தமிழ்நாடு வீரம், கொடை, அன்பு, அருள் முதலிய தன்மைகளில் பொலிவுற்றதுபோல், நட்புச் செல்வத்திலும் பொலிவுற்றது. தந்தை மக்களிடம் முரண்பட்டதும், பழகாத ஒருவரிடம் நட்புப் பூண்டதுமான இந்த வரலாறு விந்தையிலும் விந்தையல்லவா? ஆனுல், இந்த விந்தையில் காணக் கிடைக்கும் உண்மைதான் எத்தகைய சிறப்பைப் பெறுகிறது!

பெண்கள் கலியாணம்

உங்கள் பெண்ணுக்கு எப்போது விவாகம் நடக்கும்? எந்தத் திக்கிலிருந்து கணவன் வருவான்? மாங்கல்ய பாவம் எப்படியிருக்கிறது? பர்த்ரு பாவம், புத்திர பாக்கியம் இவை எப்படி? தம்பதிகளின் அன்யோன்யம் எவ்வாறு அமையும்?

இத்தகைய கேள்விகளுக்கேற்ற விடைகளை நாங்கள் எழுதியனுப்புகிருேம், பெண் குழந்தைகளுடைய ஜாதகத்தை நன்ருக ஆராய்ந்து இந்த விஷயங்களைச் சாஸ்திர பூர்வமாக நிர்த்தாரணம் செய்து சொல்லுவோம். பெண்களுடைய துர்ப்பாக்கியங்களான பாலவைதவ்யம், ரண்டா யோகம், விஷகன்யாயோகம் என்னும் மூன்று வகையான அமங்கள யோகங்களுக்குச் சாஸ்திரங்களில் தக்க பரிகாரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. விவாகத்திற்கு முன் ஏதேனும் தோஷம் உண்டா என்பதைத்தெரிந்து கொண்டு அதற்கேற்ற பரிகாரங்களைச் செய்து தோஷத்தைப் போக்கிக் கொள்ளலாம். அத்தகைய பரிகாரங்களை நாங்கள் விவரமாக எழுதுவோம்.

விவாக விஷயம் என்று குறித்து ஜாதகத்தை உடனே அனுப்புங்கள். வி. பி. செலவு உட்பட ரூ. 3—8—0.

ஸ்ரீ கிருஷ்ணவிலாஸ்
ஜோதிஷசாலை,
மோகனூர் (Via) கரூர் S. I. Ry

சேலம்
மூன்று தாமரை
பீடிகளை உபயோகித்து சந்தோஷமடையுங்கள்
Estd 1920
Rgd. No. 2221.
Prop: S அஹமத் உசேன்,
கோட்டை சேலம் S. I. R.

மூன்று காதல்

சோனு

["வாழ்விலோர் திருநாள்" என்ற பாட்டை ரேடியோ ஒலிபரப்பிக்கொண்டிருந்தது உடனே என் மனம் அந்தத் திருநாளைப்பற்றி எண்ணவாரம்பித்தது]

அப்போது நடந்த விஷயங்கள். இன்னமும் நினைத்துப் பார்த்தால் கதைபோலத் தோன்றி இன்பமளிக்கின்றன. எனக்கு பதினுலாம் வயது நடந்துகொண்டிருந்தது. இந்தக் காலத்தில் 14-வயதுப் பையன்களைப் பாலராகவே நினைக்கிருேம். ஆனுல், நான் அந்த வயதில் குடும்பத்திற்குத் தலைவனுகவிருந்தேன் பொறுப்பை என் தலையில் சுமத்தி, இறைவன் திருவடி சேர்ந்தார் என் தந்தை ஒரு விதத்தில் என்னை 'அசுரன்' என்று சொல்லிக் கொள்வதில் ஒரு பெருமிதம் கொள்கிறேன் கலகமிட்டுவாழும் மானிடப் பூச்சிகளைப்போல் எனது அரிய வாழ்நாளைக் கழிப்பது எனக்குப் பிடிக்கவில்லை களிப்பு மிகுந்த கலைகளிலும், புது புது விஷயங்களைக் கண்டுபிடிப்பதிலும் என் மனம் நாட்டங்கொண்டது ஆனுல்? இந்த உலகத்தில் பணம் இல்லாவிடில், அவர் வாழ்க்கை பரிமளிக் காது என்பது நியதி ஆகவே. பணமுண்டாக்கும் தொழிலில் பிரவேசிப்பது அவசியம் ஆயிற்று. கலைகள் அறுபத்தினுலு என்று சொல்கிருர்கள் அதில் யாவரையும் முறையே பண்டிதர். பாமரர், விலங்குகள் எல்லா ஜீவராசிகளையுமே கவர்வது ஸங்கீதக்கலை "காட்டில்விலங்கறியும்கைக்குழந்தை தானறியும், பாட்டின் சுவையதனைப் பாம்பறியும்' என்ருர் கவி அந்த அற்புதமான ஸங்கீதம் பயில்வதற்கு அபாரமான சாதகம் வேண்டும் அதாவது அசுர சாதகம் செய்யவேண்டும் அதேபோல வாழ்விலும் வெற்றிபெற வேண்டுமானுல், அசுரத்தன்மை பெற வேண்டும் இதேது கஷ்டம்! காந்தியுகத்தில் இப்படியொரு பிரகிருதியிருக்கிறதா? கவி பாரதி 'அமரத்தன்மை வேண்டும்" என்று அவர் வழிபட்ட பராசக்தியிடம் மன்ருடினுர் இந்த மனிதனே அசுரத்தன்மை கேட்கிருனே என்று நண்பர் வியப்புறலாம் !

அசுரத்தன்மையென்ருல் நாம் மற்றவரை இம்சிப்பதும் போகத்தில் ஆழ்ந்திருப்பதும் அல்ல.

"நாம் இந்த உலகத்தில் நன்கு வாழ வேண்டுமானுல், மனிதனுக வாழ வேண்டுமானுல், அசுரரின் குணங்களான விடாமுயற்சி எதற்கும் அஞ்சாமை, அசையாத நம்பிக்கை உடலுறுதி இவை பெறவேண்டும்' என்று எனக்குத் தோன்றியது மூன்று வயதில் அருமைத் தந்தையைப் பறி கொடுத்த எனக்கு ஏனே பள்ளிப் படிப்பில் மனம் பற்ருமல் போய்விட்டது ஏழாவது வகுப்பிலிருந்து விடுதலை பெற்று, எட்டாம் வகுப்பில் சேர வேண்டிய நாளும் வந்தது அன்று விடுமுறைக்குப் பின் பள்ளிக்கூடம் திறந்தார்கள். 'பாஸ் ஆனவர்கள் எல்லாம் எட்டாவது வகுப்புக்குப் போங்கள்' என்று தலைமை ஆசிரியர் வந்து எங்களுக்கு உத்தரவு கொடுத்தார் நாங்கள் போர் வீரரைப்போல் வீர நடை போட்டு எட்டாம் வகுப்புக்குள் நுழைந்தோம். என் உடம்பு மட்டும் அங்கிருந்ததே தவிர, மனமோ எட்டாத திக்கில் எங்கோ பறந்தது "எட்டும் மட்டும் எட்டு; எகிறிக் குதித்து எட்டு" என்று யாரோ சொன்னது காதில் கேட்டது !

அந்த வருஷம் முடியு முன்பே பள்ளியை விட்டு நீங்கி மாமாவின் ஊருக்குச் சென்றேன். மாமாவுக்கு புரோகிதத் தொழில் , அவருக்குப் பங்கஜவல்லியென்ற பெண் கல்யாணம் செய்வதற்குக்காத்திருந்தாள். தூண்டில் விழுந்த மீனைப்போல் பங்கஜத்தின் வலையில் விழுந்தேன் பகல் முழுதும் பஞ்சாங்கம் பார்த்துப் பலன் சொல்லி பணம் வசூலிப்பேன். வெயிலிலும் மழையிலும் அலைந்து வந்த அலுப்பு. பங்கஜத்தின் ஒரு புன்சிரிபால் தீர்ந்துவிடும். பங்கஜத்திற்கு அப்பொழுது வயது பத்து, நான் ஒன்று நினைத்தால் மாமா ஒன்று செய்தார்.

பஞ்சாங்கத் தொழிலை எனக்குக் கொடுத்துவிட்டு பங்கஜ வல்லியை மற்ருெருவனுக்கு. உரிமையாக்க ஏற்பாடுகள் நடந்தன இது என்னை அதிர்ச்சியடையச் செய்தது

பங்கஜம் என்னைப் பார்க்கும் பொழுது அவள் கண்ணில் ஏக்கம் தென்படும். நானே. ஒருவிதத்திலும் தகுதியற்றவனுயிருந்தேன் அந்த நாள் நெருங்கிக்கொண்டு வந்தது.என் சிந்தனையை சிதறடித்துவிட்ட கல்யாணம் நாளை. நிமிஷங்கள் மணிகள் தான் பாக்கியிருந்தன. ஜாம் ஜாம் என்று முழங்கிய மேளச்சத்தம் என் தூக்கத்தைக் கலைத்தது. இனிய நாகஸ்வரம் என் காதில் நாகாஸ்திரத்தைப்போல துளைத்தது என் உடலை விட்டு உயிர் பிரிவதைப்போல் ஒரு உணர்ச்சி தோன்றியது கிழக்கே சூரியன் உதித்துக்கொண்டிருந்தான். ஆற்றை நோக்கி நடந்தேன். வழியிலுள்ள மரங்களும் மயில்களும் சூரிய ஒளியினுல் புத்துயிர்பெற்று விளங்கின காதலியை மற்றவன் அடையப் போகிருன். இப்போது நாம் செய்ய வேண்டியதென்ன? அவனுடன் எதிர்த்துப் போராடி பங்கஜத்தை எவ்விதமேனும் அடைவதே நியாயம் என்று என் உணர்ச்சி உந்தியது" வேண்டாம். உனக்காக, உன் சுகத்திற்காக மற்றவன் வாழ்வைக் குலைக்காதே! இதுகாறும் தந்தையைப்போல் ஆதரித்த தாய்மாமனின் ஆசையைக் கெடுக்காதே! உன்னைவிடப் பெண்ணின் எதிர்கால வாழ்வில் உன் மாமாவுக்கு சிரத்தை அதிகம் இருக்கலாம். உன்னைவிட இப்போது அவர் பார்த்துள்ள வரன் சிறந்தவனுயிருக்கக் கூடும் "கிட்டாதாயின் வெட்டென மற" என்று மனம் கூறியது விரைவாக நடந்தேன் எங்கே? தெரியாது. கால் வலிக்கும்மட்டும் நடந்தேன். அரசமரமும், ஆறும், பிள்ளையாரும் உள்ள இடத்தில் வந்ததும் என் கால்கள் நின்றன ஆற்று நீரை அள்ளிப் புசித்தேன் அயர்வினுல் கண்ணயர்ந்தேன்.

வீரசுதந்திரம் வேண்டிநின்ருர் பின்னர்
வேறென்று கொள்வாரோ
ஆரமுதுண்ணுதற் காசை கொண்டார் [கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ ?

என்ற பாட்டு காதில் விழுந்தது. சிறிது நேரம் கழிந்தது கதநடையும் காந்திக் குல்லாயும் கையில் கொடியும்கொண்டு சென்றது ஒரு கூட்டம் ஏதோ ஒரு வேகம் என்னையும் அவர்களுடன் சேர்த்துவிட்டது

நான் தொண்டன் ஆம், சிறு தொண்டன், பாரதிபாட்டு என்மனத்தைக் தன்பால் இழுத்துக்கொண்டது, வேறென்றும் என் காதில் ஏறவில்லை. 'கட்டென்பதை வெட்டென்போம்" என்பது எனது மந்திரமாயிற்று.

கூண்டிலிருந்து வெளிப்பட்டுச் சென்ற பறவைபோல் உற்சாகமடைந்தேன். ஆனால் சர்க்காரின் அடக்குமுறைக்குத் தப்ப முடியவில்லை பாடிப் பரவசமாய் நிற்பதையே எனக்கு வழக்கமாகக் கொண்டேன் பண்டிதர்களின் இலக்கண வரம்பும் பாமரரின் கட்டுப்பாடுகளும் என்னைக்கண்டு அச்சங்கொண்டுபோயின பாட்டுத் திறத்தில் வெற்றிகாணப் பறந்தெழும் மனம்! ஆனால், வீடும் சுற்றமும் எனதுகாலைப் பற்றிக் கரகரவென கீழே இழுத்துவிடும்!

அன்றாடம் நாலுகாசு கொணர்ந்து அடுப்பு மூட்டவேண்டிய நிலையில் என் வீடு இருந்தது என் தாய் தியாகத்தின் வடிவம்! தம்பியோ சேவையின் உருவம்! உத்யோகம் புருஷலக்ஷணம் என்பது உண்மைதான் ஆனால் இந்தக்காலத்தில் என்போன்றவருக்கு அதில் இடமேது? வயிற்றுப் பிழைப்புக்காக என்னென்ன கெரடி வித்தைகள் நிகழ்த்தவேண்டும்?

இச்சகம் பேசவேண்டும்
எளியரை வாட்டவேண்டும்
பச்சைப் பொய் கூறவேண்டும்
பாவனை செய்யல்வேண்டும்

என்றால், அதையெல்லாம் செய்ய முடியுமா? அப்பா, தமிழ் நாட்டில் ஏன் பிறந்தேன்? மனச் சாட்சிக்கு விரோதமாக வயிற்றுச் சோற்றுக்காக லட்சியத்தைக் கைவிட முடியுமா? உப்பு சத்யாக்ரஹம் என்று ஊரே திமிலோகப்படுகிறது என்னுள்ளே இயங்கும் மகா சக்தி என்னை அங்கு போகும்படிக் கட்டளையிட்டாள். "போலோ பாரதமாதாகீ ஜெய்" என்றது என் வாணி அடிமைவாழ்வை அகற்ற அண்ணல் காந்தி காட்டும் பாதை வழி நடந்தோம் இங்கே வா— என்று கடலலைகள் எங்களையழைத்தன உறுதி குலையாமல். உள்ளம் நடுங்காமல் கருதி வந்த கர்மத்தைச் செய் உற்சாகமாகச் செய். கடமையென்று கருது அதைப் பெரும் சுமையாகக் கருதாதே உரிமை என்று செய்தால், உவகையுண்டு என்று உறுதிகொடுத்தது பாரதி வாக்கு. உப்புக் காய்ச்சி, உதைபட்டு, சிறை சென்றோம் திரும்பவும் ஆறும் மாதம் விடுதலை பெற்றேன் வீடு வந்து சேர்ந்தேன்.

தமிழ் நாட்டில் தொன்று தொட்டுள்ள பழக்க வழக்கங்கள் மிக உயர்ந்தன வென்று பாராட்டப் பெறுகின்றன ஆனால், காலவித்யாசத்தினால் ஒரு காலத்தில் சிறந்ததாகக் கருதப்பட்டுவந்த 'மணம்' இன்று வெறும் சடங்குமாதிரி தோற்றமளிக்கிறது

என் வீட்டார் எனக்குக் கல்யாணம் செய்யவேண்டும் என்று ஆவல் கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தனர் "பையனுக்குக் காலாகாலத்தில் ஒரு கால்கட்டைக் கட்டிப்போட்டால்" பின்பு சத்யாக்ரஹம், சிறைவாசம் என்றெல்லாம் போக வசதியிராது என்பது அவர்களது நினைப்பு நான் இதை அறிந்தவுடன், மனம் திடுக்கிட்டேன் ஆனால் ஓரேயடியாகக் கல்யாணம் வேண்டாமென்றும் சொல்லவில்லை "அம்மா, நானே என் மனைவியை தேர்ந்தெடுத்துக்கொள்கிறேன், நீ சிரமப்படவேண்டாம்" என்றேன் தாயார் இது கேட்டு சிறிது அதிர்ச்சியடைந்தாலும் ஓரளவு சமாதானமும் அடைந்தாள். கல்யாணமேவேண்டாம் என்று அடம் செய்யாமல், இந்த மட்டுமாவது சம்மதித்தானே, என்று ஒரு ஆறுதல் அவளுக்கு.

கல்யாணம் நிச்சயமாயிற்று என்று தாயாரிடம் சொன்னேன் "எந்தப் பெண்?" என்று கேட்டாள் தாய். "பெண் யார் என்பது இன்னும்தெரியவில்லை" என்றேன் அதிருப்தி நிலவும் முகத்துடன் பெருமூச்செறிந்தாள்.

நான் சொன்ன பதில் என்னவோ சரியில்லைதான் ஆனால் உண்மை முற்றிலும் உண்மை என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை என் காதலி—நான் எண்ணியிருந்த லக்ஷ்யப் பெண்மணி என்னவோ கிடைத்தாள். ஆனால் நான் விவாஹம் செய்யவிருந்த பெண் அவள் அல்ல. இதென்ன பேச்சு! கேட்பதற்கு அசுவாரசியந்தான் காதலுக்குக் கண் உண்டா? காதல் அந்தகனா? அல்லது அந்த நோய் பற்றியவர்களை அந்தகர்களாக்கி விடுவது அதன் இயல்பா? அதற்கு குலம் கோத்திரம் வயது தகுதி ஒன்றையும் பார்க்கும் வழக்கம் கிடையாதா? என் இதயராணி என் முன் தோன்றினாள்.

ஒளி படைத்த முகம், களிகொண்ட உள்ளம் கபடற்ற பேச்சு கல கலவென்ற சிரிப்பு, கட்டளையிடும் சிறப்பு யாரையும் அடிமை கொள்ளும் வடிவம் கண்டேன் மகுடியின் முன் மண்டியிடும் பாம்பாக மாறினேன் ஆடினேன் பாடினேன் ஆவியிலின்பம் அணிகிடப் பெற்றேன் மானிட ஜன்மம் மாண்புடைத்து என்று மனமும் அமைதியுற்றது

மனைவியை அம்மி மிதிக்கச்செய்து அருந்ததியைக்காட்டி, கற்பின் பெருமையை அவளுக்கு உணர்த்தும் கட்டம். தாம்பத்யச் சிறப்பை வசிஷ்ட அருந்ததியைக் கொண்டு உதாரணம் காட்டினர் புரோகிதர்கள் யந்திரத்தைப்போல் கிரியைகளை நடத்தினேன் இரவு வந்தது.

போஜனத்திற்குப் பின் நித்திரையின் வசமாகினர், எல்லோரும் நான் எத்தனை முயன்றும் தூக்கம் வரவில்லை தனியே எப்படி பொழுது போக்குவது என்று நான் எண்ணு முன்பு என் முன்னே ஒரு வடிவம் தோன்றியது "அது என்ன யோசனையப்பா" என்ற கேள்வியும் பிறந்தது. "ஒன்றுமில்லை, வந்து, வந்து...உம்... என்றெல்லாம் முனகினேன். கலீரென்று சிரித்தது உருவம் "மனிதா, நீ எல்லாரையும் ஏமாற்றுவதுபோல் என்னையும் ஏமாற்றலாமென்று எண்ணிக்கொண்டாயா? அடே உடன் பிறந்தாளிடம் பிறந்த வீட்டு வரிசையைக் கூறும் பெண்ணாக மாறிவிட்டாயா? உன் ஆணவம் என்ன? செருக்கு என்ன? உனது நண்பரையெல்லாம் காதலின் சிறப்பையறியும்படி உபதேசம் செய்த நீ உன் மனச்சாட்சிக்குத் துரோகம் விளைத்து, அதற்குப் பொய்க் காரணம் கண்டு பிடிக்க ஆரம்பித்து விட்டாயா? மைத்துனியின் பேச்சில் மயக்கம்கொண்ட மனிதன் நீ ஒருஅப்பாவியான பெண்ணை மனதார வஞ்சித்தாய்" என்று இடித்துக் கூறியது என் மனம் ஆயிரம் வேல் பாய்ந்ததுபோல் துடித்தது. திருடனுக்குத் தேள் கொட்டியதைப் போல் இருந்தது. சபாஷ்!

'ஆனந்தன் என்ற என் பெயருக்கும் தற்போது நான் படும் வேதனைக்கும் எத்தனை பொருத்தம்! என் காதலிராணியாகிய மைத்துனி என் கல்யாணம் ஆனபிறகு, சிறிது சிறிதாக என்னிடத்திலிருந்து விலக ஆரம்பித்தாள். எனக்கும் பகிரங்கமாக அவளிடம் காதல் செலுத்த சங்கோசமாகவிருந்தது.

இப்படி நான் இடருற்று வாடும் சமயம், பிழைப்புக்காகப் பத்திரிகையொன்று நடத்தவாரம்பித்தேன். அதில், காதல் சுடர் வீசுவதனால், இளைஞர்கள் பலர் எனக்கு சிஷ்யர்களாகச் சேர்ந்தனர். இப்போது எனது வாசஸ்

"சக்தி ஆரூடம்"!

ஸ்ரீ K R. அப்ளாச்சாரியார், M.A.L.T வைஸ் பிரின்சிபால். டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, 27-6-50ல் எழுதுகிறார்: 'தங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்'

1 to 3 ஆருட கேள்விகளுக்கு ரூ. 1.
3-க்குமேல் கேள்வி 1க்கு அணா 8.
1 வருட பலன் ரூ. 5.
ஜாதகம் கணிக்க ரூ. 2.
சக்தி கவசம் ரூ. 7-8-0.
வி பி பி தனி

ஜாதகம் OR எழுதும் நேரம் தேவை.
N B:-வெளிநாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணமாய் தேவை.

சக்தி ஹோம்,
விருத்தாசலம். P. O (S. I.)

தலம் ஆற்றங்கரையருகிலுள்ள ஆலமரமாக மாறியது நான் அம்மி மிதிக்கச் செய்து, அருந்ததியைக் காட்டி தாலி கட்டிய மனைவி வீட்டில் அடைபட்டுக் கிடந்தாள்.

என் மனம் பத்திரிகைக்குப் புனைப் பெயரில் கட்டுரை எழுதும் எழுத்தாளரைப்பற்றி எண்ணவாரம்பித்தது. 'காமினி என்ற புனைப்பெயரில் எழுதுவது யாரென்று இன்னமும் எனக்குத்தெரியாது காமினி எழுதிய 'சிதைந்த காதல்' 'இடிந்தகோட்டை' 'காதலோ காதல்' எல்லாம் சிரஞ்சீவிக் கதைகள் என்று எழுத்தாளர் எல்லோரும் ஏகோபித்துத் தீர்மானித்தார்கள் ஆனால் எழுதியவர் தமது முழு விலாசத்தையும் கொடுக்காததால் ஸம்மானம் அனுப்பி கௌரவிக்க முடியாமல் இருந்துகொண்டிருந்தது அவள் எழுத்துக்கள் என்னை அடிமைகொண்டுவிட்டன. காவியப் பூங்காவில் கண்டுபிடித்த பெண்ணரசியைக் கண்ணால் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை.

காதல் பாதை கரடு முரடு!

நாளுக்கு நாள் அவளை சந்திக்க வேண்டும் என்ற ஆவல் மிதமிஞ்சியது ஆனால். எங்கு? எப்போது?

அன்று இரவு—மணியோ ஒன்பது. பசி என்னை வீட்டுக்குச்செல்லும்படிச் செய்தது வீட்டுக் கதவு சாத்தப்பட்டிருந்தது கதவின் சந்து வழியாக எட்டிப் பார்த்தேன். என் மனைவி நான் கர்னாடகம் என்று கருதி, அலட்சியமாய் எண்ணியிருந்தவள் கையில் பேனாவுடன் அமர்ந்திருந்தாள் கதவு தட்டப்பட்டதும் ஓடிவந்து கதவைத் திறந்தாள் விரைந்து சென்று அவள் வைத்திருந்த காகிதங்களைப் புரட்டினேன். 'காமினி. தொடர்ச்சியாக வந்த ஒரு பகுதியைக் கண்டேன். 'பலநாள் திருடி ஒருநாள் அகப்பட்டாள்' என்று இரைந்து கூவினேன் அவள் ஒன்றும் பேசவில்லை காதல் வழியில் அடர்ந்திருந்த முட்கள் விலகின வாழ்வில்வெற்றிகண்டேன். அருகில் கிடந்த மாணிக்கத்தை வெறும் கல்லாக மதித்திருந்தேன் மாணிக்கம் ஒளிவீசி, என் மனமருட்சியை நீக்கிற்று. மைத்துனியிடம் கொண்டது மதிமயக்கம் உண்மைக் காதல் அன்று என்பது தெரிந்தது. நான் விரும்பிய லக்ஷ்யப் பெண்ணை இன்று என் இதயச் சிங்காசனத்தில் அமரச் செய்து இன்புற்றேன்.

விசேஷ சுதந்திர தின சலுகை

ரகத்திற்கும் வேலைப்பாட்டிற்கும் பிரசித்தி பெற்ற கீழ்க்குறித்த கடியாரங்கள் உண்மையான ரகங்களாகும். 15 & 17 ஜுவல் பதித்த கடியாரங்கள் யாவும் 5 வருஷத்துக்கும் மற்றவை 3 வருஷம் உத்தரவாதமளிக்கப்படும் உத்தரவாத சர்டிபிகேட் எழுதப்பட்டு அழகிய ஸ்டிராப்பும் ஒரு வெல்வெட் பெட்டியும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் இலவசமாக வழங்கப்படும். பாக்கிங், தபால் செலவு, விற்பனை வரி இலவசமாக, வி பி. பி. யிலும் சப்ளை செய்யப்படும். இந்த சலுகை 31—8—1950 தேதிவரை மட்டுந்தான்.

இலவசம்

(1) ஒரே தடவையில் 2 கடியாரங்கள் வாங்குவோருக்கு ஒரு அமெரிக்க பவுண்டன் பேனா—தங்க மூடியுடனும்—ஒரு அழகிய புரொபெல்லிங் பென்ஸிலும் இலவசம்

(2) ஒரே தடவையில் 3 கடியாரம் வாங்கினால், ஒரு உயர் ரக டேபிள் கிளாக் இலவசம்.



(கர்வெக்ஸ் சைஸ் 7½)

காட்லாக் நெ		ஜுவல்	விலை ரூ
201	ரோல்டு கோல்டு எஃகு பின்புறம்	5	36
202	குரோம் டை	7	39
203	குரோம் டை	15	50
204	ரோ கோல்டு டை	15	55
205	முழு ரோல்டு கோல்டு	15	60



(ரவுண்டு சைஸ் 10½)

காட்லாக் நெ		ஜுவல்	விலை ரூ.
216	குரோம் எஃகு பின்புறம்	7	27
217	ரோல்டு கோல்டு டை	7	30
218	20 மைக்ரான் தங்கம் (சிறிய சைஸ்)	7	37
219	குரோம் எஃகு பின்புறம்	15	38
220	ரோ. கோல்டு டை	15	43

(ரவுண்டு சென்டர் செகண்டு சைஸ் 8¾)

206	ரோல்டு கோல்டு கேஸ்	5	33
207	டை டை	7	37
208	குரோம் எஃகு பின்புறம்	15	59
209	ரோ. கோல்டு டை	15	64
210	வாட்டர். புரூப் ஷாக் புரூப் குரோம் எஃகு பின்புறம் ரேடியம்	15	85
211	வாட்டர் புரூப் ஷாக் புரூப் ரோல்ட் கோல்டு ஸ்டீல் பாக்—ரேடியம்	15	90



(சென்டர் செகண்டு சைஸ் 10½)

221	வாட்டர்புரூப் குரோம் ஸ்டீல்	5	45
222	வாட்டர் புரூப் ஷாக் புரூப் குரோம் ஸ்டீல்பாக் ரேடியம்	15	59
223	வாட்டர் புரூப் ரோ கோல்டு ஸ்டீல் பாக்	15	66
224	டை 20 மைக்ரான் தங்ககேஸ்	15	72
225	வாட்டர் புரூப் ஆல் புரூப் குரோம் ஸ்டீல் பாக், ரேடியம்	17	79
226	ஆல் புரூப் ரோல்டு கோல்டு ஸ்டீல் பாக்	17	85

(சிறிய ரவுண்டு சைஸ் 8½)

212	குரோம் எஃகு பின்புறம்	5	27
213	ரோல்டு கோல்டு டை	5	30
214	குரோம் டை	15	55
215	ரோல்டு கோல்டு டை	15	60



(மிகச் சிறிய சைஸ் 5¼")

227	குரோம் எஃகு பின்புறம்	5	39
228	ரோல்டு கோல்டு கேஸ்	5	42
229	டை எஃகு பின்புறம்	15	61
230	கெட்டி 18காரட் தங்க கேஸ்	15	118

CAROLINE AGENCIES (INDIA)

(Sec 8) P. B. No. 6764, BOMBAY 22.

அற்புதநாடு கண்டேன்

1

அற்புத நாடு கண்டேன்
ஆடுபோல் அந்த சிங்கம்
பொற்புடன் போகக் கண்டேன்
பெரும்மைகள் தலைகள் தொங்கும்

கற்பக மரங்கள் கண்டேன்
கனிவுடன் இனிமை பேசும்
அற்புத அழகு கண்டேன்
அந்த பொன் மலிவு கண்டேன்

2

கற்பனை நாடு கண்டேன்
காற்றிலே வாரி வீசும்
பற்பல பக்க ணங்கள்
பாரிலே பெய்யக் கண்டேன்

பொற்புள பாலர் பள்ளி
போதுநாள் இல்லை கண்டேன்
அற்புதம்! குழந்தை தாமே
அரசுசெய் அழகு கண்டேன்

3

அற்புத நாடு கண்டேன்
அங்கெல்லாம் பாலர் பெண்கள்
அற்பர்போல் கூச்சல் போடார்
அழகுறப் பழகக் கண்டேன்

சொல்செயல் நினைவில் நல்லோர்
சுகமிகு செல்வர் கண்டேன்
சொற்பன நாடு கண்டேன்
சொல்விழிக்(கு) அப்பால் கண்டேன்



ஏழை வாலிபன்

எஸ். ரங்கராஜன்

ஓரே ஒரு ஊரில் ராஜா இருந்தான். அவனுக்கு மகா பெரிய அரண்மனை இருந்தது. அதில் அறைகள் அநேகம் இருந்தன. அவனுக்கு ஒரு பெண் இருந்தாள் அவள் ஒரு நாள் அரண்மனையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தாள். அப்பொழுது ஒரு மூலையில் விசித்திரமான அறை இருந்ததைக் கண்டாள். அதைத் திறந்து பார்க்கவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று, அந்த அறையைத திறந்துகொண்டு உள்ளே சென்றாள் அந்த அறை முழுவதும் சுத்தம் செய்யப்படாமல் ஒரே புழுதியாக இருந்தது. மேலிருந்த ஜன்னல் வழியாக சிறிது வெளிச்சம் வந்துகொண்டிருந்தது. அரசகுமாரிக்கு அங்கு வந்ததும் ஆச்சரியமும், பயமும் உண்டாயிற்று. அந்த அறையின் நடுவில் ஒரு மேஜையும். அதன்மேல் ஒரு சிறிய பெட்டியும் இருந்தது. அந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது என்பதை அறிய மூடியைத் திறந்தாள். அதிலிருந்து ஒரு சிலந்தி வெளியேவந்து ஓடியது. ஆச்சரியத்துடன் அதைப் பார்த்துக்கொண்டிருந்தாள் அரசகுமாரி. அது சுவற்றின் மேல் பாகத்துக்குப் போன உடன், "அரசகுமாரி! நான் ஒரு தேவதை. அந்தப் பெட்டியில் வெகுகாலம் சிறைப்பட்டிருந்தேன். என்னை விடுவித்ததற்காக வந்தனம் அதற்காக உனக்கு ஒரு பரிசளிக்கப் போகிறேன். அது தான் மந்திரச் சட்டை அதைப் போட்டுக்கொண்டால் உன்னை ஒருவரும் கண்டுபிடிக்க முடியாது. அது உன்னிடம் இருபத்து நாலுமணி நேரம் இருக்கும். உன் அறைக்குப் போ. அதைப் பார்க்கலாம்' என்று கூறி மறைந்தது. அரசகுமாரிக்கு ஆச்சரியம் பன்மடங்காகியது. உடனே அங்கிருந்து தன் அறைக்கு ஓடிச் சென்றாள். அந்த சிலந்தி கூறிய அழகிய உடை இருப்பதைக் கண்டாள். அதைப் போட்டுக்கொண்டு கண்ணாடி முன் நின்றாள் தன் உருவம் தெரியவில்லை. அதைக் கண்டு ஆனந்தம ஏற்பட்டது.

மந்திரச் சட்டையுடன் ஊரைச் சுற்றிப் பார்க்க ஆரம்பித்தாள். கடைகள, வீடுகள்

எல்லாவற்றையும் சுற்றிக்கொண்டு ஆங்காங்கு நடக்கும் விநோதங்களைக் கண்டு களித்துக்கொண்டே ஒரு சிறிய வீட்டிற்கு வந்தாள். அங்கு ஒரு வாலிபனும் அவனுடைய தாய் தந்தையர்களும் இருந்தார்கள். வாலிபன் மிகுந்த அழகுள்ளவன். ஆனால் ஏழை. அன்றாடம் எதையாவது விற்று ஜீவனம் நடத்தி வந்தான். அன்றைக்குக் கொண்டு வந்த காசை அம்மாவிடம் கொடுத்து அவ்வாலிபன், 'அம்மா! கடவுள் எனக்கு இம்மாதிரியே காசு கொடுத்துக்கொண்டிருந்தால் போதும். பெரிய அரசனாக எனக்கு ஆசை கிடையாது. அரசனுக்கு என்றைக்காவது நமக்கிருக்கும் சந்தோஷத்தில் நூறில் ஒரு பங்கு கூடக் கிடையாது' என்று சொன்னான். தாயாரும் சந்தோஷப்பட்டாள். அவர்கள் ஏழையானாலும் மிகவும் சந்தோஷமாக இருப்பதை இளவரசி கண்டாள். அவளுக்கும் அவர்கள் மாதிரியே சந்தோஷமாக இருக்க ஆசை உண்டாயிற்று. அதே எண்ணத்துடன் அவள் அரண்மனையை அடைந்தாள். மறு கணம் மந்திரச் சட்டையும் மாயமாய் மறைந்தது.

இது நடந்த சில நாட்களுக்குப் பின் அரசன் தன் பெண்ணுக்குக் கலியாணம் செய்ய எண்ணி ஒரு பெரிய சக்ரவர்த்தியின் குமாரனுக்கு விவாகம் செய்து கொடுப்பதாக ஏற்பாடு செய்திருந்தான். ஆனால் அரசகுமாரிக்கு அது

பிடிக்கவில்லை. தகப்பனிடம் எவ்வளவோ தடவைகள் சொல்லியும் அவன் காதில் ஏறவில்லை. அரசகுமாரி அந்த ஏழை வாலிபனை மணக்க தீர்மானித்திருந்தாள். கலியாண நாளும் நெருங்கிவிட்டது. ஒரு நாள் அரசகுமாரி கவலையுடன் சிலந்தி இருந்த அறைக்குச் சென்று அழுதுகொண்டிருந்தாள். அப்பொழுது அந்தச் சிலந்தி அங்கு தோன்றி, 'அரசகுமாரி! கவலைப்படாதே. கலியாண தினத்தன்று என்னை இவ்வறையில் பார்' என்று சொல்லி மறைந்தது.

கலியாணத் தினத்தன்று காலையில் அரசகுமாரி அந்த அறைக்குச் சென்றாள். சிலந்தியும் அவள் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தது. அவள் வந்தவுடன் அது திடீரென ஒரு 'அழகிய வாலிபனாக மாறியது. அவனைக் கண்டதும் அவள் திடுக்கிட்டாள். ஏனெனில் அவன்தான் அந்த ஏழை வாலிபன். அவ்வாலிபன் அவளைத் தட்டிக்கொடுத்து 'பெண்ணே! கவலைப்படாதே. நான் சொல்லுகிறபடி செய். உன் ஆடை ஆபரணங்களை என்னிடம் கொடு. என் உடையை நீ தரித்துக்கொள். ஏதேனும் அபாயம் நேர்ந்தால் இந்த மந்திரச்சட்டையைப் போட்டுக்கொள்' என்று சொல்லி மந்திரச் சட்டையையும் தன் உடைகளையும் கொடுத்து அவள் உடைகளை வாங்கி அணிந்து கொண்டான். பார்வைக்கு அரசகுமாரி மாதிரியே காட்சி அளித்தான் அவ்வாலிபன்.

கலியாணம் தடபுடலாக நடந்துகொண்டிருந்தது. சக்ரவர்த்தியின் குமாரன் தான் ஒரு அழகியைக் கலியாணம் செய்துகொள்ளப் போவதை நினைத்து கர்வத்துடன் உட்கார்ந்துகொண்டிருந்தான். அரசகுமாரி வெட்கத்துடன் தலையைக்குனிந்து உட்கார்ந்துகொண்டிருந்தாள். தாலி கட்டும் சமயமும் வந்துவிட்டது. தாலியை எடுத்து அரசகுமாரியின் கழுத்தில் கட்டப் போனவன் திடீரென அலறினான். அரசகுமாரியின் கருத்த மீசையும், பயங்கரப் பார்வையும் அவனைக் கலக்கிவிட்டன. அவள் உண்மையில் அரசகுமாரியல்ல, ஒரு வாலிபன் என்பது அவனுக்கு எப்படித் தெரியும். அரசன் தன்னை ஏமாற்றிவிட்டான், அவமானப் படுத்திவிட்டான் என்று கோபத்துடன் கத்தியை உருவினான். அவன் பட்டாளங்களும் அங்கங்கே சண்டைக்குத்தயாராயின. அவ்வாலிபனைக் குத்த தன் கத்தியை அவனுக்கு நேரே நீட்டினான் சக்ரவர்த்தி குமாரன். மறு நிமிஷம் அது மாலையாக மாறி வாலிபன் கழுத்தில் விழுந்தது. கலியாணம் கலாட்டாவாக முடிவதைக்கண்ட ஜனங்கள் சக்ரவர்த்தி குமாரனைச் சூழ்ந்துகொண்டு காரணத்தை விசாரித்தார்கள். நடந்ததைச் சொன்னான் அவன். ஆனால் ஜனங்கள் அதை நம்பவே இல்லை. ஏனெனில் வாலிபன் அவர்களுக்கு நிஜ அரசகுமாரியாகவே காட்சி அளித்தான். அதனால் ஜனங்கள் சக்ரவர்த்தி குமாரனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று சொல்லி அவனைக் கட்டி அந்த சிலந்தி இருந்த அறையில் போட்டு பூட்டிவிட்டார்கள்.

அவ்வாலிபனும் அங்கிருந்து மறைந்து சக்ரவர்த்தி குமாரன் இருந்த அறைக்கு வந்தான், 'கலியாணப் பிள்ளையே! பார்த்தாயா என் தந்திரத்தை. இங்கு உன் தாத்தா வந்தாலும் இந்த அறையைவிட்டு உன்னால் போக முடியாது' என்று சொல்லி மறைந்தான். அவன் மறைந்த போது சிலந்தியாக அவனுக்குக் காட்சியளித்து மறைந்தான்.

மறுநாள் அரசகுமாரியின் விருப்பப்படியே அந்த ஏழை வாலிபனுக்கும், அவளுக்கும் கலியாணம நடந்தது. ஜனங்களும் அரசகுமாரியின் பெருந்தன்மையைக் கண்டு குதூகலப்பட்டனர். அரசகுமாரியும் ஏழை வாலிபனுடன் மிகுந்த சந்தோஷமாக வாழ்ந்து வந்தாள்.

வீரப் பெண்கள்

பிரிட்டிஷ் அரசனாகிய இரண்டாவது ஜேம்ஸ் கொடுங்கோல் ஆட்சி புரிந்துவந்தான். அவன் நல்லவர்களுக்கெல்லாம் தீமையே செய்துவந்தான். அவன் ஒருவர் பேச்சையும் கேட்காமல் தன்னிஷ்டப்படியே நடந்து வந்தான். அவனுக்கு விரோதமாக யாராவது கிளம்பினால்,அந்தமனிதரை உயிரோடுவிடமாட்டான்.ஆகவே ஜனங்களும் அவனை ஒழித்து வில்லியம் என்பவரை அரசனாக்க ரகசியமாக ஏற்பாடுசெய்து வந்தார்கள். அப்பொழுது ஸர் ஜான் காக்ரேன் என்ற பிரபு ஜனங்களுடன் சேர்ந்துகொண்டு ஜேம்ஸுக்கு எதிராக சதியாலோசனை செய்து வந்தார். இவ்விஷயம்ஜேம்ஸுக்குஎப்படியோ தெரிந்துவிட்டது. உடனே காக்ரேனை கைதுசெய்து எடின்பரோ என்ற நகரத்தில் சிறையிலடைத்தான். காக்ரேன் செய்த குற்றத்தை விசாரித்த பிறகுதான் அவருக்கு என்ன தண்டனை கொடுப்பதென்ற முடிவுக்கு வருவது என்று தீர்மானித்திருந்தான். அவர் குடும்பத்தையே சிறையிலடைத்து விடுவது என்று தீர்மானித்து அவர் மனைவி, குழந்தைகள் இவர்களைத் தேடிக்கொண்டிருந்தான். கடவுள் புண்ணியத்தில் அவர்கள் அரசன் கையில் சிக்கவில்லை; எனினும் காக்ரேன் தன் குடும்பத்தார் தன்னைச்சிறையில் வந்து பார்க்க வேண்டாம்! என்று சொல்லியனுப்பியிருந்தார். ஏனெனில், தன் குடும்பத்தார் யாராவது சிறைக்குத் தன்னைக்

க்ரிஸெல்

★

காண வந்தால், ஒருவேளை சந்தேகத்தினால் கைது செய்யப்பட்டால் என்ன செய்வது என்ற பயந்தான் அவருக்கு.

ஸர் ஜான் காக்ரேனின் குற்ற விசாரணை நடந்து முடிந்து விட்டது. தண்டனை இன்னும் கூறப்படவில்லை. என்ன தண்டனை அவருக்குக் கிடைக்குமோ என்று ஜனங்கள் பயந்துகொண்டிருந்தார்கள். அப்படி இருக்கையில், ஒருநாள் க்ரிஸெல் என்று பெயருள்ள காக்ரேனின்பெண் ரகசியமாக அவரைக் காண எடின்பரோ சிறைக்கு வந்தாள். அவளைக் கண்டதும் காக்ரேனுக்குப் பயம் உண்டாகி விட்டது. 'க்ரிஸெல்! நீ தவறான காரியம் செய்துவிட்டாய். உங்கள் எல்லோருடைய நன்மையையும் எண்ணித்தான் நான் சிறையிலிருக்கிறேன். நீ எதற்காக ஜேம்ஸின் கொடிய வலையில் சிக்க விரும்புகிறாய்? இங்கிருந்து உடனே போய்விடு' என்றார்.

அதைக் கேட்டதும் அவள் சிரித்தாள். அவள் மிகவும் தைரியம் உள்ளவள். எந்தத் துன்பத்தையும் பொறுத்துக்கொண்டு, அதிலிருந்து எப்படியாவது தப்பித்துக் கொள்ளும் கெட்டிக்காரத்தனம் உள்ளவள். அவளுக்காக அப்படி அவள் தகப்பனார் பேசுவது அவளுக்குப் பிடிக்கவில்லை.

'அப்பா! கடவுள் குழந்தைகளை எதற்காகக் கொடுக்கிறான்? அவர்களைக் காணும்போதெல்லாம் பெற்றோர்கள் எத்தனையோ கஷ்டங்களை சிறிது மறந்து சந்தோஷமாக இருக்கத்தான். இவ்வளவு காலம் சிறையிலடைபட்டுக் கிடக்கும் உனக்கு, சிறிது ஆறுதல் அளிக்கத்தான் வந்தேன்' என்றாள் க்ரிஸெல்.

பெரிய உபதேசங்களைச் சொல்லிய தன் பெண்ணைப் பார்த்து, 'சாகப் போகிறவனுக்கு ஆறுதல் எதற்கு?' என்றார் அவர்.

சிறிது திடுக்கிட்டு அவள், 'சாவா, உனக்கா சாவு? நியாயம் வழங்கியாகிவிட்டதா?' என்று கேட்டாள்.

'நேற்று சொல்லிவிட்டார்கள். என்னைத் தூக்கிலிடுவதுதான்

என்று தீர்மானித்துவிட்டார்கள். அக் கட்டளை இன்று தபால் மூலம் வருகிறது' என்றார் காக்ரேன் இதைக் கேட்டதும் க்ரிஸெல் கண்களில் நீர் ததும்பியது. அப்படியே சிறிது நேரம் பொம்மைபோல் நின்றாள். அப்படி நிற்கும்போது ஏதோ அவள் மூளையில் புகுந்தது. கண்களைத் துடைத்துக்கொண்டு தகப்பனாரிடம்கூடச் சொல்லிக்கொள்ளாமல் அவ்விடத்தைவிட்டு வெகு வேகமாக போய்விட்டாள் காக்ரேனுக்கும் ஒன்றும் புரியவில்லை.

வெளியே சென்ற க்ரிஸெல், தன் உடையை மாற்றி ஆண் வேஷம் போட்டுக்கொண்டு முக மூடியையும் அணிந்து, குதிரையைத் தட்டிவிட்டு லண்டன் நகரைநோக்கி வாயுவேகத்தில் சென்றாள். வழியில் தபால்காரனைப் பார்த்தவுடன், அவளுடைய சந்தோஷம்பன்மடங்காகியது தபால்காரன் கிட்டத்தில் வந்தவுடன் சரேலென்று கத்தியை அவன் மார்பில் நீட்டினாள். எதிர்பாராத விதமாக மாட்டிக்கொண்ட தபால்காரன், பயத்தினால் தபால் பெட்டியை கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டான். கிரிஸெல் தபால் பெட்டியை பிரித்தாள். அதில் தன் தகப்பனாரைத் தூக்கிலிட உத்தரவும் இருந்தது. அதைமாத்திரம் எடுத்துக் கிழித்திவிட்டு தபால் பெட்டியை அருகிலுள்ள தபால்ஆபீஸில் நடுவழியில் கிடந்ததாகக் கொடுத்துச் சென்றாள். உத்தரவு போய்ச் சேராததினால் காக்ரேன் தூக்கிலிடப்படவில்லை. மறுநாளே அரசனுக்கு லஞ்சம் கொடுத்து. தன் தகப்பனாரை சிறையிலிருந்து விடுவிக்க ஏற்பாடு செய்தாள்.

காக்ரேனுக்கு இவ்விஷயங்கள் தெரிந்தவுடன்,க்ரிஸெலைப் புகழ்ந்தார். ஜனங்களும் அவள் தைரியத்தைக் கண்டு பெருமையடைந்தனர். ஜேம்ஸுக்குக்கூடக் கடுக்காய் கொடுக்கக்கூடிய ஒரு பெண் இருந்தாள். அவள் பெயர்தான் 'க்ரிஸெல்' என்று ஆங்கிலேய சரித்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

கன்னியும் செல்வரும்

★

ஒருவர் பெரிய பணக்காரராக இருக்கலாம். பத்து கார் வைத்துக்கொண்டிருக்கலாம். மாளிகையிலே வசிக்கலாம். இருந்தாலும் தன் செல்வத்தை பிறருக்கும் கொடுத்து உதவி செய்தால்தான் அவர் உண்மையான பணக்காரர் என்று கூறப்படுவார். அப்படிக் கொடுக்காதவர்களை ஜனங்கள் 'இந்தக் கருமியிடம் நமக்கென்ன வேலை!' என்று சொல்லி ஒதுக்கிவிடுவார்கள். அவன் பணக்காரனாயிற்றே என்று சிறிதுகூடப் பயப்படமாட்டார்கள் ஜனங்கள். அவன் அருகில்கூட போகமாட்டார்கள். உதாசீனம் செய்வார்கள். பணக்காரர்கள் கள்ளிப் பூவைப்போல கள்ளிப்பூ எவ்வளவு அழகாக இருக்கின்றது. மொட்டு, அரும்பு. பூ, இவையெல்லாம் பிரமாதமாக இருக்கின்றன. இருந்தாலும் அதை உலகம் வெறுக்கிறது. ஜனங்களுக்கு உபயோகப்படாமல் இருக்கிறது. ஜனங்களுக்கு உதவியில்லாத எதுவும் உலகத்தில் இருந்தாலும் ஒன்றுதான் இல்லாவிட்டாலும் ஒன்றுதான். கள்ளிப்பூ செல்வர்களைப் போலத்தான் என்று நாலடியாரில் கீழ்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

அள்ளிக் கொள்வ
அன்ன குறுமுகிழவாயினும்
கள்ளிமேல் கைநீட்டார்
சூடும்பூ அன்மையால்
செல்வம் பெரிதுடையராயினும்
கீழ்களை நள்ளார் அறிவுடையார்.

எங்கும் சுதந்திரம்

அன்புள்ள அண்ணாவே!

நீயும் இன்று சுதந்தரத்துடன் இருப்பாய் என்று நினைக்கிறேன். எங்கள் ஊரில் எங்கும் சுதந்திரம் என்ற பேச்சாகத்தானிருக்கிறது. ஏனெனில் எங்கள் வீட்டுப் பால்காரன்கூட சிறிது தாமதித்துத்தான் வந்தான். 'ஏன் லேட்டாக வந்தாய்?' என்று கேட்டவுடன். 'இன்னிக்குசுதந்திரதினமில்லையா என்று சொன்னான். மாடுகூட அன்று கறக்கவில்லை. அதுவும் சுதந்திரத்தினத்தைக் கொண்டாட ஆரம்பித்துவிட்டது. ஹோட்டலுக்கு காப்பிசாப்பிடப் போனால் 'சுதந்திர தினம். நாங்கள் கொடுப்பவைகளைத்தான் நீங்கள் சாப்பிடவேண்டும்' என்று எழுதப்பட்டிருந்தது உள்ளே நுழைந்து கொடுத்த காப்பியைத் தொட்டால் ஐஸ் மாதிரி இருந்தது. சென்ற வருஷ சுதந்திர தினத்துக்குப் போட்டு வைத்திருந்த காப்பியாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்து அதை அப்படியே வைத்துவிட்டு எழுந்திருந்தேன். அப்பொழுது திடீரென 'அம்பி, இன்னிக்கு நாங்கள் கொடுப்பதை சாப்பிட்டுவிட்டுத்தான் போகணும்' என்று பயமுறுத்தினார் ஒரு ஸர்வர் இதுவும் சுதந்திர தினத்தின் அறிகுறிதான். பழைய வடை, பகோடாக்கள் ரம்யமான வாடையுடன் ஹோட்டலை பிரமாதப்படுத்தியது. அதில் எனக்கு மூச்சே நின்றுவிடும்போலிருந்தது. அந்தப் பழைய வடைகளுக்கும் போட்டி அதிகமாகவே கூட்டத்தில் மெதுவாக நழுவினேன் நான். மார்க்கெட்டுக்கு ஏதாவது வாங்கி வரலாமென்று போனேன். 'அங்கு ஒன்றுக்காவது விலை பேசமுடியவில்லை. அன்று சுதந்திர தினமல்லவா. நாம் கூடையிலே கைவைக்க முடியவில்லை. கடைக்காரன் கொடுத்த அழுகிப்போன காய்கறிகளை எடுத்துக்கொண்டு அவன் சொன்ன காசைக் கொடுக்க வேண்டியதாயிற்று. அவர்களும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறார்கள் போலும். இம்மாதிரியே அன்று எங்கு பார்த்தாலும் சுதந்திரப் பேச்சாகவே இருந்தது. பகல் முழுவதும் அலைந்த எனக்கு இரவு படுத்துக் கொண்டவுடன் தூக்கம் வர ஆரம்பித்தது. ஆனால் கொசுக்களும் சுதந்திர தினத்தைக் கொண்டாடவே எனக்குத் தூக்கங்கூட இல்லாமல் போய்விட்டது. கொசுக்கள் படை திரண்டு வந்து என்னைப் பாய்ந்து பாய்ந்து கடிக்கவே, ஒரு வேளை பாரதியின் 'கொட்டு முரசே' பாட்டை அபிநயம் பிடிக்கிறதோ என்று நினைக்கும்படி இருந்தது. நன்றாக கழுத்துவரை மூடிக்கொண்டு படுத்தேன். உடனே கட்டிலிலிருந்த மூட்டைப்பூச்சிகள் சுதந்திர தினத்தைக் கொண்டாட வெளியே வந்து என் முதுகை பதம் பார்த்தது. அவைகளும் பாரதியின் பாட்டைத்தான் நினைத்து அம்மாதிரி செய்தன. லேசான கொசுவுக்குப் பயந்து இப்படி மூடிக்கொண்டு இருக்கும் பயந்தாங் கொள்ளி, நீ! வலிமையற்ற நெஞ்சினாய் (கட்டிலைவிட்டு) போ! போ! போ! என்பதுபோல் இருந்தது. அதற்குள் கொசுக்கள் என் தலையைப் பிடித்துக் கொண்டு தூங்காதே தமிழா! என்று காதருகில் வந்து கூச்சலிட்டது. ஐயோ! எல்லோரும் விடுதலை அடைந்தார்களே. கொசுவே! எனக்கு விடுதலை அளிக்கமாட்டீர்களா. தலையை விடுத்து விடுதலை அளியுங்கள் என்று கெஞ்சினேன். எல்லோருக்கும் அன்று சுதந்திர தினம்தான். ஆனால் எனக்கு மாத்திரம் அடிமை தினமாகவே அன்று கழிந்தது எங்கும் சுதந்திரம் என்பதே போச்சு என்றுகூட சொல்லும்படியாக இருந்தது. அடுத்த சுதந்திர தினத்தன்றாவது சுதந்திரமாக இருக்க கடவுளை துதிக்கும்

அன்புள்ள அம்பி

குரு பார்க்கிறார்

ராமுவின் தகப்பனார் ஒரு ஜோஸ்யரைப் பார்த்து, 'பையன் ஜாதகத்தைப் பார்த்து அவனுக்குப் படிப்பு வருமா வராதா என்று சொல்லுங்கள் என்றார்.

'ஜோஸ்யர் ஜாதகத்தைப் பார்த்துவிட்டு,'பையனுக்கு இனிமேல் நன்றாகப் படிப்பு வரும். குரு பார்க்கிறார்' என்றார்

ஆரம்பத்தில் ரேகாசாஸ்திரம் தர்சனம் ஸ்பர்சனம், ரேகா விமர்சனம் என்று மூவகைப்பட்டது என்று கூறினேம். பின்னர் காலவரையறைக்கும் குறிப்பிட்ட கேள்விகளுக்குப்பதில் சொல்லுவதற்கும் உபகரணமாக ஸ்வாஸ பரீக்ஷையைப் பற்றி எழுதுகிறேம் இந்தக் கட்டுரையில் கேட்போன். கேட்கப்பட்டவன், பக்கத்தில் நிற்பவன் முதலியவர்கள் சேஷ்டா பலன்களையும் இதர நிமித்தங்களையும் அறிந்துகொள்வோம். பிறகு ரேகைகளைப்பற்றி மீண்டும் தொடர்ந்து எழுதுவோம்.

சேஷ்டையென்பது தான்ஸ்வயமாக, எண்ணமின்றிச் செய்யும் கைகால் அசைத்தல், நிற்றல், உட்காருதல் கையை வளைத்தல்போன்ற அங்கசேஷ்டைகளைக் குறிக்கும் பேசுதல், முதலிய செய்கைகளையும் குறிக்கும்.

यदवस्थः स्वयं चेष्टा स्वस्य यादृश्यपि स्फुटा ।
तदवस्थे तां च चेष्टामादिशेत प्रत्यक्षगोचरे ॥

என்று ஸ்காந்தசாரீரத்தில் இதன் பிரமாணம் சொல்லப்பட்டிருக்கிறது இந்த சேஷ்டைகள் சந்தேகத்திற்கு இடமன்னியிலும். ஏற்ற சமயத்திலும் கண்ணெதிரே காணவேண்டும்.

ப்ரேக்ஷ்ய (கேட்போன்) லக்ஷணம்

ஒரு விஷயமாக ஜோதிடனைக் கேட்கவரும் ஆளுக்கு ப்ரேக்ஷியன் அல்லது தூதன் என்று பெயர். தனக்காக இருந்தாலும் சரி, பிறர் சார்பாக வந்தாலும் சரி. இந்த தூதன் ஜோதிடனிடம் கேள்வியைக் கேட்கும்போது இடதுகாலை முன்பு வைத்தால். சுபபலன் என்றும் வலது காலை முன்பு வைத்தாலோ அல்லது எடுத்தாலோ அசுபபலன் என்றும் சொல்லவேண்டும் காலை அசைக்காமல் இருந்தாலும் சுபசூசகம்

தணிந்த. அசங்கியமான பிரதேசத்தில நின்றுகொண்டு உடலை வளைத்துக்கொண்டு கேட்டால் அசுபபலன். உட்கார்ந்து கேட்ட பிறகு எழுந்தால் சுபம்; நின்று கேட்டு உட்கார்ந்தாலும் சுப சூசகம்.

7. லாஞ்சனங்கள்

★

தூதன் ஜோதிடனைக்கண்ட பிறகு கேள்வியைக்கேட்கு முன் எத்தனை இடத்தில் தாமதித்துப் பிறகு கேட்டானே, அத்தனை நாளுக்குப் பிறகு தான் கேட்கும் காரியம் கைகூடும்.

தூதனுக்கும் ஜோதிடனுக்கும் இடையே குறுக்காக ஒரு ஆள் செல்ல நேரிட்டால் எதிர்பார்த்த உதவிகிட்டாமற் போகும்.

கையை அசைத்து முகத்தைத் திருப்பிக்கொண்டு கேட்டாலும்,கேட்கும்போது கேட்கவந்த சங்கதி மறந்து போனாலும் ஏற்படவிருக்கும் பலன் அசுபம். பலமாக தானே அடித்துக் கொண்டாலும் பிறர் அடித்தாலும் உடனே மரணம்.

தூங்கும்போது கேட்டல், தலையை அவிழ்த்துக்கொண்டே கேட்டல், அசுத்தமான கர்மாக்களைச் செய்துகொண்டு கேட்டல், அழுதுகொண்டு கேட்டல், வரும்போது தடுத்துக் கேட்டல், எதையாவது ஒடித்துக்கொண்டே கேட்டல். வஸ்திரத்தை அவிழ்த்து உடுத்திக்கொண்டே கேட்டல், ஓடும்போதும், ஹோமம் செய்யும்போதும் கேட்டல். கை கால்களைக் கட்டிக்கொண்டு கேட்டல். கண்ணைப் பிசைந்துகொண்டுகேட்டல், நைன்யத்தைக் காண்பித்துக் கேட்டல், உலர்ந்த குச்சிகள், புல் முதலியவற்றை ஒடித்துக்கொண்டே கேட்டல் அசுபம்.

पादे पादं समाधाय तिष्ठेद् यदि नरः स्वयम् ।
आयुराप्त्यै भवेत् तत्र कार्या नस्याद् विचारणा ॥

वामश्चेत् तथः स्थः स्यान्मृतिः सन्देहमृच्छति।
अपरं पादमुद्धृत्य पादे स्थापमति स्वयम् ॥
उच्चस्थं पादमाहृत्य पादे स्थापयति ध्रुवा ।
निजेपादे समुद्धृत्य वामं स्थापयति ध्रुवम् ॥
निर्गमे मूलरोगस्य यदर्शः संज्ञितं भवेत्।
रुधिस्रावसंसिद्धौ मरणं समुदीरयेत् ॥
घ्राणद्वारं पिधायोच्चैर्यदि तिष्ठेत तत्रसा।
स्वररोधः पिधानेन कण्टस्य स्यान्न संशयः ॥

தூதன் இடதுகாலை வலது காலின் மேல்வைத்தால் ஆயுள் பிரச்னமானல் தீர்க்காயுசு காலை மாற்றிவைத்தால் விரோத பலன். புறப்படும்போது மூலரோகி எதிப்பட்டாலும் ரத்தக் குறி தென்பட்டாலும் மரணம் சம்பவிக்கும். மூக்கைப்பிடித்தல், கழுத்தைப்பிடித்து நெறித்தல் இரண்டும் அசுப பலனைக்கொடுக்கும். காதைத் தொடுதல் அவ்விதமே

கயிறு பிரிக்கும் சமயம், நகத்தைக் கொண்டு சொறியும் சமயம், எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யும் ஸமயம்; மணல், அஸ்தி, சரம் தரித்த ஸமயம்; வியாதி சமயம்; வஸ்திரத்தைக்கொண்டு கழுத்தை மூடின சமயம்; அசுபமான வார்த்தைகளின் நடுவில் கேட்கப்பட்டாலும் பிரேத கர்மாவின் நடுவில் கேட்டாலும்அசுப பலன்

கத்தி. வாள் வைக்கோல், வலை, உமி, செருப்பு, பீலி. தோல், கொம்பு, துடப்பம் பிரேதாலங்காரபுஷ்பம், உலக்கை வகித்த சமயமும், பசியான

சமயமும் கேள்வி கேட்கப்பட்டால் அசுப பலன் தரத்தக்கவை

சோகம், கோபம் தளர்ச்சி முதலிய தோற்றங்கள் தூதனின் முகத்தில் தோன்றினல் அல்லது கெட்ட மனதின் சாயை கண்டாலும் அசுபபலன் அவன் விளக்கை நோக்கி நின்ருல், துக்கம் ஏற்படும்.

मधुरं वस्तु भुञ्जश्चेत् प्रेक्ष्यत्वं झटिति म्रजेत् ।
जरठादृश्यते पृष्ठे मरणां संशयाद् वदेत् ॥
वदन्ति चेद् भीपिकया केचित् तत्रच पृच्छति ।
दैवज्ञान् तदपि प्रोत्कं मरणं मात्र संशयः ॥
धूमस्थो यदि पृच्छ्येत ध्रुवं तत्र मसंशयः ।
कृमिदर्शनसन्दष्टौ मरणं नात्र संशयः ॥
डुण्डुभादेः समीपस्थे वर्तने पृच्छति ध्रुवम् ॥
मार्जारः श्वा दिवाभीतो देवद्वेपी पृथुश्रावाः ।
दर्शिका श्रोत्र निष्पेपी त एते दर्शनेऽशुभाः ॥
तिष्ठन्नुल्लङ्घ्य पादं स्वमेकं पृच्छति तत्रच ।
भुवं लिखन् पृच्छति चेत् पादेनाङ्गुलिना थवा ॥
पादस्थेन च हस्तस्थान्न च स्यादिति निश्चितः ।

தித்திப்பான பண்டம் உண் கையில் கேட்டால் ஜோதிடம் பார்ப்பதை நிறுத்திவிட வேண்டும். பின்புறம் கிழவியைக் காண நேரிட்டால் அசுப பலன் பயப்படும்படியான சொல் கேட்டாலும் அப்படி. புகைபிடித்தல், கிருமிகளின் தர்சனம், பாம்பு, பூனை, நாய், பகலில் பயப்படும் ஜந்துக்கள் நாஸ்திகன். கழுதை முதலியன அசுப பலன் தரத்தக்கவை தாண்டுதல், பூமியைக் கீறல் முதலியவையும் அப்படியே.

நனைந்த வஸ்திரம், கிழிந்த வஸ்திரம். சிவப்பு அல்லது கருப்பு நிற வஸ்திரம் அல்லது சிவந்த புஷ்பத்தைத் தரித்தவன் ஆபத்தைக் காண்பிக்கிருன். வெளுத்த வஸ்திரம், வெளுத்த புஷ்பாலங்காரம் கண்ணுடி முதலிய மங்கள வஸ்துக்கள் சுப சூசகம்

ஹா ஹா என்ற சப்தம், தும்மல்; விருக்ஷம் முறிதல், கொடி மரம் சாய்தல், வஸ்திரம், குடை, செருப்பு இவற்றுக்கு கேடு வருதல் பொருள் கெடும் அர்த்தத்தைக்கொடுக்கும்சொல்,கோர பக்ஷியின் சப்தம், விளக்கு அணைதல், பூரண கும்பம் உடைதல் முதலியன அசுப நிமித்தங்களாகும்.

एवमेव प्रेक्ष्यचेष्टा अन्या अपि विनिर्दिशेत् ।
औचित्येन समीक्ष्याथो धीमानूह परायणः ॥

மேலே கூறப்பட்டவை ப்ரேக்ஷியன் அல்லது தூதனின் அங்க சேஷ்டை, நிமித்தங்களின் பலன்கள். உசிதம்போல் வித்வான் இதர சேஷ்டா நிமித்தங்களையும் ஆராய்ந்து பலனை ஊகித்துக்கொள்ள வேண்டும்

பிரேக்ஷக லக்ஷணம்

यदवस्थः स्वयं तां तामवस्थां समुदीरयेत् ।
यच्चभुक्तं तदेवास्य वदेदिति विनिश्चितिः ॥

தான் எந்த அவஸ்தையில் (கேட்கப்படும் சமயத்தில்) இருக்கிருனே, என்ன சாப்பிட்டானே. அதையே பிரசின விஷயமாக பலன் என்று கொள்ள வேண்டும்.

लक्षणानि पुरोक्तानि प्रेक्ष्ये यानि गतानि तु ।
वैपरीत्येन तान्यत्र जनयेयुः परां विदम्॥

தூதனுக்கு வலது புரத்தில் கண்டவைகட்கு சொல்லப்பட்ட பலன் பிரேக்ஷகனுக்கு (அல்லது ஜோதிடனுக்கு) இடது புறத்தில் காணப்படுபவைகட்குப் பலன். இவ்விதம் மாற்றிப் பொருள் கொள்க.

ஸாக்ஷி சேஷ்டா லக்ஷணங்கள்

தடஸ்தன் அல்லது ஸாக்ஷி என்பது பக்கத்தில் நிற்போனைக் குறிக்கும் அவனுடைய அங்க சேஷ்டைகளும் ப்ரச்னத்தின் பலாபலன்களைக் காண்பிக்கும்.

आकाशहस्तः साक्षी चेन्मरणं तत्र विन्दति ।
आत्महस्तः स चेत् स्यात् तत्संशयो भवति ध्रुवम् ॥
ऊर्ध्वं पश्यति साक्षी चेदग्निस्थश्चेदपि ध्रुवम् ।
दक्षिणस्थस्तथा पृच्छेत् भयं मरण कारणम् ॥
जीववस्तुविनिर्भेदः स्थावरस्यापि कृन्तनम् ।
रोमोत्खातस्तथा प्रयुस्तटस्थस्यापि लक्षणम् ॥

ஆகாசத்தில் கையைத் தூக்கிக் கொண்டிருத்தல், உயரே பார்த்தல், அக்னி மூலையில் இருத்தல், தெற்கிலிருந்து கேட்டல், உயிருள்ள ஜந்துக்களைக் கொல்லுதல், உயிரற்ற பொருள்களை உடைத்தல், ரோமத்தைப் பிடுங்குதல் முதலியவை அசுப சூசகங்கள்

क्लृप्ते फले स्वयं धात्रा प्रत्याय प्रकल्पितम् ।
उक्तेतु कथने चास्य विश्वासाय वद् बुधः ॥
एवं यत्प्रेक्षणायां स्यात् स्वदृग्विषयतां गतम् ।
तत्फलानुभवे यस्य तल्लाञ्छनमुदाहृतम् ॥

இவ்விதம் பிரசின சமயத்தில் நம் கண் முதலிய வெளி இந்திரியங்கள் முன் தோன்றும் காட்சிகள் கடவுளால் நம்பிக்கையுண்டாகுமாறு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன அதனல் லாஞ்சனம் என்று அவைகளைச் சொல்லுவது வழக்கம். ஆகையால் இந்த அடையாளங்களை ஏன் கவனிக்க வேண்டும், அவைகட்கும் குறிப்பிட்ட பலன்களுக்கும் என்ன சம்பந்தமென்று வீண் ஆலோசனை செய்ய வேண்டியதில்லை. கடவுளின் சித்தம் இது,



குடும்ப வைத்தியம்

மறுநாள் காலையில் 6-மணிக்கே எழுந்துவிட்டேன். ஹோட்டலைச் சேர்ந்த பையனிடம் ஸ்நானத்திற்கு வெந்நீர் வேண்டுமென்றும் உடனே பலஹாரமும் காபியும் ரூமிலேயே வரவழைக்கவேண்டும் அதற்குள்ளாக ஹோட்டலுக்குக் கொடுக்கவேண்டிய பில் என்னவென்று கணக்கு போட்டுவைக்கும்படியுஞ் சொல்லியனுப்பினேன் எல்லாம் நான் சொன்னபடியே துரிதமாக நடந்தன. நண்பரொருவர் அனுப்பியிருந்த காரும் வந்து காத்துக்கொண்டிருந்தது. 6-30 மணிக்குள் எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு கீழே இறங்கி வந்து ஹோட்டல் மானேஜரின் ஆபீஸிற்குப்போய் பில் என்ன கொடுக்கவேண்டுமென்று கேட்டேன் மொத்தம் ரூ. 15-4-0 ஆயிற்றென்றும், நான் முதல்நாள் மாலை கொடுத்த அட்வான்ஸ் போக ரூ 10-4-0 கொடுக்கவேண்டுமென்றும் ஆயினும் முந்தின தினம் என்னைக்காண வந்திருந்த நண்பருள் யாரோ ஒருவர் பில் தொகையை என்னிடமாக வாங்கவேண்டாமென்றும் தம்மிடமனுப்பும்படியுஞ் சொல்லி இருக்கிறரென்றும் ஆகவே நான் பணமொன்றும் கொடுக்கவேண்டாமென்றுஞ் சொன்னர். ஏற்கெனவே நண்பர்கள் என்னைத் தமது அன்பினல் கொன்றுவிட்டனரானதால் கடைசியான இச்செயல் செத்தவனையடிப்பதற்குச் சமமென்றும் ஆகவே பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு எவ்வளவோ வேண்டிக்கொண்டும் தீர்மானமாக முடியவே முடியாதென்று சொல்லிவிட்டார் வேறுவழியில்லை ஆகவே ஹோட்டலில் குற்றேவல் புரிந்த வேலைக்காரர் ஆகாராதிகளை விளம்பி உதவிய போஷகர் ஆகியவரையெல்லாம் கூப்பிட்டு ஆளுக்குக் கொஞ்சமாக இனும்களை வழங்கிவிட்டு—கார் டிரைவரை கவனிக்கச் சென்றேன் அவனே ஹோட்டல் மானேஜரைவிட பிடிவாதக்காரனுயிருந்தான். ஸ்வாமி! நீங்கள் ஊரில் சவாரி போகுமிடங்களில் கடை கண்ணிகளிலிறங்கி ஏதாவது ஸாமான்கள் வாங்கினலும், வேறு ஏதாவது செலவுகளேற்பட்டாலும் உங்களை ஒரு பைஸா செலவழிக்கவிடக்கூடாதென்று ஜரூராக உத்திரவிட்டுக் கைவசம் தாராளமாய்ப் பணத்தையுங் கொடுத்தனுப்பியுள்ளார் எங்கள் எஜமான். நாங்கள் உங்களூருக்கு வரும்போது நீங்கள் எங்களை கவனித்துக் கொள்ளலாம். தற்போது ஒன்றும் வேண்டாம். மன்னிக்கவும், ஏறுங்கள் நேரமாகிறதே என்றான், அட இப்படியும் வேலைக்காரர்கள் இருப்பரோ! இந்த நாட்டிலா மழையில்லாமலும் பஞ்சமும் பிணியும்! என்றெண்ணி ஆச்சரியப்பட்டேன் பிறகு 7 மணிக்குச் சரியாக முந்தினமாலை சென்றிருந்த டாக்டரின் 'வைத்தியசாலைக்குச் சென்றேன் டாக்டரும் அவர் சொன்ன நோயாளியுடன் காத்திருந்தார். நோயாளியைப் பார்த்தேன். காலில் ஆணிகள் விழுந்திருந்தன வலதுகாலில் 5-ம் இடதுகாலில் 4-ம் இருந்தன.. வலது காலிலிருந்த ஆணியொன்று சுமார் ஒரு ரூபா யகலமிருந்தது. மற்றவை ஒரு தம்படி யகலம் சுமாருக்கிருந்தன

ஆணி

★

இவற்றுள் ஒன்றிரண்டு பாதிதூரம் விழுந்து குழிபட்டுமிருந்தன ஆயினும் ஒன்றிலாவது அமர்ந்திருலுங்கூட நோவிருக்கவில்லை இடதுகாலில் அப்படியில்லை எல்லா ஆணிகளுமே ஒரு தம்பிடிக்குஞ் சிறியவைகள்தான். ஆயினும் அவை யாவும் காலைக் கீழே வைக்கவொட்டாதபடி விபரீதநோவு வீட்டிலுள்ளேயே நடமாடும்போது கூட செருப்பில்லாமல் நடக்க முடியாது மற்றும் விரல்களின் மேல் புறங் காற்புறத்தில், இரண்டொரு ஆணிகள் பூட்ஸ் போட்டதால் ஏற்பட்டவை மொத்தத்தில் பூட்ஸ் போடவே முடியாது செருப்பில்லாவிட்டால் நெறிஞ்ஜில் முன்மேல் நடப்பதுபோல்தான் வேதனை பனிக்கட்டிகள் உறைந்திருக்கும் பிரதேசங்களில் சக்கரம் வைத்த பூட்ஸைப் போட்டுக் கொண்டு ஸ்கேடிங் என்ற விதத்தில் சருக்கிச்செல்வோர் கைகளை நீட்டியும் விசிறியுஞ் செல்வதுபோல், செருப்பில்லாவிட்டால் கம்பளத்தின் மீது நடப்பதாயினும் இவர் அதேவித நடையாகத்தான் நடப்பார்.

பரீக்ஷித்து விட்டு, வலது காலிலுள்ள ஆணிகள் அவ்வளவாக முற்றவில்லை என்றும் இடது காலிலுள்ளவை சிறியவைகளானாலும் அதிகம் முற்றியிருப்பவை என்று தோன்றுவதாகவும் எனது மதிப்புக்குரிய அபிப்பிராயத்தைச் சொன்னேன்.

டாக்டர் சிரித்துக்கொண்டே அப்படியில்லை என்றும் வலது காலிலுள்ளவை சிகிச்சிக்கப்பட்டு வருபவையென்றும் 4, 5 தினங்களுக்கு முன் வலது காலிலிருந்தவைகளே இடது கால் ஆணிகளை அதிக கடினமானவையாகவும் அதிக ஆழமானவையாகவும் அதிக நோவை தருவனவாயுமிருந்தனவென்றும், 4, 5 தினச் சிகிச்சையில் இவ்வளவு தூரம் ஆணிகள் மிருதுவாகியும் சில பாகங்கள் தாமே தேய்ந்துமிருப்பதாய்ச் சொன்னர். எனக்கு மலைப்பாயிருந்தது இந்த ஆணி என்பது என்ன? சாஸ்திரங்களிலுள்ள பரிபாஷைப் பதங்களைவிட்டு பாமர பாஷையில் சொல்லிப் பார்க்கலாம்.

குழந்தை பிறக்கும்பொழுது மிக மிருதுவான சரீரமுள்ளதாயிருக்கிறது. உடம்பிலுள்ள தோலைப்போலவே உள்ளங்கைத்தோலுங்கூட மிருதுவாயிருக்கிறது உடம்பின் தோலைவிடவும் மெல்லியதோவென்றுகூடச் சந்தேஹக்கக்கூடிய நிலையில் வாழைக்குருத்தைப்போல் சுருண்டு மூடிக்கொண்டிருக்கிறது. உள்ளங்காலின் தோலும் ஏறத்தாழ இப்படியேதானிருக்கிறது. உள்ளங்கைத் தோலைப்போல அவ்வளவு மெல்லியதாயிராவிட்டாலும் பிற்காலத்திலிருப்பது போல் அவ்வளவு கனமாகவும் முறடாகவுமிருப்பதில்லை மற்றும் உள்ளங்கையிலிருப்பதுபோலவே உள்ளங்காலிலும் சில ரேகைகளுங்கூடகாணலாம். நாளடைவில் குழந்தை நடக்கத் தொடங்குகிறது. கிரமமாக நடக்க நடக்கக் கரடுமுரடான நிலங்களின்மீதும் மேடு பள்ளங்கள் கல் கட்டாந்தரைகள் மீதும் நடக்க நடக்க ஏற்படக்கூடிய அபிகாதத்தைத் தாங்கக்கூடிய சக்தி

யுள்ளபடி தானுகவே இத்தோல் கனத்துத் தடித்து முறடாகிறது தவல் மிருதங்கம் வாசிப்பவரின் உள்ளங்கைகளையும், கட்டை பிளப்பவன்—செம்மட்டியடிப்பவன்—மண்வெட்டி பிடித்துக் கொத்தி வயலில் வேலை செய்பவன் இவர்களின் உள்ளங்கைகளும், மரமேறிகளின் உள்ளங்கால் உள்ளங்கைகளும் சாதாரணமாய் நமக்கெல்லாமிருப்பதைவிடக் கரடு முறடாய்த்தானிருக்கும் இது எப்படி ஏற்படுகிறது ஏற்படுங்காலத்தில் இங்கு சரீர தாதுக்களில் எவ்வித மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பவைபோன்ற விஷயங்களையறிந்து நமக்காக வேண்டியதில்லை தேவைக்குத் தகுந்தாற்போல் தன்னைத் திடப்படுத்திக்கொள்ளும் சக்தி இந்த தோலிற்கிருக்கிறது என்று மட்டும் அறிந்தால் போதும்.

செருப்பில் ஒரு குறிப்பிட்ட பாகத்தில் மட்டும் அதிகந் தேய்வு ஏற்படுவதுபோல் செருப்பில்லாமல் நடப்பவருக்கும் ஒரு குறிப்பிட்ட பாகங்களில் மட்டும் உள்ளங்காலில் அதிக தேய்வே அபிகாதமோ ஏற்படும். முள் முதலியவை தைப்பதாலும் கல் துண்டுகள் பொத்துக் கொள்வதாலும் செருப்பின் ஆணி முதலியவை தைப்பதாலும், பூட்ஸ்களின் உட்தோல் முறடாயிருப்பதால் புறங்கால்களில் முக்கியமாகவும் கால் விரல்களின் மேற்பாகங்களிலும் அபிகாதமேற்படலாம் அன்றி நசுக்குண்டு போகலாம்

இப்படி அபிகாதாதிகள் ஏற்படஏதுவிருக்குமானுல் அவற்றையும் கூடிய வரையில் தாங்கிக்கொள்ளக்கூடிய விதத்தில் அக்குறிப்பிட்ட விடங்களில்மட்டும் (செருப்பிற்கு லாடமடிப்பதுபோல்) உள்ளங்கால்த் தோல் அதிக கனமாக மாறவேண்டிய அவசியமேற்படுகிறது இது அளவு கடந்து கடினமாகவும் முறடாகவும் மாறுமானுல் அப்போது அக்குறிப்பிட்ட பாகங்களில் தோல் நமது நகங்களைப்போலவும் சில ஸந்தர்ப்பங்களில் அதைவிடக் கடினமாக நாற்காற் பிராணிகளின் குளம்புகள்போலவும் மாறிவிடும் தனித்தபடி இவை சொல்லமுடியாத நோவுள்ளதாய் ஒரு அவஸ்தையிலிருக்கும். பிறகு இவற்றைக் கத்தியால் மேற்படச் சீவினுலும், நகத்தைக் கத்தரித்தாற் போலவே உணர்ச்சியற்றிருக்கும் ஆயினும் இவை உள்ளங்காலில் ஒருகுழியுண்டாகி அக்குழியின் அளவிற்குப் பொருந்தும் வண்ணம் உண்டாக்கப்பட்ட ஒரு கடினமான பொருள் பொருத்தப்பட்டுள்ளது போலாய்விடும். நடக்கும் போதும் காலை ஊன்றி நிற்கும்போது இவ்விடங்களில் நோவில்லாவிட்டால் இவை அழுத்துமிடத்து காலின் சதையில் ஸஹிக்கமுடியாத நோவு உண்டாகும், இவற்றிற்குத்தான் 'ஆணி' என்பர். ஆணியின் தலைபோலிருப்பதாலோ என்னவோ, விரல்களின் மேற்புறங்களிலோ ஒரு தழும்பு போல் ஏற்பட்டு பூட்ஸ் அணியும் போதுமட்டுமல்லாமல் கையால் தொட்டாலுங்கூடத் தலையில் செம்மட்டியாலடிப்பதுபோல் நோவு உண்டாகும் உள்ளங்காலில் ஏற்படும் ஆணிகளைச் சிலர் அவ்வப்போது மேற்புறமாகச் சீவிவிட்டுக் கொள்வர். இதனுல் கொஞ்சநாள்வரையில் நோவு ஒருமாதிரி இருக்கும் சில ஸமயங்களில் இது முழுவதுமே பிய்ந்து வந்து இருந்த விடங்களில் ஆழமான குழிகள் இருக்கும். ஆணிகள் அழுத்தாத காரணத்தால் நடக்கும்போது இவ்வாணிகளிருந்தவிடங்களில் இப்போது வெறுங் குழிகளேயிருப்பினுங்கூட நோவு ஏற்படாது ஆனுல் செருப்பிடாமல் நடந்தால் இக்குழிகளில் கல் முதலியவை குத்தி அதிக வேதனையையுண்டாக்கும் ஆகவே செருப்பில்லாமல் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாத நிலைமையிலாவர்

இவ்வாணிகளைச் சில ஸமயம் நோயாளிக்கு மயக்கங் கொடுத்தோ—அன்றி ஸ்வல்பமானுல் கொடுக்காமலேயோ—வேர் காணக் கத்தியால் தோண்டி எடுத்துக் களைந்து அவை இருந்த விடத்தில் குழியாக்கிப் பிறகு, இக் குழிகளில் ஆணியின் சதையன்றி நற்சதை வளர்ந்து மூடிக்கொண்டு ஸமமாகும்படி தக்க முயற்சியுடன் பார்த்துக்கொள்வதென்றும் சஸ்திர சிகிச்சைதான் ஏதோ சொல்லக்கூடியதும் அல்ப சொல்பம் பலன்தருவதும் நமக்குத் தெரிந்ததுமான சிகிச்சை இச்சிகிச்சையால் மறுபடியும் ஆணி வளரவேவளராதுஎன்ற உத்திரவாதமுஞ் சொல்லமுடியாது. கால் விரல்களின் மேற்புறத்தில் பூட்ஸ்களின் அருளால் ஏற்படும் ஆணிகளுக்குச் சில பேடண்டுகள் விற்கின்றன. அவைகளை மேலுக்குப் பூசுவதால் குணமுண்டாகுமென்று சில விளம்பரங்களைக் காண்கிருேம்.

இதோடு ஆணியைப்பற்றிய புராணத்தை நிறுத்திக்கொண்டு நமது டாக்டர் கையாளுஞ் சிகிச்சையைக் கவனிப்போம்.

அம்மாம்பச்சரிசி என்று ஒரு பூண்டு. சிறிய செடியென்றுஞ் சொல்லலாம் சற்று படர்ந்து ஜாண கலம் வரையில் வளரும். இதை வடமொழியில் தண்டுலீயகமென்பர் இலை சற்று பெரியதாயும் சற்று சிறியதாயுமென்று இருவகை இதில் உண்டு. நமக்கு எதுவானுலும் பரவாயில்லை இதின் இலைக் கிள்ளினுல் காம்பின் கிள்ளப்பட்ட இரு பாகங்களிலும் ஊசி நுனியளவாய் ஒவ்வொரு துளி வெளுத்த பால் இருக்கும். இந்த பாலை அந்த ஆணிகளின் மேல் தடவவும், ஒரு இலையைக் காம்பிடம் கிள்ளுவது இரண்டு நுனியையும் ஆணியின் மேல் தடவுவது பிறகு இன்னுமொரு இலையைக் கிள்ளிப் பாலைத் தடவுவது. இப்படி ஒருசிறிய செடியில் ஜாண் நீளமுள்ள துண்டியிலுள்ள இலைகளைக் கிள்ளுவதாலும்-தண்டையே கிள்ளுவதாலும் வரும் பாலால் ஒரு பாதம் முழுவதும் பூசலாம். இவ்விதம் தினமும் 2, 3 வேளை இதைத் தடவினுல் ஆணிகளெல்லாம் ரப்பர் மாதிரி மிருதுவாகி விடுகின்றன. அமர்ந்தினுலும் நடந்தாலும் வலிப்பதில்லை கால் விரலின் மேல் பாகத்தில் பூட்ஸின் அனுக்கிரஹத்தால் ஏற்பட்ட முட்களுக்கும் இது மிகவும் உபயோகமானது. சிலவேளை இப்படி மிருதுவான ஆணிகள் தாமே நெகிழ்ந்தோ அல்லது தேய்ந்தோ விழுந்துவிட்டுக் குழியாக ஏற்படலாம். சாதாரணமான சதை வளர்ந்து இந்த குழிகள் நிரம்பும்படி கவனித்துக் கொள்ள வேண்டும். இதற்காகக் குழி விழுந்த விடங்களைப் புகைக்க வேண்டும். காலை மாலை இரண்டு நேரத்திலும் ஒரு கால் மணி நேரம் புகைத்த பிறகு—குழிகளில் மேற் சொன்ன பாலையே தடவி வரவேண்டும் ஒன்றிரண்டு வாரங்களுக்குள் நன்முக மாறிவிடும்.

புகைக்கும் விதம்

தேங்காய்க் கொட்டாங் கொச்சி (செரட்டை)யை எரித்து அத்தணலை ஒரு மண்தட்டிலெடுத்துக்கொள்ளவும் இத்தணலின்மேல் காய்ந்து போன காட்டுமரவட்டையை இட்டு, மேலே துவாரமுள்ள வேறொரு செரட்டையால் மூடவும். செரட்டையின் துவாரத்தின் வழியாய் புகை வரும் இப்புகை படும்படி காலைப் பிடித்துக்கொள்ளவும்

இதேபோல் கண்டங்கத்திரியின் காயை யுலர்த்திவைத்துக்கொண்டு முன் சொன்னதுபோலவே புகைக்கவும். இவ்விரண்டில் ஒன்றையோ மற்றொன்றையோ உபயோகிக்கலாம். ஆயினும் ஒன்றைக்காலையிலும் மற்றொன்றை மாலையிலும் உபயோகிப்பது நல்லது

இவ்வளவு விவரத்தையுங் கேட்டுக்கொண்டு டாக்டருக்கு என் நன்றியைச் செலுத்தினேன். பிறகு ஸ்டேஷனுக்குவந்து வண்டியேறிய விவரத்தை முந்தின கட்டுரையிலேயே விவரித்துள்ளேன்.

வண்டி நகர்ந்ததும் கவனித்தேன். இரண்டு தினங்களுக்கு வேண்டிய உண்டி பலஹாரம் பழங்களும் ஒரு டஜன் இளநீர்களும், 'பையனுல்' வைக்கப்பட்டிருந்தன. வழி நெடுக உண்டதுபோக மிகுதியை தானஞ் செய்துகொண்டே வந்தேன்.

உடல்நலப்பயிற்சி

ஹடயோகி லக்ஷ்மணசாண்டோ

இடம்

உடற் பயிற்சி செய்வோர் உற்ற இடம் ஒன்றை அமைத்துக் கொள்ள வேண்டும். அமைத்துக் கொள்ளும் இடம் நல்ல காற்று, வெளிச்சம் இவைகள் உள்ளதாயிருக்க வேண்டும் புகை எழும் இடமும், தூசி பறக்கும் இடமும், துர்நாற்றம் உண்டாகும் இடமும் அழுக்கு அடைந்த இடமும் ஆரோக்கியக் குறைவையும், ஆபத்தையும் அளிக்கும் திறந்த வெளியில் நின்று பயிற்சி செய்வது சிறந்த முறையாகும். அறைகளிலிருந்து பழகுவதுஅடுத்தபடியானதே பயிற்சி செய்யும் அறைகளுக்கு ஜன்னல்களிருக்க வேண்டும் அந்த ஜன்னல்களும் எதிர் எதிராயிருத்தல் வேண்டும் ஒரு சிறு அறையில் பலர் பயிற்சி செய்வது கூடாது. காற்று நுழையாத கிடங்குகளிலிருந்து அப்யசிப்பவர்கள் ஆரோக்கியக் குறைவையும் ஆபத்தையும் விளைவித்துக் கொள்ளுகிறார்கள்.

நிராயுதபாணியாய் நின்று செய்யும் பயிற்சிகளும், ஆயுதபாணியாய் அமைந்து பழகும் பயிற்சிகளும் பல உள்ளன. ஆயுதங்களைக் கொண்டு அப்யசிப்பவர்கள் உயர்ந்த கூரைகளையுடைய விஸ்தாரமான இடங்களிலிருந்துதான் செய்ய வேண்டும் இல்லாவிட்டால் வெயிட், கர்லா கழி போன்ற ஆயுதங்கள் பயிலும்போது சுவர், கூரை, தூண் முதலியவைகளில் இடித்து எதிர்த்து வந்து விளையாடுபவர்கள்மேல் தாக்கி உபத்திருவத்தை உண்டாக்கும் சில சமயங்களில் உயிருக்கே உலை வைக்கும், வினையை விலை கொடுத்து வாங்கலாமா? அன்றியும் அப்யாசிகளும் அதிகப் பலனை அடைய முடிகிறதில்லை. அப்யாசத்திலும், இயங்குந் திசைகளிலும் ஈடுபடுத்தும் மனத்தைமற்ற இடங்களில் செலுத்துவதால் சரியான பலன் கிட்டுவதில்லை.

காலம்

பகலிற் செய்யும் பயிற்சிகள் பலனை அதிகம் தருகின்றன. பகலில் நாம் நல்ல காற்றை உட்கொண்டு கெட்ட காற்றை வெளிவிடுகிறோம். நாம் வெளிவிடும் கெட்ட காற்றை மரம், செடி, கொடிகள் முதலிய தாவரங்கள் உட்கொண்டு நல்ல காற்றை நமக்குத்தருகின்றன. இரவில் தாவரங்களும் நல்ல காற்றை உட்கொண்டு கெட்டகாற்றையே வெளிவிடுகின்றன அதனால் ஆகாயம் அசுத்தமடைகிறது. தவிர சூர்யனுடைய அஸ்தமனத்தால் போதிய உஷ்ணம் குறைகிறது. கெட்ட கிருமிகளின் ஆட்சிகாலம் அது.

காலை அல்லது மாலை பயிற்சி செய்யப் பக்குவமான நேரங்கள் ஒரு வேளை பயின்றால் போதும் எவ்வித பயிற்சி செய்வோரும் நடைப்பயிற்சி அவசியமென்பதை உணர்ந்துகொண்டு ஒரு வேளை பயிற்சிகளிற் பழகுவதுடன் மற்றொரு வேளை இரண்டு மைல்களுக்குக் குறையாமல் நடப்பது நல்லது.

வயிறு நிறைய உண்டபின்னும், நல்ல பசி, களைப்பு, துக்கம், தூக்கக் குறி உள்ள நேரங்களிலும் பயிற்சி செய்யலாகாது மல ஜலங்களை அடக்கிக்கொண்டு பழகுகிறவர்கள் வியாதியை வருவித்துக் கொள்வார்கள் இது குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டது போலாகும்

பயிற்சியின் தன்மை

ஒவ்வொருவரும் உடல் நிலைக்கு உகந்தவாறு உடற்பயிற்சியை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் ஹிருதய ரோகம், காசம், க்ஷயம் முதலிய நோய்களையுடையவர்கள் டாக்டர்களை அடிக்கடி கலந்துகொண்டு நடைப் பயிற்சி ஆசனங்கள் முதலிய கஷ்டமில்லாத பயிற்சிகளில் பழகுதல் நலம் பலஹீனர்கள் சுலபமாய்ச் செய்யும் பயிற்சிகளைக் கையாண்டு மிதமாய்ச் செய்து மெதுவாய்ப் படிப்படியாய்ப் பலன் பெறவேண்டும்.

பயிற்சியாளர்கள் வெளித்தசை மாத்திரம் கவனித்தால் போதா. ராஜ கருவிகள் எனப்படும் உள் உறுப்புக்களாகிய ஹிருதயம், காற்றுப்பை, கல்லீரல், களையம், இரைப்பை, சிறு குடல், பெருங்குடல் மல மூத்திரப் பைகள் இவைகள் பலப்படும் முறையில் பயிற்சி செய்யவேண்டும். அளவான அப்யாசங்களே அதிக பலனைத் தந்து ஆரோக்கியத்தோடும் ஆயுள் விர்த்தியோடும் வாழவைக்கும்

பயிற்சிகள்

பவனமுக்தாஸனம்

(படுத்துக்கொண்டு செய்வது)

மல்லாந்து படுத்துக்கொண்டு கால்களை விரைப்பாக நீட்டவேண்டும். பிறகு வலது காலை படத்திற் காட்டியபடி மடித்து இருகைகளாலும் கோர்த்துப் பிடித்துக்கொள் அப்படிப் பிடித்துக்கொண்ட காலை வயிற்றில்



படும்படி அழுத்தவேண்டும் இப்படிப் பல தடவைகள் அழுத்தி அழுத்தி எடுக்கவும் (ஒத்தடங்கொடுப்பது போல்) பிறகு நெற்றியை முழங்காலில் மோதி மோதி எடுக்கவும். பிறகு கால்கள் இரண்டையும் முன் போல் விரைப்பாய் நீட்டிவிடவும். இதேமாதிரி மற்றொரு காலை மடித்துக் கொண்டு செய்யவும் கடைசியாக இரு கால்களை ஏக சமயத்தில் மடித்துக்கொண்டு செய்யவும். இதற்கு பவனமுக்தாசனம் என்று பெயர்.

இப்பயிற்சியால் வயிற்றிலுள்ள உறுப்புக்கள் இடுப்பு எலும்புப்பூட்டுகள் முதுகுத் தசைகள், கழுத்து நரம்புகள், முதுகெலும்புப் பூட்டுகள் பலப்படுகின்றன. மலச்சிக்கல் உண்டாகவே உண்டாகாது

யௌவனபவன முக்தாசனம்

(படுத்துச்செய்வது)

மல்லாந்து படுத்துக்கொண்டு இரு கால்களையும் நேர்முகமாக மடித்து இரு முழங்கால்களையும் சேர்த்துப் பிடிக்கவும் தலையைத் தரையிலிருந்து உயர்த்தி முழங்கால்களை மூக்கால் தொடு முதுகின் முள்ளந்தண்டு பூமியில் உருளும்படி முன்னும்பின்னுமாக அசையவும் இப்படி 5 அல்லது 6 தடவைகள் செய்து கால்களை நீட்டிக்கொண்டு படுத்துக்கொள்ளவும்.



கடைசியாக 5 முறைகள் இருகால்களையும்சேர்த்து விரைப்பாக மேல்நோக்கி உயர்த்தித் தாழ்த்தவும்.

இப்பயிற்சியால் சுறுசுறுப்பு உண்டாகிறது முதுகுத்தண்டு ரத்தத்தால் சரியாய் போஷிக்கப்பட்டு பலமடைகிறது.

பத்மாசனம் (உட்கார்ந்து செய்யவும்)

(1) வலது குதிகாலை இடது வயிற்றில் வைக்கவும் (2) இடது குதிகாலை வலது வயிற்றில் வைக்கவும். (3)

இரண்டு முழங்கால்கள் மீதும் இரு கரங்களை வைக்கவும். (4) கட்டைவிரல்காட்டி விரலைக்கொண்டு தொடவும் மற்ற விரல்களைப் படத்தில் காட்டியபடி விரைப்பாக வைக்கவும்.

(5) இரு கண்களாலும் மூக்கின் நுனியை நோக்கவும் கடவுளை நினைத்துக்கொண்டு ஐந்து நிமிஷங்களிருக்கவும். இதன் பலன் அளவு கடந்தது. நிஷ்டைக்குரியது. மனச் சாந்தியைத் தரும் உடல் முழுவதும் இரத்த ஓட்டம் பெருகி நலமுண்டாகும்.



(படுத்துச் செய்யவும்)

(1) குப்புறப்படுத்துக்கொண்டு கால்களை விரைப்பாக நீட்டி கைகளை விலாப்புறம் நெருக்கி வைக்கவும். உள்ளங்கைகளை புறட்டி வைத்து 4-வது படத்திற் காட்டிய ஒவ்வொரு காலாக உயர்த்தித் தாழ்த்தவும் (மெது



வாக) பிறகு இரு கால்களையும் சேர்த்து உயர்த்தி சிறிது நேரம் அப்படியே வைத்திருந்து தாழ்த்தவும். கைகளை வயிற்றிற்கு அருகில் படத்திலே காட்டியபடி வைத்திருக்கவும் இதனால் வயிற்றின் உறுப்புக்களும் முதுகுப் பூட்டும் தோள் பூட்டுகளும் மலக்குடலும் பலப்படும்

Zam-Buk கால்வலி, ரணம், வெடிப்பை

ஜாம்பக் சமனமூட்டி குணமாக்கும்.

வலியையும் வீக்கத்தையும் ஒழிக்கும்.

சருமத்தினுள் புகுந்து வேலை செய்யும் மூலிகை எண்ணெய் நிரம்பிய ஜாம்பக் விரைவில் வலிகளையும், எரிச்சலையும் நிறுத்தி புண்களை குணமாக்கும் ஆணி விழுதல். சருமத் தடிப்பு முதலியவற்றை மிருதுவாக்கி குணப்படுத்தும் மற்றும் சரும நோய்கள், காயங்கள், வெட்டுப் புண், தீப்பட்ட புண் தோலுரிதல். மூலம் முதலிய எல்லாம் ஜாம்பக்கினால் குணமாகும். மிருகக்கொழுப்பு சேராததற்கு உத்தரவாதம்.

ஏஜண்டுகள் : தாதா & கோ, லி. டி. மதராஸ்

ஜாம்பக் - உலகில் மிகச் சிறந்த சருமக் களிம்பு.

[சில்லரை விலைகள்]

(விற்பனை வரி தனியாக செலுத்தவேண்டும்)

சென்னை, ஆகஸ்ட் 21—

அன்றுட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பண்டங்களின் விலைவாசிப் போக்கைக் குடும்பத்திலுள்ளவர்கள் தெரிந்து கொள்வதற்கு உதவியாகச் சென்னை நகரிலுள்ள நிலவரத்தைக் கீழே பிரசுரித்திருக்கிறோம். இவையெல்லாம் அவ்வப்போது மாறுதலுக்குட்படக்கூடியவை. எனவே இதில் கொடுக்கப்பட்டிருப்பதைப் போலவே சில பண்டங்கள் கிடைக்கலாம் அல்லது சற்று ஏறத்தாழவும் சில இடங்களில் விற்கப்படலாம். பொதுவாக விலைகளின் ஓட்டத்தை உணர இது பயன்படும்.

		ரு	அ	பை.
உப்பு	1-படி	0	1	0
துவரம் பருப்பு	1-படி	1	1	0
உளுத்தம் பருப்பு	,,	1	5	0
பயத்தம் பருப்பு	,,	1	4	0
உளுந்து	,,	1	0	0
கடலைப் பருப்பு	,,	—	—	—
எள்ளு	,,	1	8	0
கடலை	1-விசை	0	8	3
கடலை மாவு	,,	—	—	—
கடுகு	,,	2	0	0
வெந்தியம்	,,	2	0	0
மிளகு	,,	18	0	0
மிளகாய்-ராமநாதபுரம்	,,	4	4	0
தனியா	,,	3	6	0
புளி [புதுசு]	,,	1	4	0
சீரகம்	,,	4	0	0
வெல்லம்	,,	1	11	0
நாட்டு சர்க்கரை	,,	1	11	0
அஸ்கா சர்க்கரை	,,	1	5	0
மஞ்சள்	,,	1	14	0
பூசு-மஞ்சள்	,,	1	14	0
குங்குமம்	,,	2	0	0
பாதாம்	,,	4	4	0
சீயக்காய்	,,	1	1	0
சீயக்காய் பொடி	,,	1	10	0
வாஷிங் சோடா	,,	0	10	0
திராக்ஷை	,,	5	12	0
முந்திரிபருப்பு	,,	4	12	0
களிப்பாக்கு	,,	5	8	0
நெய்	,,	8	8	0
நல்லெண்ணெய்	,,	3	6	0
ஜவ்வரிசி	,,	2	10	0
தேங்காய் எண்ணெய்	,,	3	10	0
கடலெண்ணெய் 1-விசை		2	11	0
ரேடியோ எண்ணெய்		3	2	0
விளக்கெண்ணெய் பாட்டில் பெரிசு		1	12	0
ஷை சிறியது		0	9	0
வாசனை விளக்கெண்ணெய் 4 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு		1	5	6
16 ,, ,, பாட்டில் 1-க்கு		8	1	6
காப்பிக்கொட்டை பீபரி 1 விசை		5	9	0
,, 'A' ,, ,,		5	3	0
பார்லி	1-விசை	2	10	0
கரி 1 மூட்டை (56 ப)		4	0	0
'டால்டா வனஸ்பதி 10 ப		12	3	9
ஷை 5 ப		6	5	9
கற்பூரம்	1-பலம்	0	8	0
சாம்பிராணி	1 பலம்	0	6	0
பெருங்காயம்	,,	0	4	0
லவுங்கம்	,,	0	3	6
ஏலக்காய்	,,	0	15	0
எல் ஜி பெருங்காயம் 1 சேர்		2	2	0
தீப்பெட்டி, 1 டஜன்		0	8	6
ஓவல்டின் ½ பவுண்ட்		2	2	0
'ரௌண்டிரீஸ் (R.T.) கொக்கோ ½ ப		1	7	0
ஸன்லைட் சோப் பெரியது		0	5	3
,, சிறியது		0	3	0
ஹமாம் சோப்		0	6	0
லைப்பாய்		0	5	6
டாம்கோ 501 பார்		1	3	0
லக்ஸ்		0	6	0
ரெக்ஸோனா (3½ அவுன்ஸ்)		0	6	6
மார்கோ சோப்பு		0	8	9
777 பார் 1-க்கு		1	4	0
காந்தி டாய்லட் சோப் 1-க்கு		0	6	0
மைசூர் "ஸாண்டல்" சோப்		0	10	0
கேரளா 'ஸாண்டல் சோப்பு		0	7	6
மெடிகேர் டாயிலட் சோப்		0	8	6
காட்ரீஜ் சோப் நெ 1		0	11	0
மேட்டூர் சந்தன ஸோப் 1 கட்டி		0	9	0
ரூப் டாய்லெட் ஸோப்—ஸ்டாண்டர்டு		0	6	0
,, கெஸ்ட் ஸைஸ்		0	2	0
காவேரி ஸுபர் கார்பாலிக் (பெரிது)		0	4	6
,, (சிறியது)		0	2	9
காவேரி வாஷிங் கேக்		0	4	0
காவேரி வாஷிங் க்யூப்		0	3	6
காவேரி பார் ஸோப்		1	3	0
'டாம்கோ ஹேர் ஆயில் (சிறிய பாட்டில்)		1	1	0
ஷை (பெரிய பாட்டில்)		2	12	0
குங்குமப் பூ [1 பாட்டில்]		1	6	0
பச்சை கற்பூரம் 1 விராகனிடை		0	6	0
"பினைல்" பாட்டல்		0	13	0
குடிகூரா பவுடர் 1 டின்		—	—	—
கீம் டூத் பேஸ்ட்		1	0	0
மாக்லீன் பேஸ்ட்		1	0	0
பார்ஹான்ஸ் பேஸ்ட் (பெரியது)		2	12	0
7 ஓ க்ளாக் க்ஷவர ப்ளேட் (10 கொண்ட பாக்கட்)		—	—	—
ஷை (5 கொண்ட பாக்கட்)		—	—	—
கோரா டீ (டஸ்ட்) 1-பவுண்ட்		2	5	6
கோரா டீ ½ பவுண்ட்		0	9	6
கோரா டீ ¼ பவுண்ட்		0	4	9

287. गीतोपयोगिनः सप्त ताळयुक्ताः प्रदर्शिताः ।
अलङ्काराः पुनः पञ्च रागोपयोगिनः स्मृताः ॥

கீதோபயோகிந: ஸப்த
தாளயுக்தா: ப்ரதர்சிதா: |
அலங்காரா: புந: பஞ்ச
ராகோப்யோகிந: ஸ்ம்ருதா: ||

இங்ஙனம் கீதத்திற்கு உபயோகமாயுள்ள ஏழு அலங்காரங்கள் தாளங்களுடன் கூறப்பட்டுள்ளன. மீண்டும் ராகங்களுக்கு உபயோகப்படும் ஐந்துவித அலங்காரங்கள் உள. அவையாவன:—

288. चक्रकारो जवश्चैव शङ्खः पद्मनिभः स्मृतः ।
वारिद श्चेति तेषां हि लक्षणं चापि कथ्यते ॥

சக்ராகாரோ ஜவஸ்சைவ
சங்க: பத்மநிப: ஸ்ம்ருத: |
வாரிதஸ்சைவ தேஷாம் ஹி
லக்ஷணம் சாபி கத்யதே ||

ஐவகை அலங்காரங்கள்

(1) சக்ராகாரம் (2) ஜவம் (3 சங்கம் (4) பத்மநிபம் (5) வாரிதம். இவைகளின் லக்ஷணங்களை முறையே கூறுவோம்.

289. स्वरैरिभि श्चतुर्भिश्च षड्जेनपि त्रिभीरिभिः ।
चक्राकारः स विज्ञेय श्चक्रसादृश्यरूपवान् ॥

ஸ்வரைரிபிஸ் சதுர்பிஸ்ச
ஷட்ஜே நாபித்ரிபீ ரிபி: |
சக்ராகார: ஸ விஞேயஸ்
சக்ர ஸாத்ருச்யரூபவாந் ||

1. சக்ராகாரம்:—மூன்று ரிஷபங்கள், ஒரு ஷட்ஜம், மீண்டும் மூன்று ரிஷபங்கள் இம்முறையைத் தழுவி மற்ற ஸ்வரங்களும் பாடப்படின் அதனை 'சக்ராகாரம்' என்று கூறுவர். இது சக்ரம் போன்று அமைந்திருப்பதால் இதற்கு இப்பெயர் வழங்கலாயிற்று.

(உ—ம்)

ரி ரி ரி ரி	ஸ	ரி ரி ரி
க க க க	ரி	க க க
ம ம ம ம	க	ம ம ம
ப ப ப ப	ம	ப ப ப
த த த த	ப	த த த
நி நி நி நி	த	நி நி நி
ஸ ஸ ஸ ஸ	நி	ஸ ஸ ஸ.

290. क्रमात्सर्वान् स्वरानुक्त्वाऽथान्त्यादेकैकहानतः ।
अलङ्कारो जवो नाम प्रकाशितो हनूमता ॥

க்ரமாத்ஸர்வாந் ஸ்வராநுக்த்வா
அதாந்த்யாதேகைகஹாநத: |
அலங்காரோ ஜவோ நாம
ப்ரகாசிதோ ஹநூமதா ||

2, ஜவம்—முறையே எல்லா ஸ்வரங்களையும் உச்சரித்து. பின்னர் இறுதிஸ்வரத்திலிருந்து ஒவ்வொன்ருக விடுத்து, பாடப்படும் அலங்காரத்தை 'ஜவம்' என்று அநுமான் கூறுகிருர். •

(உ—ம்)

ஸ ரி க ம ப த நி ஸ நி த ப ம க ரி ஸ
ஸ ரி க ம ப த நி த ப ம க ரி ஸ
ஸ ரி க ம ப த ப ம க ரி ஸ
ஸ ரி க ம ப ம க ரி ஸ
ஸ ரி க ம க ரி ஸ
ஸ ரி க ரி ஸ
ஸ ரி ஸ

291. दीर्घान्त्यस्यद्विरावृत्तिरुपान्त्यौ तदधः स्वरौ ।
यत्रेति स्वरसंबन्धः शङ्खो ज्ञेयो मनीषिभिः ॥

தீர்காந்த்யஸ்ய த்விராவிருத்தி

ருபாந்த்யௌ தததஃ ஸ்வரௌ

யத்ரேதி ஸ்வரஸம்பந்த:

சங்கோ ஞேயோ மநீஷிபி:

3. சங்கம்:—முதல் ஸ்வரத்தை தீர்க்கமாக இருதடவை உச்சரித்து. பின்னர் அதனை அடுத்துள்ள இரு ஸ்வரங்களை முறையே ஒவ்வொரு தடவை பிரயோகித்து இவ்வாறே மற்றஸ்வரங்களையும் பாடினுல் அது 'சங்கம்' என்ற அலங்காரமாம்.

(உ—ம்)

ஸா ஸா நித — நீ நீ தப — தா தா பம
பா பா மக — மா மாகரி — கா கா ரி ஸ

292, स-री षड्जत्रयं रिश्च पद्माकारेऽत्र गद्वयम् ।

ஸ-ரீ ஷட்ஜத்ரயம் ரிஸ்ச

பத்மா காரேத்ர கத்வயம் [

4. பத்மாகாரம்:—'ஸரி ஸ்ஸஸ ரிகக' என்ற இம்முறையைப் பின்பற்றி மற்ற ஸ்வரங்களும் பாடப்படின் அது 'பத்மாகார' மென்ற அலங்காரமாகும்.

தமிழ்நாடு ... 600 008
198588

(உ—ம்)

ஸ	ரி	ஸ	ஸ	ஸ	ரி	க	க
ரி	க	ரி	ரி	ரி	க	ம	ம
க	ம	க	க	க	ம	ப	ப
ம	ப	ம	ம	ம	ப	த	த
ப	த	ப	ப	ப	த	நி	நி
த	நி	த	த	த	நி	ஸ	ஸ.

293. आद्यं स्वरं सकृत्प्रोच्य द्विरावृत्त्याच सप्तमम् ।
वारिदः स्यादलङ्कारः क्रमादेकैकहानतः ॥

ஆத்யம் ஸ்வரம் ஸக்ருத் ப்ரோச்ய

த்விராவ்ருத்யாச ஸப்தமம் [

வாரித: ஸ்யாதலங்கார :

க்ரமா தேகைக ஹாநத : ॥

5 வாரிதம்:—முதல் ஸ்வரத்தை ஒரு தடவையும், ஏழாவது ஸ்வரத்தை மூன்று தடவையும் உச்சரித்து, இவ்வாறே மற்ற ஸ்வரங்களையும், முறையே ஒவ்வொருஸ்வரத்தையும், விடுத்து பாடப்படின் அதனை 'வாரிதம்' என்று அலங்காரமாகக் கருதுவர்.

(உ—ம்)

ஸ நி நி நி — ஸ த த த — ஸ ப ப ப — ஸ ம ம ம
ஸ க க க — ஸ ரி ரி ரி — ஸ ஸ ஸ ஸ.

இவ்வாறு ராகங்களுக்கு உபயோகப்படும் ஜவகையலங்காரங்கள் முற்றுப் பெற்றன.

294. इति सर्वेप्यलङ्कारा अष्टषष्टिः प्रकीर्तिताः ।
अलङ्कारैर्विना रागा विस्तारं नाप्नुवन्ति हि ॥

295, एतैः कृत्वा प्रगातॄणां स्वरतालप्रवीणता ।

இதி ஸர்வேப்யலங்காரா

அஷ்டஷஷ்டி : ப்ரகீர்த்திதா : [

அலங்காராத்விநா ராகா

விஸ்தாரம் நாப்நுவந்தி ஹி ॥

ஏதை : க்ருத்வா ப்ரகாத்ருணும்

ஸ்வரதாளப் ரவீணதா |

இவ்வாறு கீழ் கூறப்பட்டுள்ள எல்லாவித அலங்காரங்களும் சேர்ந்து மொத்தம் (68) அறுபத்தெட்டு என்று கூறப்பட்டுளது. அலங்காரங்களின்றி ராகங்கள் விஸ்தாரத்தையடைய முடியாதல்லவா? இத்தகைய அலங்காரங்களுடன் பாடப்படுவதினுலேயே காயகர்களுக்கு ஸ்வரம், தாளம் இவைகளில் நல்ல திறமை ஏற்படுகின்றது ஆகவே அலங்காரங்கள் பாடகர்களுக்கு மிகவும் இன்றியமையாதவையாகும்.